www.tamilarangam.net

இதழ் 116

பெப்.20—மார்ச்—05 1997

விலை ரூபா 10.00

ஸரிநிகர்
'SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**யுத்தமும் அபிவிருத்தியும்!**

எள்ளென்றாற் கூட ஏழாய்ப் பகிர்ந்தளிக்கும்
நல்லதங்காள் வழிவந்த நம்மன்னை — உள்ளதினும்
நாலேதான் என்றாலும் நயமாய்ப் பகிர்ந்தெம்மை
வாழவைக்க வந்தாய் நீ வாழி!

—ஈழமோகம்

## பயங்கரவாதப் ப(ழி)லி!





## ஆயுதப் போராட்டமே சரி! சண்



# ஓட்டமாவடி: ஷெல் ஏவியது யார்?



# கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மாணவர்கள்: தீராத போராட்டம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம் றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2,அலோசாலை,
கொழும்பு - 03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலிவீதி,
இரத்மலானை.

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை- ரூபா 300
வெளிநாடு- U.S. $ 50
(தபாற்செலவுட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
04, ஜெயரட்ண வழி
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 05

தொலைபேசி: 593615
584380
தொலைமடல்: 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்திற்கென அனுப்பப்படும் படைப்புக்கள திருப்பி அனுப்பபப்பட-மாட்டாது.

# யாழ்ப்பாணம் போதல்!

வெளிநாடொன்றிலிருந்து யாழ்ப்பாண்ம் போகும் நோக்கத்துடன் வந்திருந்தார் நண்பர் ஒருவர்.

திருமணமாகி ஒரு மாதகாலத்துள் 'லீவு' முடிந்து வெளிநாடு சென்றிருந்தவர் ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு திரும்பவும் கிடைதத ஒருமாத லீவில் வந்திருந்தார்.

இந்த ஓராண்டுக்குள் நிலைமை தலைகீழாகி விட்டிருந்ததை அவர் ஓரளவு தெரிந்து வைத்திருந்தாலும், இங்கு வந்தபின்தான் அவருக்கு அது எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பது புரிந்தது.

கப்பல் மூலம் ஊர் சென்றால், திரும்பி வருவதற்கு வருடக்கணக்கான காலம் கூட எடுக்கலாம் என்பதால் விமானம் மூலம் போக முடிவு செய்தார்.

தான் தங்கியிருந்த பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையத்தினூடாக, ஊருக்குப் போவதற்கான விண்ணப்பத்தை அவர் கையளித்தார்.

கையளித்து ஒரு வாரங்களின் பின் நிலைமை பற்றி அறிய அங்கு சென்ற அவருக்கு எதிர்பாராத விதமாக நல்ல வரவேற்பு கிடைத்தது!

யாழ்ப்பாணம் போகவா? அவசரமா என்ற பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் கரிசனைமிகுந்த விசாரணை அவருக்கு தான் 'ஸ்ரீலங்காவில் தான் இருக்கிறேனா என்ற சந்தேகத்தையே கிளப்பிவிட்டது என்றால் பாருங்களேன்.

அவரும் தனது சிக்கல்களைச் சொன்னார்.

நீண்ட நாட்களின் பின் மனைவியை சந்திக்க இருப்பது, வயதான தாயார், திருமணம் செய்யவிருக்கும் சகோதரி ஆகியோரின் அலுவல்களை கவனிப்பது குடியிருந்த வீடு யுத்தத்தில் சேதமாகிப்போனதால் அவர்கள் இடம்பெயர்ந்து இருப்பதால் அதனைப்பார்த்து அவர்களுக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யவேண்டி இருப்பது என்று அவரது கடமைகளின் பட்டியலை விளக்கி தன் அவசரத்தை புரியவைத்தார்.

எல்லாவற்றையும் அமைதியாகவும் அனுதாபத்துடனும் கேட்டுக்கொண்ட ஒரு பொலிஸ் அதிகாரி இந்த யுத்தத்தின் காரணமாக மனிதர்கள் படுகின்ற அவஸ்தைகளையிட்டு விமர்சனம் செய்தார். தாங்கள் தங்கள் கடமைகளை செய்தாலும், பிறர் அப்படியில்லை என்று அனுதாபப்பட்டார்.

நண்பருக்கு போகிற அவசரம்.

என்ன செய்யலாம் என்று கேட்டார், அந்தப் பொலிஸ் அதிகாரியிடம்,

'உங்கள் விண்ணப்பத்தை நாங்கள் அனுப்பினாலும், பாதுகாப்பு அமைச்சிலுள்ள அதிகாரிகள் அதை யாழ்ப்பாணம் அனுப்பி நீங்கள் கொடுத்த தகவல்கள் சரியோ என்று பார்த்துவிட்டுத்தான் உங்களுக்கு 'கிளியரன்ஸ்' தருவார்கள். அதுவும் அது எப்ப நடக்கும் என்று நிச்சயமில்லை. விண்ணப்பங்கள் அங்கே கட்டுக்கட்டாய் அப்பிடியே இருக்குது''

''என்ன நடக்கப்போகுது அப்ப என்னுடைய விண்ணப்பத்திற்கு? எனக்கு ஒரு மாத லீவு தான் இருக்கிறது'' என்று சொன்னார் நண்பர் அழாக்குறையாக.

அந்தப் பொலிஸ் அதிகாரிக்கும் கவலை வந்து விட்டது அவரது முகத்தில் தெரிந்தது.

ஒன்று செய்யலாம். எனக்கு தெரிந்த ஒரு இன்ஸ்பெக்டர் பாதுகாப்பு அமைச்சில் வேலை செய்கிறார். ஆனால் ஆள் கொஞ்சம் ஒரு மாதிரி. ஏதும் பார்த்துக்கீத்து கவனிக்காவிட்டால் 'பைல்' அசையாது'

பொலிஸ் அதிகாரி முடிக்க முதலே நண்பர் விடயத்துக்கு நேரடியாகவே வந்து விட்டார்.

''எவ்வளவு குடுக்கோணும்?''

''ஒரு ஆயிரமாவது கொடுக்கவேணும்''

''நண்பர் அதிகம் யோசிக்கவில்லை. ஆபத்துக்கு பாவமில்லை என்று நினைத்துக்கொண்டு பணத்தை நீட்டினார்.''

''இப்படியே தாறது? யாரும் பார்த்தால் ஏதோ நான் லஞ்சம் வாங்கிறமாதிரி எல்லோ மற்றவங்கள் நினைக்கப்போகிறார்கள்... உங்களுக்கு உதவி செய்யப் போய் கடைசியில நான் உள்ளுக்கே போகவேண்டியதுதான்''

நண்பர் அவரிம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

பணம் கைமாறியது அந்த அதிகாரி நண்பரைத் தேற்றினார். ''பரவாயில்லை உங்களுக்கும் பழக்கமில்லாத வேலைதானே...'' சரி... சரி... நான் உடனே அவரோட போனில கதைக்கிறான். எல்லாம் சரி...''

அந்தப் பொலிஸ் அதிகாரி, நண்பரது விண்ணப்பத்திற்கான இலக்கத்தையும், பாதுகாப்பு அமைச்சில் அதற்குப் பொறுப்பான அதிகாரியின் தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்தார். ''இரண்டு நாட்களுக்குப் பிறகு ரெலிபோன் பண்ணிக் கதையுங்கோ எல்லாம் சரிவரும்...''

நண்பர் அவ்வளவு அவசரப்படவில்லை. சரியாக ஒருவாரத்தின் பின் போன் பண்ணினார்.

'ஹலோ.. நான் என்னுடைய விண்ணப்பம் போன 10 ம்திகதி அனுப்பினது .. உங்களோட கதைக்கச் சொல்லி.. சொன்னார்''

''எந்தப் பொலிஸ் நிலையம்?''

நண்பர் பதில் சொன்னார்.

''அங்கையிருந்து ஒரு அப்பிளிகேசனும் இன்னும் வரவில்லை. அங்கை போய் கதையும்''

''இல்லை நான்...''

போன் வைக்கப்பட்டு விட்டது.

நண்பர் பொலிஸ் நிலையத்தை நோக்கிப் போனார்.

அந்த அதிகாரி அன்று இல்லை.

கவலையுடன் திரும்பினார். ஏற்கெனவே 15 நாட்களாகி விட்டது. 'ஒரு 4 நாளாவது யாழ்ப்பாணத்தில் நின்றால் போதும்... அது கூட கிடைக்குமோ'' என்ற கவலை அவருக்கு.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் அந்த விண்ணப்பத்தை 'ஓ.கே' பண்ணி 'லயன் எயார்' நிறுவனத்திற்கு அனுப்பினால் தான் அங்கு யாழ்ப்பாணம் போவதற்கு டிக்கட் கிடைக்கும். அதற்கும் கூட பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளது அனுமதி கிடைத்த பின்னும் டிக்கட் பெறுவதற்காக நீண்ட நாள் காத்திருக்க வேண்டும். அதற்கு எத்தனை நாள் செல்லுமோ என்னவோ....

பொலிஸ் நிலையத்தை விட்டு தெருவில் இறங்கியவர் எதிர்பாராத விதமாக அவரது நண்பர் ஒருவரைச் சந்தித்தார்.

''என்னவிசயம். யாழ்ப்பாணம் போகவோ?'' - கேட்டார் அந்த நண்பர்.

''ஓம் நீர்...?''

''நான் அந்த ஐடியாவை விட்டிட்டன்'' நாளைக்கு பின்னேரம் 'பிளைற்'

''எங்கே?''

''திரும்ப சவூதிக்குத்தான். லிவு முடிஞ்சு 10 நாள் ஆகியிட்டுது. பொஸ் போன் பண்ணி கத்துறான். வாறதெண்டால் உடனே வா அல்லது வரவேண்டாம் எண்டு. நானும் பார்த்தன், நிண்டு ஒரு பிரயோசனமும் இல்லை. நிண்ட ஒரு மாதத்தில் இரண்டு தரம் பொலிஸிலை பிடிப்பட்டும் போனன்.. திரும்ப அங்கை போவம்.. வீட்டுக்காரர் கொழும்புக்கு வரட்டும் வந்ததுக்கு பிறகு திரும்பி வருவம்.....''

அவர் சொல்லச் சொல்ல, நம் நண்பருக்கு மண்டை விறைக்கத் தொடங்கியது.

''என்ன யோசிக்கிறீர் எப்ப அப்பிளிகேசன் குடுத்தனீர்?'' என்று கேட்டார் மற்றவர்.

''15 நாள்''

''எவ்வளவு குடுத்தனீர்''

''என்ன?''

''எவ்வளவு காசு குடுத்தனீர் எண்டு கேக்கிறன்''

''ஆயிரம் ரூபா''

''நீர் பரவாயில்லை. நான் மூண்டு தடவை மொத்தம் மூவாயிரம் ரூபா அழுதிட்டன்.... உவங்கள் உங்கை ஒண்டும் செய்யிறேல்லை. காசு குடுத்தால் அவன் அனுப்பாமல் கிழிச்செறிஞ்சு போட்டு இருக்க மாட்டான் எண்டு ஒரு நம்பிக்கை அவ்வளவுதான்... அது வழமையான முறையிலை போய்வரும் அதிர்ஷ்டம் இருந்தால் கிடைக்கும். இல்லாட்டி அவ்வளவுதான்... எத்தினை நாள் லீவிலை வந்தனீர்?''

'ஒரு மாதம்''

''சரி அப்ப உம்மடை ரிக்கற்றை ஓகே பண்ணிற அலுவலைப் பார்க்கிறது நல்லது''

நமது நண்பருக்கு எரிச்சல் கோபம் கவலை எல்லாம் கலந்த ஒரு உணர்வு.

ஆனாலும் அசட்டுத் தனமாக சிரித்து வைத்தார்.

''கவலைப்படாதேயும்.. நடக்கிறது நடக்கும் தானே. வாரும் ஒரு ரீ குடிப்பம்...''

○ ○ ○

# அழிவும் அபிவிருத்தியும்!

காலக்கெடு விதிப்பதில் சந்திரிகா அம்மையாருக்கு நிகர் அவரே தான்.

ஒரு காலக்கெடு விதித்து அந்தக் காலக்கெடுவுக்குள் ஒரு குறிப்பிட்ட விடயத்தை முடித்து விடுவதாக அல்லது பெற்று விடுவதாக அவர் அடிக்கடி கூறுவார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்தக் காலக் கெடுக்களோ வாக்குறுதிகளோ ஒரு போதும் நடைமுறைக்கு வருவதில்லை.

ஜனாதிபதி முறைமையை ஒழிக்க காலக்கெடு விதித்தார். அது இன்று வரை வெறும் வாக்குறுதியளவிலேயே நின்று கொண்டிருக்கிறது.

அரசியலமைப்பு சீர்திருத்தம் பாராளுமன்ற ஜனநாயக மீட்பு சமாதானம் என்றெல்லாம் அவர் வாக்குறுதியளித்து விதித்த காலக்கெடுக்கள் அனந்தம்.

ஆனால் எதுவும் இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. ஆனாலும் அவர் சளைக்காமல் காலக்கெடு விதித்துக் கொண்டே இருக்கிறார்.

ஒரு விடயத்தைச் செய்வதாக சொல்லும் போதும் சரி அதை செய்வதற்கான ஒரு காலக்கெடுவை விதிக்கும் போதும் சரி அவர் அப்படி ஒன்றை செய்ய வேண்டும் என்ற ஒரு திட்டத்துடன் சொல்வதில்லை. ஏதோ வாயில் வந்ததைச் சொல்லி விடுகிறார். அவ்வளவு தான்.

ஆனால், ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு இம்முறை அவர் தெளிவான சிந்தனையுடன் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். களுத்துறையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

''இன்னும் நான்கு ஆண்டுகள் நாம் ஆட்சி நடத்தலாம்''

ஆம், இன்னும் நான்கு ஆண்டுகட்கு மேல் தாம் பதவியில் இருப்பதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதைத் தெளிவான சிந்தனையுடன் புரிந்து கொண்டு கூறியிருக்கிறார் அவர்.

அம்மையாரின் வாக்குறுதிகளில் நடைமுறைக்கு வரப்போகிற ஒரேஒரு வாக்குறுதியாக எஞ்சப் போகிற வாக்குறுதி இது.

கூடவே அவர் இன்னும் ஒரு விடயத்தையும் அக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார். ஆம், இந்த நாலான்டு காலத்துள் முதலிரண்டு ஆண்டுகளும் யுத்தத்தை நடத்தவும் மற்றைய இரு ஆண்டுகளையும் அபிவிருத்திக்காகவும் அவர் பயன்படுத்தப் போகிறாராம்.

என்னே பாரபட்சம் இல்லாத ஒதுக்கீடு. யுத்தத்திற்கு இரண்டு, அபிவிருத்திக்கு இரண்டு!

ஆனால் இந்த இடத்தில் ஒரு சந்தேகம். முதல் வசனத்தைப் பேசும் போது இருந்த தெளிவு திடீரென அவரிடமிருந்து விடைபெற்று விடுவது ஏனோ தெரியவில்லை. பழைய அதே மனம் போன போக்கில் பேசும் போக்கு வந்துவிடுகிறது.

இல்லா விட்டால் நாலு வருடங்களுக்கு மேல் தாம் ஆட்சியிலிருக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்ட ஜனாதிபதிக்கு யுத்தத்தை இரண்டாண்டுகளுக்குள் முடித்துவிடலாம் என்று தோன்றியிருக்க வாய்ப்பில்லை.

இரண்டு வருடங்கள் யுத்தம் செய்தால் போதும் என்று அவர் நினைப்பதில் ஞாயம் உண்டு. ஆனால் பாதுகாப்பு அமைச்சர் 1997 லேயே யுத்தம் முடிந்து விடும் என்று கூறியிருந்தாரே? ஒருவேளை அதற்குப் பிறகு யுத்தத்தை ஜனாதிபதி தானே முன்னினிறு நடத்தப் போகிறாரோ என்னவோ?

அதுசரி இரண்டு வருடத்தில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது எப்படி? அப்படித்தான் முடிவுக்குக் கொண்டு வருவதாக இருந்தாலும் அது ஜனாதிபதி மட்டும் நினைத்து செய்யக்கூடிய காரியம் தானா?

அதாவது ஜனாதிபதி சொல்வதைப் பார்த்தால் அவர் நினைத்தவுடன் யுத்தத்தை நிறுத்திவிட்டு அபிவிருத்தியை தொடங்கி விடலாம் என்று தோன்றுகிறது.

அப்படியானால் ஏன் இப்பொழுதே யுத்தத்தை நிறுத்திவிடக் கூடாது?

ஒருவேளை வடக்கு கிழக்கு முழுவதையும் இரண்டு வருடத்திற்குள் அழித்து விடலாம் என்று அவர் நம்புகிறாரோ என்னவோ? அவர் அப்படி நம்பினால் அதற்குப் பிறகு இரண்டாண்டுகளுக்கு அபிவிருத்தி என்று அவர் சொல்வதும் சரியானது தான்.

அழிவு. பிறகு அபிவிருத்தி!

# பலியெடுக்கத் திட்டம்!


உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் காலத்தில் அரசினதும், எதிர்க்கட்சியினதும் பிரபல அரசியல்வாதிகள் சிலர் பயங்கரவாதிகளின் படுகொலைக்கு ஆளாகும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாக அரசின் புலனாய்வுச் சேவை தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அது அவ்வாறு நடப்பதற்கு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளும், அமைப்பு நடவடிக்கைகளுக்காக இவ்வரசியல்வாதிகள் ஈடுபடுவதும் வாய்ப்புக்களை அதிகமாக்கியுள்ளதாகவும், இப்போதே அது தொடர்பாக அபாய எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வுச்சேவையும், இராணுவ உளவுச்சேவையும் தெரிவித்துள்ளன. இப்போது பயங்கரவாதிகளின் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள ஜனாதிபதி, பிரதிப்பாதுகாப்புப் அமைச்சர், வெளிநாட்டமைச்சர், நீதியமைச்சர் ஆகிய அரசின் அரசியல்வாதிகளையும் இதற்குப் புறம்பாக எதிர்கட்சி அரசியல்வாதிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தற்கொலைப் பயங்கரவாதிகள் மூலமாகவோ அல்லது வாகனக்குண்டுகள் மூலமாகவோ பலியெடுக்க அவர்கள் திட்டமிட்டிருப்பதாக அத்தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(யுக்திய 19970216)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஓட்டமாவடி: ஷெல் அடித்தவர் யார்?

அருப்பன்

பெப்.09 ரமழான் பண்டிகைத் தினம் ஓட்டமாவடி மக்களுக்கு கரிநாளாக அமைந்து விட்டது- யாரும் எதிர்பார்க்காதபடிக்கு. துளிர்த்து வருகிற தமிழ்-முஸ்லிம் உறவை கிள்ளியெறிய வழி கோலுமாப் போல் அமைந்து விட்டது அன்று நடந்த சம்பவம்.

அன்று காலை மாவடிச் சேனையைச் சேர்ந்த ஊர்காவற்படை வீரர் கலந்தர் லெப்பை ஜுனைட் (20) தனது கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது அவரைப் பின் தொடர்ந்துவந்த மூன்றுபுலிகள் அவரது வீட்டுவாசலில் வைத்து அவரை சுட்டுக் கொன்றுவிட்டு அவரது ஆயுதத்தையும் தூக்கிக் கொண்டு சென்றுள்ளனர்.

புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலைச் சம்பவம் தொடர்ந்து பல உயிர்கள் பலியெடுக்கப்படக் காரணமாயிற்று. பெருநாள் தினத்தன்று குடும்பத்தினர் முன்னிலையில் அவரைச் சுட்டுக்கொன்றது முஸ்லிம் தீவிரவாதத் தரப்பினரை உசுப்பி விட்டிருக்கிறது. பதிலுக்கு தமிழர்கள் மீதும் அவர்களுடைய கடைகள், உடமைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஓட்டமாவடியைச் சேர்ந்த தமிழர் ஒருவரின் சலூன் தீக்கிரையாக்கப் பட்டிருக்கிறது. பெற்றோல் நிலையச் சந்தியில் வைத்து மீன் வியாபாரம் செய்ய வந்த மூன்று தமிழர்கள் தீமூட்டி எரிக்கப்பட்டார்கள். வேறுபலர் வெட்டுக் காயங்களுக்கும் சூட்டுக் காயங்களுக்கும் உள்ளானார்கள். ஏறத்தாழ 10 சைக்கிள்களும் அதில் போட்டு எரிக்கப்பட்டுள்ளன என்கிறார் பின்னர் அப்பகுதியை பார்வையிட்ட ஒருவர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தம்பிராசா ரவிச்சந்திரன் (32) என அடையாளம்காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது முதுகில் மூன்று கத்திக்குத்துக்குள்ளாகி மட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கும் கந்தசாமி குமாரசுவாமி (46) இப்படிச் சொல்லுகிறார். "வாழைச் சேனையிலிருந்து இரண்டு மூடை மாவுடன் ஸைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது மின்சார நிலையச் சந்தியில் வைத்து பல இளைஞர்கள் என்னைத்தாக்கினார்கள். அவர்களுள் ஒரு முஸ்லிம் ஊர்காவற்படை வீரரும் இருந்தார். எனது முதுகில் கத்தியால் குத்தினர். கீழே விழுந்த என்னை சற்று நேரத்தில் அங்கு வந்த காகித ஆலை இராணுவத்தினர் வாகனத்தில் ஏற்றிச் சென்று வாழைச்சேனை வைத்திய சாலையில் அனுமதித்தனர்."

வாழைச்சேனை சந்தியில் கடை வைத்திருக்கும் கந்தசாமி சிவநேசன் (40) வியாபாரம் செய்து கொண்டிருந்த போது சிவில் உடையில் வந்தோரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போது மயங்கியதாக தெரிவிக்கிறார். ஓட்டமாவடியில் மீன் வியாபாரம் செய்துவிட்டு திரும்பிய கணபதி சண்முகம்(25) தாக்கப்பட்டு கட்டியிழுக் கப்பட்டிருக்கிறார். இவர்கள் தவிர மேகநாதன் (25) வருணகுலசிங்கம் (36), சத்தியசீலன் (25), சிவராசா (48) ஆகியோரும் சூட்டுக்காயங்களுக்கும், வெட்டுக் காயங்களுக்கும் இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

தீமூட்டி எரிக்கப்பட்ட தமிழர்களில் ஒருவர் கறுவாக்கேணியைச் சேர்ந்தவர். தமது கிராமத்தவர் கொல்லப் பட்டதற்குப் பழி வாங்குவதற்காக அவர்களும் கையில் வாளைத் தூக்கியிருக்கிறார்கள். விளைவுமாலை 5 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து வந்த ஒரு பவுசரை வழிமறித்து அதில் வந்த நான்கு முஸ்லிம்களை வெட்டியிருக்கிறார்கள். மூவர் கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். கொல்லப்பட்டவர்களுள் ஒருவர் காவத்தைமுனையைச் சேர்ந்த அகமத் உசானார் ஜபார்தீன் (24) என அடையாளம்காணப்பட்டுள்ளார்.

மோதல் வலுவடைந்ததைத் தொடர்ந்து இருபகுதி எல்லைப்புறகிராம மக்களும் தத்தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

10ம் திகதி காலை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் ஐ.தே.க . பா.உ அலிசாகிர் மௌலானா உட்பட பலர் ஓட்டமாவடிக்குச் சென்று இரு இனங்களுக்கிடையிலும் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளிலீடுபட்டார்கள்.

எனினும் பத்தாம் திகதி இரவு 9.45 மணியளவில் யாரும் எதிர்பார்க்காதபடி ஓட்டமாவடியை நோக்கி ஏவப்பட்ட 4 ஷெல்கள் மீளவும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளன. வாழைச்சேனை காகித ஆலைக்கு தெற்கேயுள்ள தாராவெளி என்ற இடத்திலிருந்தே இவை ஏவப்பட்டதாக சொல்லப்படுகிறது. இச்சம்பவத்தில் ஓட்டமாவடியைச் சேர்ந்த இரு முஸ்லிம்கள் கொல்லப் பட்டனர். 6 பேர் காயமடைந்தனர். இதே போல் பெப்ரவரி 11ம் திகதி இரவு 11 மணியளவில் பேத்தாழை கிராமம் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார். பல வீடுகள் சேதமாகின. மீளவும் பெப்ரவரி 14ம் திகதி இரவு ஒன்பது மணியளவில் ஓட்டமாவடியை நோக்கி 6 குண்டுகள் ஏவப்பட்டன. இச்சம்பவத்தில் 13 முஸ்லிம்கள் காயமடைந்திருக்கிறார்கள் .-- காயமடைந்தவர்கள்: ரமீஸ் (23), மஹ்ரூப்(30), சியா (7), மீரா சாகீப் (30), அலியார் (50), கலந்தர் (17), கபீர் (16), பாத்திமா (38), ஆயிஸா உம்மா (26)-- பெப்ரவரி 15ம் திகதி காலை வாழைச்சேனை சந்தையில் கிரனைட் வீசப்பட்டிருக்கிறது யாறூக்(23)கும் வேறு நான்கு தமிழர்களும் காயமடைந்துள்ளனர். இரவு 10 மணியளவில் பிறைத்துறைச் சேனை மீது குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

ஏறத்தாழ ஒரு வாரத்துக்கு மேலாக நிலவும் பதட்டநிலையும் மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் தாக்குவதற்கும் காரணம் என்ன என்று கேட்டபோது "புலிகள் முஸ்லிம் ஊர்காவல் படையினரையும் முஸ்லிம் பொலிஸாரையும் கொன்றிருக்கிறார்கள். கல்முனை பொலிஸ் நிலையத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸாரைப் புலிகள் கொன்றிருக்கிறார்கள். அப்போதெல்லாம் ஓட்டமாவடி மக்கள் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை. பெருநாள் தினத்தன்று வீடு புகுந்து சுட்டுக் கொன்றது தான் அவர்களை உசுப்பி விட்டது. பெருநாளுக்கு முன்னரோ பின்னரோ அவ் ஊர்காவலர் கொல்லப் பட்டிருந்தால், இவ்வனர்த்தம் நிகழ்ந்திருக்காது" என்கிறார் அவர்.

"எது எவ்வாறிருப்பினும் புலிகளின் படுகொலைக்கு பதிலடியாக சில முஸ்லிம் தீயசக்திகள் அப்பாவித் தமிழர் மூவரை கொன்று எரித்ததானது வரலாற்றில் ஓட்டமாவடி மக்களுக்கு அழியாத தலைகுனிவை ஏற்படுத்தி விட்டது. ஒரு சிலருடைய காட்டு மிராண்டித்தனமான செயலால் தமிழ்-முஸ்லிம் உறவு சிக்கலுக்குள்ளாகியுள்ளது" என்கிறார் ஓட்ட மாவடியைச் சேர்ந்த எஸ்.எல்.எம்.ஹனீபா.

"தமிழர்களை துவேஷம் கொண்ட முஸ்லிம் விஷமிகள் விரட்டி வந்தபோது பொலிஸ் நிலையம் கூப்பிடு தூரத்தில் தான் இருந்தது. மின்சார சபைச் சந்திக்கும் பொலிஸ் நிலையத்துக்கு மிடையில் கூப்பிடுதூரம்தான் இருக்கிறது. வெறி கொண்ட கூட்டத்தின் கூக்குரல் பொலிஸாருக்கு கேட்கவில்லையா? அல்லது அத்தமிழர்களது அவலக்குரல் தானும் கேட்கவில்லையா?" என்று கேட்கிறார் ஓட்டமாவடி அறபாத். "பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுத்திருப்பின் அப்பாவித் தமிழர்களின் உயிரையாவது காப்பாற்றியிருக்கலாம்" என்றும் கூறுகிறார் அவர். இவை ஒரு புறமிருக்க பெப்ரவரி 10ம் திகதியிரவும் 14ம் திகதியிரவும் ஓட்டமாவடியை இலக்கு வைத்து ஷெல்கள் ஏவப்பட்டுள்ளன. இவை வாழைச்சேனை காகித ஆலைக்கு தென் புறத்திலிருந்தே ஏவப்பட்டிருக்கின்றன. புலிகள் தான் இதனை ஏவியிருக்க வேண்டுமென்பது பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான புலிகளின் வன்மம் தான் இதற்குக் காரணமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

காகித ஆலைக்குப் பின்புறம் புலிகள் ஊடாடித்திரிகிறார்கள். கூடவே இரண்டாவது முறை ஷெல் ஏவப்படுவதற்கு முன்பாக ஓட்டமாவடி மக்களை பாதுகாப்பாக இருக்கும்படி படையினர் எச்சரித்துள்ளதுடன் தாம் புலிகளின் வானொலித்தொடர்பை இடைமறித்துக் கேட்டதில் அன்றிரவு ஓட்டமாவடியை நோக்கி புலிகள் ஷெல் வீச இருப்பதாக அறிந்து கொண்டிருப்ப தாகவும் தெரிவித்துள் ளனர். இதனால் எந்தநேரமும் ஷெல் வந்து விழலாம் என்ற அச்சத்துடனேயே அவர்கள் இருந்திருக்கிறார்கள். படையினர் கூறியபடியே இரவு 9 மணியளவில் ஷெல் ஏவப்பட்டிருக்கிறது. ஆக இது புலிகளின் வேலையே என்பது உறுதியாகிறது என்று அங்குள்ளவர்கள் கருதுகிறார்கள்.

இதை மறுப்போரும் அங்குள்ளனர். பெப்ரவரி 10ம் திகதி ஓட்டமாவடி மீது ஷெல் வீசப்பட்டிருக்கிறது. மறுநாள் 11ம் திகதி தமிழ் பிரதேசமான பேத்தாழை மீதும் ஷெல் வீசப்பட்டிருக்கிறது. இதில் ஒருவர் கொல்லப்பட இன்னொருவர் காயமடைந்துள்ளார். புலிகள் தமிழ் பகுதிகள் மீது ஷெல் ஏவவேண்டிய அவசியமெதுவுமில்லையே. தவிரவும் படையினர் வானொலித் தொடர்பினை இடைமறித்துக் கேட்டார்கள் என்பது நகைப்பிற்கிடமானது. அவர்களது முகாம்கள் தொடர்ச்சியாக தாக்கப் பட்டு வருகின்றன. தமது முகாம் தாக்கப்படப் போகின்ற செய்தியை ஒருபோதும் ஒட்டுக்கேட்டு காப்பாற்ற முடியாத படையினர் எவ்வாறு ஓட்டமாவடி மீது ஷெல் ஏவப்பட விருந்ததை மட்டும் ஒட்டுக் கேட்க முடிந்தது என்பது புரியவில்லை என்கிறார்கள் மறுப்பவர்கள். ஆக இது படையினரின் வேலையாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தையும் அவர்கள் கிளப்புகிறார்கள். காகித ஆலைக்குப் பின்புறமாக படையினரின் முகாம் ஒன்று இருப்பதாகவும் அங்கிருந்தே அவர்கள் படுவான் கரையை நோக்கி ஷெல் ஏவுவதாகவும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். கிழக்கு மாகாண ஐ.தே.க. பா.உ அலிசாகிர் மௌலானா இப்படிச் சொல்கிறார்: "தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமைக்காக புலிகள் உள்ளிட்ட சகல தரப்பினரும் நேசக்கரங்களை வலுப்படுத்தியுள்ள இன்றைய காலகட்டத்தில் அதனைச் சகித்துக்கொள்ள முடியாத சில சக்திகள் தான் இக்கலவரத்தைத் தூண்டி விட்டுள்ளார்கள்... பாதுகாப்பு பிரகடனப்படுத்தப்பட்டு கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் தான் அப்பாவி தமிழ்-முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதிலிருந்து புரிந்து கொள்வது யாதென்றால் பாதுகாப்பு தரப்பு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறிவிட்டது என்பதே" என்று குற்றஞ்சாட்டுகிறார் அலிசாகிர் மௌலானா.

இரண்டாவது ஓட்டமாவடியை நோக்கி ஏவப்பட்ட ஷெல் அலிசாகிர் மௌலானா தங்கியிருந்த வீட்டிலும் விழுந்தது. இது தொடர்பாக அவர் காகித ஆலை முகாம் பொறுப்பதிகாரி கேணல் சில்வாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தமது முகாமிலிருந்து அவ்வாறு ஷெல் எதுவும் ஏவப்படவில்லையென அவர் தெரிவித்தார். இதேபோல செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கிழக்குப் பிராந்திய புலிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி தாம் ஷெல் ஏவுவதில்லை என்று அவர்களும் மறுத்துவிட்டார்கள். இவையெல்லாவற்றிற்குமப்பால் ஊர்காவற்படை இன்று அரசின் படைகளுள் ஒன்றாக மாறியிருந்தாலும் அதன் தோற்றம் தமிழ்ப் போராளிக் குழுக்களிடமிருந்து முஸ்லிம்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் உருவான ஒன்றாகும். அதாவது அதன் தோற்றத்துக்கு காரணம் தமிழ் இயக்கங்களே என்பதையும் கவனத்திற் கொள்ளாது இருப்பது சாத்தியமில்லை அதே போல், முஸ்லிம்கள் தரப்பில் கூறப்பட்டது போல் "பெருநாள் அன்றுகூட நாம் சந்தோஷமாக இருப்பதை விரும்பாத புலிகள் தங்களது நிர்வாகத்தின் கீழ் நாங்கள் சந்தோஷமாக வாழ்வதை எப்படி அனுமதிக்கப் போகிறார்கள்" என்று எழுகின்ற சந்தேகத்தையும் புறங்கையால் தட்டிக்கழித்தல் சாத்தியமில்லை.

முஸ்லிம்கள் தொடர்பாக புலிகள் தமது அரசியலுக்கு அப்பால் நுண் உணர்திறன் உடையவர்களாக இருப்பதும் அதை மேம்படுத்தும் விதத்தில் தம் நடவடிக்கைகளை அமைத்துக்கொள்வதும் மட்டும்தான் புலிகள் தமிழ் முஸ்லிம் உறவுகளைப் பற்றி இதயசுத்தியாக இருக்கின்றார்கள் என்பதை நம்பவைக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்பு பல்கலைக்கழகம்:
# தீராத போராட்டம்!



கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மாணவர்களின் உண்ணா விரதப் போராட்டமும், சத்தியாக்கிரகமும், மறியல் போராட்டமும் கடந்த 20 நாட்களாக நடைபெற்று வருகின்றது.

கொழும்பு பல்கலைக்கழக சட்ட வளாகத்தின் முன்வெளியிலே, சிவப்பு நிறத்தினால் அலங்கரிக்கப்பட்ட, வடிவமைக்கப்பட்ட மேடையிலே நாளொன்றுக்கு 5 பேர் வீதம் சுழற்சிமுறையில் உண்ணா நோன்பினை மேற்கொண்டு வருகின்றனர். இது தவிர ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களும் இடம்பெற்று வருகின்றது.

ஆனால் இம்மாணவர்களின் உணர்வுபூர்வமான இப்போராட்டத்தினை அரசும், ஆட்சியாளர்களும் கண்டு கொள்ளாமலும், கரிசனை செய்யாமலும், அலட்டிக்கொள்ளாமலும் இருப்பது இவ்வரசாங்கத்தின் பொடுபோக்குத்தனத்தை எடுத்தியம்புகிறது. பல்கலைக்கழக மாணவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது போனதன் விளைவால் ஏற்பட்ட விளைவுகள் இலகுவில் மறந்துவிட முடியாதவை. அண்மையில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், இணைந்த பல்கலைக்கழக மாணவர்கள் தம்மோடு இணைவது தொடர்பாய் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. மாறாக பொலிஸார் குண்டாந்தடிப்பிரயோகம் செய்தனர். இரண்டு மாதங்கள் பல்கலைக்கழகம் இழுத்து மூடப்பட்டது.

ஆனால் தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு கைக்கொண்ட அடாவடித்தனம், அடக்கு முறை என்பன இங்கு செயற்படுத்த முடியாது. திருப்தியான கொள்கைகளோடும் தீர்மானமான முடிவுகளோடும் தான் மாணவர்கள் இப்போராட்டத்தை நடாத்துகின்றனர். ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கோரிக்கைகள் இவர்களினால் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

சட்டபீடமாணவர்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளை விளங்கிக்கொள்வது பலருக்கு சங்கடமாகவே இருக்கின்றது. அத்தோடு 'சட்டமானி' (LLB) , சட்டத்தரணி (Attorney at Law) என்ற இரண்டு பதங்களிலும் பலர் தெளிவற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவ்விரண்டு விடயங்களில் தெளிவு ஏற்படுமாய் இருந்தால், நிதானமாக சட்டபீட மாணவர்களின் கோரிக்கைகளை விளங்குவது சுலபமாகும்.

இலங்கையின் சட்டக்கல்வியானது 4 நிறுவனங்களினால் வழங்கப்படுகிறது அவையாவன. கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் (Open Univiersity), இலங்கை சட்டக்கல்லூரி, அத்தோடு இலண்டன் பல்கலைக்கழகம் வெளிவாரியாக சட்டப்பட்டத்தை (Externel Law Degree) கொழும்பில் உள்ள Royal Institute மூலமாய் வழங்குகிறது. இலங்கையில் வசிக்கின்ற எந்தவொரு மாணவனும் சட்டக்கல்வியை இந்நான்கு நிறுவனத்தில் ஏதாவது ஒன்றின் மூலமாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்திற்கான அனுமதியை உயர்தரப்பரீட்சையில் குறித்துரைக்கப்பட்ட 4 பாடங்களில் கூடிய புள்ளிகளை பெறுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். திறந்த பல்கலைக்கழகத்திற்கும் சட்டக்கல்லூரிக்கும் ஆன அனுமதி போட்டிப்பரீட்சையின் மூலம் தீர்மானிக்கப்படும். உயர்தரப்பரீட்சையில் இரண்டு 'A' சித்திகள் பெற்றிருப்பின் இலண்டன் பல்கலைக்கழக வெளிவாரி அனுமதி பெறமுடியும். இவற்றினை நோக்குன்ற போது சட்டபீடத்திற்கான (கொழும்பு பல்கலைக்கழக) பரீட்சைக்குத் தோற்ற இயலாது. ஆனால் சட்டக்கல்லூரிக்கும், திறந்த பல்கலைக்கழகத்திற்கும் இந்நடைமுறையில்லை. எத்தனை தடவையும் பரீட்சைக்குத் தோற்ற முடியும். மேற்குறிப்பிட்ட 4 நிறுவனங்களில் சட்டக்கல்லூரி மாத்திரம் தான் ''சட்டத்தரணி'' எனும் அந்தஸ்தினை வழங்குகிறது. இது தொழிற்தகைமையாக கருதப்படும் (Professional Qualification). ஏனைய மூன்று நிறுவனங்களும் 'சட்டமானி'ப் பட்டத்தினை (LLB) வழங்குகிறது. இது கல்வித்தகைமையாக கருதப்படும் (Academic Qualification). சட்டக்கல்வியைப் பொறுத்தவரையில் தொழிற்தகைமையை கொண்டவர்களே நீதிமன்றத்தில் வழக்குரைக்க முடியும்.

சட்டமானிப் பட்டத்தினைக் கொண்டவர்கள் தொழிற்தகைமையைப் பெறவேண்டுமாயின் 6 மாதகாலம் சட்டக்கல்லூரியில் பயின்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இவ்விறுதிப் பரீட்சையில் சந்திக்கின்ற 9 பாடங்களில் 5 பாடங்கள் ஏலவே சந்தித்தவையாகும். இலங்கையின் கல்விக் கொள்கையின்படி ஏலவே சித்தியெய்திய பாடங்கள், மீள தோற்ற வேண்டிய அவசியமில்லை என்பதாயும், விலக்கு (Exception) வழங்கப்பட வேண்டும் எனவும் சொல்கிறது. சட்டபீடமாணவர்களின் கோரிக்கையானது தமது பட்டப்படிப்பு முடிந்தவுடன் நேரடியாக வழக்குரைக்க வேண்டும் என்பது அல்ல. இதனை தவறாக விளங்கியவர்கள், இவர்களுக்கு இவ்வாறு அனுமதி வழங்கும் பட்சத்தில் கீழ்வரும் சிக்கல்கள் ஏற்படும் என்கின்றனர்.

1. சட்டக்கல்லூரி மாணவர்கள் (LLB) பட்டம் கேட்பார்கள்.
2. B.Com பட்டதாரிகள் சாட்டட் (Charted Accountant) ஆக விண்ணப்பம் செய்வார்கள்.
3. (A.M.P.) வைத்தியர்கள் (M.B.B.S.) ஆக போராடுவார்கள்.

இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுமாய் இருந்தால் இவை அடிப்படைத் தராதரமற்ற போராட்டமாக கைக்கொள்ளப்பட வேண்டும்.

சட்டமானி மாணவர்கள் சட்டக் கல்லூரிக்கு சென்று அங்கு குறிப்பிட்ட காலப்பகுதியில் பயின்று இறுதிப்பரீட்சைக்கு தோற்ற ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கைகள்;

- விலக்களிக்கப்பட வேண்டிய பாடங்களில் விலக்கு வழங்கப்பட வேண்டும்.
- சட்டக்கல்லூரியில் பயிலும் 6 மாதகாலத்தில் தமக்கு கிடைக்கின்ற 'மஹாபொல' ஊக்குவிப்புப்பணம் தொடர்ந்து கிடைப்பதற்கான வழிவகை செய்யப்பட வேண்டும்.
- விடுதி வசதி, இன்னனோரன்ன பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட சலுகைகள் ஆகியன வழங்கப்பட வேண்டும் என்பவையாகும்.

இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதிலேயே சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு எவ்விதமான தாழ்வுச் சிக்கலும் ஏற்பட வாய்ப்பில்லை.

தற்போதைய அரசின் சிரேஷ்ட அமைச்சரான சட்டமானி பட்டதாரி பேராசிரியர் பீரிஸ் (ஜி.எல்), தான் அமைச்சராக முன் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்த காலகட்டத்தில் சட்டமாணவர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக எழுதிய கட்டுரைகளையும் விமர்சனங்களையும் வைத்துக்கொண்டு தான் மாணவர்கள் போராட்டம் செய்கின்றனர்.

திடமான நம்பிக்கையோடு, உறுதியான கொள்கையோடும், அஹிம்சை போராட்டம் செய்யும் சட்டமானி மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு தயக்கம் காட்டக்கூடாது.

*ஐ.பயஸ் றெஸ்லாக்,*
*சட்டபீடம் -*
*(திறந்த பல்கலைக்கழகம்).*

# சிறுவரைக் கடத்தவும் வெள்ளை வான்!

பாலியல் இம்சைகளுக்குள்ளான பேருவளை விஜித சிறுவர் இல்லப்பிள்ளைகளை கடத்திச் செல்ல இனந்தெரியாத குழுவொன்று கடந்த சில தினங்களுக்கு முன்பு கடும் முயற்சி செய்துள்ளது எனத்தெரிகிறது.

இப்பிள்ளைகளை ஆரம்பத்தில் வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து அகற்றி பொரளையில் உள்ள வேறொரு சிறுவர் இல்லமொன்றுக்கு இடம் மாற்றுமாறு மத்துகம மாஜிஸ்திரேட் என். சுனில் ராஜபக்ச உத்தரவிட்ட பின்னரே இனந்தெரியாத குழுவொன்று அச்சிறுவர் இல்லத்துக்கு வந்துள்ளது.

அவர்கள் வெள்ளை நிற ஹை-ஏ.எஸ் ரக வான் ஒன்றிலேயே வந்துள்ளனர். பேருவளைப் பிள்ளைகள் அநாதையில்லத்துக்குக் கொண்டு வரப்பட்டு விட்டார்களா என இனந்தெரியாத நபரொருவர் அவ்வில்லத்தின் பெண் ஊழியர் ஒருவரிடம் வினவியுள்ளார். அவ்வாறு கேட்பது எதற்காக என அவ்வூழியர் கேட்டபோது ''அவர்களுக்கு அன்னதானம் வழங்க'' எனக்கூறியபடி இனந்தெரியாத நபர்கள் சென்றுள்ளனர்.

மீண்டும் அதே தினம் மாலை கறுப்பு நிற மோட்டார் வாகனமொன்றிலும் வெள்ளை நிற வாகனமொன்றிலும் அடிக்கடி வந்த இனந்தெரியாத நபர்கள் பேருவளைப் பிள்ளைகள் பற்றி விசாரித்துள்ளனர். அதைத் தொடர்ந்து அன்றிரவு தொடக்கம் அச்சிறுவர் இல்லம் மீது கல்வீச்சு நடத்த ஆரம்பிக்கப்பட்டது. பத்திரிகையாளர்கள் அவ்விடத்தில் நின்ற போதும் அனாதை சிறுவர் இல்லக் கூரை மீது கல்வீச்சு நடத்தப்பட்டது.

அவ்விடம் பேருவளை சிறுவருக்கு பாதுகாப்பு அற்ற இடமென்று என அதன் நிர்வாக சபையினால் அகில இலங்கை பௌத்த சம்மேளனத்திடம் சுட்டிக்காட்டப்பட்டாலும் அதைப்பற்றி கருத்தில் எடுக்காது செயல்படுவதால் நிலைமை உக்கிரம் அடைந்துள்ளதாக அவ்வனாதை இல்லச் சிறுமியர் நிர்வாகச் சபையின் பெண் தலைமை அதிகாரி தெரிவித்தார். இந்நிலைமையினால் தான் உட்பட முழு நிர்வாகக் குழுவுமே பதவி விலகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அனாதைச்சிறுவர் இல்லம் மீது கல்வீச்சு நடப்பதாக நிர்வாகக் குழுவினரால் பொரளை பொலிசுக்கும் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ஆயுதம் தரித்த பொலிஸ் அதிகாரிகள் இவ்விடத்தில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டாலும் அவர்கள் இருக்கும் போது கூட இடையிடையே கல்வீச்சுக்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

பொறுப்பு, நேர்மை, உணர்வுகளுடன் செயற்படும் நிர்வாகக் குழுவொன்றுக்குப் பதிலாக வேறு நபர்களைக் கொண்ட நிர்வாக சபையொன்றை அமைத்து அனாதை இல்லத்துக்குச் சொந்தமான காணிகளை கொள்ளையடிக்கச் செய்யப்படும் முயற்சியின் ஆரம்ப விளைவாகவே இக்கல்வீச்சைக் கொள்ளலாம் என நிர்வாகச் சபையின் வேறு ஒரு பெண் அதிகாரி கூறினார்.

*(லக்பிம 19970209)*

# ஆயுதங்களைக் களைக!

கடந்த அரசு இருந்த காலத்தில் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் பத்தாயிரம் மட்டில் இன்னும் மீள ஒப்படைக்கப்படவில்லையென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆயுதங்களைப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகளின் பெயர், முகவரிகள் அடங்கிய எழுத்து மூலமான பதிவுகள் இல்லாத காரணத்தினால் அவ்வாறான ஆயுதங்களைத் தேடிப்பிடிப்பது கூட தற்போது பொலிஸாருக்கு கடினமானதாகவே உள்ளது.

சில ஆயுதங்கள் போலிப் பெயர், முகவரிகள், கொடுக்கப்பட்டே பெறப்பட்டுள்ளன.

இவ்வளவு எண்ணிக்கையான ஆயுதங்கள் அரசியல்வாதிகளிடம் இருப்பது இதுபோன்ற தேர்தல் சந்தர்ப்பங்களில் பெரும் அச்சுறுத்தலானது என பொலிஸ் தேர்தல் பணிப்பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆயுதங்களை மீள ஒப்படைக்கும்படி பல முறை கோரினாலும், அது நடைபெற வில்லையெனவும், தேர்தல் ஒன்று வரவுள்ள சந்தர்ப்பங்களில் ஆயுதங்களை மீளப் பெறச்சொல்வது நடைமுறைச் சாத்தியமற்றதொன்று எனவும் அவர் கூறினார்.

தற்போது அரசின் கீழும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு, அமைச்சர்கள் பாதுகாப்புப்பிரிவு என்பவற்றுக்குப் புறம்பாக ஏறத்தாழ பாராளுமன்ற உறுப்பினர்கள் நூறு பேருக்கு பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொ.ஐ.மு. அரசாங்கத்திலுள்ள பாராளுமன்ற இளம் உறுப்பினர்கள் குழுவான மல்பெரிக்குழு அரசியல்வாதிகளிடமுள்ள ஆயுதங்களைக் களையுமாறு அல்லது குறைப்புச் செய்யுமாறு நாலந்த எல்லாவல படுகொலையின் பின் பகிரங்கமாகவே கோரியுள்ளனர்.

பயங்கரவாத காலத்தைப் போல இப்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லாததால் இவ் ஆயுதங்களை மீள பாதுகாப்புப் பிரிவுகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என மேற்கூறிய புத்திஜீவிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கூறியுள்ளனர்.

*(லக்பிம 19970216)*

www.tamilarangam.net





நாசமறுப்பான்:

# பயங்கரவாதப் ப(ழி)லி!

1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளிவந்த சரிநிகர் 106வது இதழில் இதே பத்தியில் அரசியல் வன்முறை குறித்து எழுதியிருந்தேன்.

நீர்கொழும்பில் ஐ.தே.க.வின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடந்த படுகொலைத் தொடர்கள் தொடர்பாக எழுதப்பட்ட அப்பத்தியின் முடிவில் ''நீர்கொழும்பு வெறும் உதாரணம் மட்டுமே. உள்ளே கனன்று கொண்டிருக்கும் வன்முறைத் தணலை தணிப்பதில் அக்கறை எடுக்கப்படாதவரை இத்தகைய வன்முறைகள் தவிர்க்கப்படுவது சாத்தியம் இல்லை'' என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்த பழைய விடயத்தை இப்போது மீள ஞாபகப்படுத்திக்கொள்வது ஒன்றும் 'நாசமறுப்பானின்' தீர்க்க தரிசனத்தைக் காட்டுவதற்காக அல்ல. உண்மையில் தற்போது நடந்துகொண்டிருக்கும் இரத்தினபுரி வன்முறைச் சம்பவங்களுக்கு ஒரு தொடர்ச்சியும் அதற்கு அடிப்படையான வன்முறை அரசியலும் இங்கு நிலவுகிறது என்று சுட்டிக்காட்டுவதற்காகவே இதை இங்கு குறிப்பிடுகிறேன்.

இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினரான நாலந்த எல்லாவல ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரான சுசந்த புஞ்சிநிலமே மற்றும் முன்னாள் மேயரான மகிந்த ரத்தினதிலக ஆகியோராலும் அவர்களது சகாக்களாலும் தாக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து நாடு பூராவும் வன்முறை வெடிப்பதற்கான ஆபத்துக்கள் தோன்றியுள்ளன.

இரத்தினபுரியில் படுகொலை செய்யப்பட்ட நாலந்த எல்லாவலவின் மரணச்சடங்கினை அடுத்து இரத்தினபுரியில் பலத்த வன்முறைகள் நடந்துள்ளன. கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் நிலையத்துக்கும் தீவைக்கப்பட்டுள்ளது. பல பொலிஸ் வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இம்மோதல்கள் கொழும்பு முதல் நீர்கொழும்பு வரையும் பரவியுள்ளன.

நாலந்த எல்லாவலவின் மரணச் சடங்கில் உரையாற்றிய பொ.ஐ.மு. அரசியல் வாதிகள் வன்முறையினைத் தூண்டிவிடும் விதத்தில் உரையாற்றியதும் அரசாங்கம் படுகொலையில் ஈடுபட்ட நபர்களை கண்டுபிடிப்பதை விடவும், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சியான ஐ.தே.க. மீது பிரச்சார ரீதியான தாக்குதலை நடத்துவதில் அதிகளவு அக்கறைக் காட்டிச் செயற்பட்டதும், பரவலாக ஐ.தே.க., பொ.ஐ.மு. கட்சியினர்க்கிடையிலான வன்முறை வெடிக்கக் காரணமாக இருந்தன என்பது முக்கியமான கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

ஏதோ இலங்கையில் பாராளுமன்ற அரசியலுக்குள் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது இதுவே முதற் தடவை என்பது போலவும் ஐ.தே.கவே இதற்கு முழுப் பொறுப்பும் என்பது போலவும் அரசாங்க கட்சி அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும் பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆனால் உண்மையில் நாலந்த படுகொலை தொடர்பாக சந்தேகிக்கப்படுகின்றவர்கள் சரணடைவதற்கு தயாராகவிட்டதாக அறிவித்த பின்பும், ஐ.தே.க. இந்த படுகொலையை வன்மையாக கண்டித்ததுடன் சந்தேகிக்கப்படுபவர்களை கட்சியிலிருந்து விலக்கியுள்ளதாக அறிவித்த பின்பும், ஐ.தே.க.வினர்கள் மீதும் அவர்களது உடமைகள் மீதும் தொடர்ச்சியான தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தாக்குதல்களை 'இந்தளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததே பெரிய விடயம்' என்று கூறி மறைமுகமாக வன்முறைக்கு தூபமிடுகிறார், பொ.ஐ.மு. பொதுச் செயலாளர் அமைச்சர் தயாரத்ன.

ஐ.தே.க தனது பதினேழு ஆண்டு கால படுகொலை ஆட்சியை மீளக் கொண்டுவர துடியாய் துடிப்பதாகவும், அது ரயர் எரிப்பு, படுகொலை போன்றவற்றினூடாகவே தனது அரசியலை நடாத்தி வந்துள்ள ஒரு கட்சி என்பதால் அதனால் இப்படித்தான் நடந்து கொள்ள முடியும் என்றும் பிரச்சாரங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஆனால் இலங்கையின் அரசியல் வன்முறை வளர்ச்சியுற்று வந்ததற்கு ஒரு வரலாறு உண்டு என்பதையும், அதற்கு ஐ.தே.க மட்டுமே காரணம் அல்ல என்பதையும் யாரும் மறந்துவிடமுடியாது.

1956ம் ஆண்டு காலிமுகத்திடலில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடாத்திய சத்தியாக் கிரகப் போராட்டத்தின் போது நடாத்தப்பட்ட தடியடிப்பிரயோகத்துடன் வெளிப்படையாக ஆரம்பித்துவிட்ட வன்முறையானது தனக்கேயுரிய விதத்தில் வளர்ச்சி பெற்று இன்று இலங்கையின் அரசியல், வன்முறையின்றி சாத்தியமற்ற ஒன்று என்ற நிலைக்கு வந்துள்ளது. ஐ.தே.க.வும்சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சரி, இரண்டுமே அரசியலை ஜனநாயக பூர்வமான வழிகளில் நடத்தி வந்ததாக வரலாறு இல்லை. அவற்றின் அரசியலில் ஆரம்பமுதலே ஜனநாயக விரோதமும் வன்முறையையும் இருந்து வந்துள்ளன.

இவ்விரு கட்சிகளும் கூட்டாக தமிழ் அரசியல் கட்சிகளை நோக்கிக் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை முற்றுமுழுதான அரச பயங்கரவாதமாக வடிவெடுத்ததுடன் இன்று வளர்ச்சியுற்ற ஒரு இன அழிப்பு யுத்தமாக நடந்து வருகிறது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை 'பயங்கரவாதம்' 'பிரிவினைவாதம்' என்ற முழக்கங்களின் கீழ் ஆயுத முனையில் எதிர்கொள்வதில் இரண்டு கட்சிகளும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காதவர்களாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுச்சி மாநாட்டைக் குழப்பி வன்முறையை கட்டவிழ்த்துவிட்டது முதல் சென்ற வருடம் யாழ்ப்பாணத்தை 'கைப்பற்றியது' வரை இந்தக் கட்சிகள் இரண்டும் அரசியலில் வன்முறையை கடைப்பிடிப்பதில் ஒரு வித தயக்கமின்றி ஆர்வத்துடன் ஈடுபட்டே வந்துள்ளன.

ஆனால் இன்று வடக்கு கிழக்கு மக்கள் மீதான யுத்தம் 'ஒரு சாதாரணமான அன்றாட நிலைமையாக மாறிவிட்ட பின் அவர்களை அதிகம் தாக்குவது யார் என்ற போட்டியில் தமக்குள்ளே பெறும் வெற்றி தமது அரசியல் இருப்புக்கு போதுமானதல்ல என்பதை நடைமுறை ரீதியாக புரிந்து கொண்டு விட்ட பின் இரு கட்சிகளும் தமக்குள்ளேயே வன்முறையை பாவிப்பது ஒரு தவிர்க்க முடியாத தேவையாக மாறிவிட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மக்களுக்கு எதிரான வன்முறையை நியாயப்படுத்துகின்ற அரசியல் வன்முறைக்கு அங்கீகாரம் வழங்குகிறது; அரசியலை ஆயுத பலம் மூலம் சாதிக்கும் இந்த

அரசியற்கட்சிகளின் செயல்களை நியாயப்படுத்த உதவுகிறது; ஆயுதக் கலாசாரத்தினை உயர்த்திப் பிடிக்கும், ஆயுதம் தாங்கிய 'வீரர்களை' தியாக சீலர்களாக காட்டும் ஒருவகை கருத்துநிலை வேகமாக வளர்த்து விடுகிறது. இலங்கையின் பாராளுமன்ற அரசியல், படுகொலையாளர்களை, சமூக விரோதிகளை ஊழற்பேர் வழிகளையெல்லாம் உள்வாங்கி இந்தக் கருத்து நிலைக்கேற்ற விதத்தில் வடிவம் பெற்று இருக்கிறது. இந்த நிலைமையினை இன்றைய ஜனாதிபதி அவர்களின் 'மிரட்டல்' பாணியிலான பேச்சுக்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

படுகொலை அரசியலை ஒழித்தல், ஜனநாயகத்தை மீள்வித்தல் ஊழலற்ற நல்லாட்சியை நிறுவல் போன்ற அழகான வார்த்தைகளுக்குள் பொதியப்பட்ட எறிகுண்டுகளை தயார்நிலையில் வைத்துக் கொண்டே இரு கட்சிகளும் தமது அரசியலை நடாத்தி வருகின்றன.

இந்த அரசாங்கம் பதவிக்கு வருமுன்பாக ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் கொலை செய்தவர்களின் ரயர் போட்டுக் கொழுத்தியவர்களின் எண்ணிக்கை அறுபதினாயிரம் பேருக்கும் மேலென்று கூறப்படுகின்ற தென்றால், அதற்கு முன்னிருந்த இதே சுதந்திரக் கட்சி தலைமையிலான 'மக்கள் அரசாங்கத்தின்' ஆட்சிக்காலத்திலும் கூட அவ்வாறே தென்னிலங்கை இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டு களனி ஆற்றில் வீசப்பட்டிருந்தார்கள். கதிர்காமத்தில் அழகுராணி மனம் பேரி கொல்லப்பட்டதைப்பார்த்து முதலைக் கண்ணீர் வடித்த பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் தான் பல்லாயிரக் கணக்கில் பெண்கள் கொல்லப்பட்டார்கள். அவர் காலத்தில்தான் இன்று விசாரிக்கப்படுவதாக பாவனை பண்ணப்படுகின்றதும், இன்றைய ஜனாதிபதியால் அன்று பெரிதாக பிரச்சாரிக்கப்பட்டதுமான எம்பிலிப்பிட்டிய புதைகுழிகள் நிரப்பப்பட்டன. வரலாறு அத்துடன் முடிவடைய வில்லை. அதன்பின் இன்று அதே ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் புல்லர்ஸ் ரோட்டில் தமிழ் இளைஞர் பலர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஆக மொத்தில் அரசியலில் படுகொலையும் வன்முறையும் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமானதொன்றல்ல. இரு கட்சிகளுமே இவ்விடயத்தில் ஒருவருக்கொருவர் சளைத்தவர் அல்ல. இன்று பிரஸ்தாபிக்கப்படுகிற நாலந்த எல்லாவல படுகொலையின் போதும் கூட கொலைச் சந்தேக நபர்களது அறிவிப்பின் படி அவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆக, நாலந்த எல்லாவல கொல்லப்பட்டது ஒரு தற்செயல் சம்பவமாக மட்டுமே கருதப்படமுடியும். சற்றுப்பிசகியிருந்தால் கொல்லப்பட்டது புஞ்சி நிலமேயாகக்கூட இருந்திருக்க வாய்ப்புண்டு. இந்த நிலைமையை மிகவும் சாதுர்யமாக தமது அரசியல் லாபங்களுக்கு வாய்ப்பாக பயன்படுத்தியுள்ளது பொ.ஐ.மு. தவிரவும், ஐ.தே.க வேட்பாளர்களை மிரட்டி, அவர்களை தேர்தலில் இருந்து ஒதுங்குமாறு விரட்டியும் வருகிறது. அவ்வாறு தேர்தலில் இருந்து ஒதுங்காவிட்டால் அவர்களது உடைமைகள் நாசமாக்கப்படும் என்று பொ. ஐ.மு. ஆதரவாளர் மிரட்டத் தொடங்கியுள்ளதாக சப்பிரகமுவ பிரதேச ஐ.தே.க வேட்பாளர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளார்கள்.

ஆக, இந்தப் படுகொலையை தமது கட்சியின் தேர்தல் வெற்றிக்கு சாதகமாக பயன்படுத்துவதே பொ.ஐ.மு. அரசியல் வாதிகளது நோக்கமாகவுள்ளது. இதற்கேற்ற விதத்தில் அரச சார்பு பத்திரிகைகளையும், பிற தொடர்பு சாதனங்களையும் நன்றாக பயன்படுத்துகிறது அரசு. மாறாக பொ.ஐ.மு வினரின் வன்முறைகள் தொடர்பாக எத்தகைய தகவல்களையும் அவை வெளியிடாது இருட்டடிப்பு செய்து வருகின்றன.

மொத்தத்தில் இலங்கை பாராளுமன்ற அரசியலின் பொய்மை முகமூடி இதன் மூலம் மீண்டும் ஒரு முறை தெளிவாகக் கிழிக்கப்பட்டுள்ளது. அதன் படுகொலை மலிந்த உண்மை தோற்றம் வெளிப்படையாக தெரியத்தொடங்கியுள்ளது. அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் மக்களுக்கு சேவை செய்வதற்காக மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளாக வருவதற்கான ஜனநாயக ஏற்பாடே இந்தத் தேர்தல் என்பதன் பொய்மையை இன்றைய நிலைமைகள் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

வன்முறையையும் ஆயுதங்களையும் கொண்டு தாக்குவது பயங்கரவாதிகளின் செயல் என்று கூறிவரும் பாராளுமன்ற அரசியல் வாதிகள் தமது அரசியல் இருப்புக்கு சவால் என்று வரும்போது வன்முறையைக் கடைப்பிடிக்கவும் ஆயுதங்களைத் தூக்கவும் தயங்கமாட்டார்கள் என்பதே உண்மை. அரசியல் உரிமைகட்காக குரல் கொடுக்கும் மக்களை ஆயுதம் தூக்க நிர்ப்பந்திக்கும் இவர்கள்தான் மக்கள் மீது முதலில் ஆயுதத்தைப் பிரயோகிப்பவர்கள் என்பது உலக வரலாற்று உண்மை. ஆக, இவர்கள் ஆயுதமேந்துபவர்களை பயங்கரவாதிகள் என்று சொல்லுவதெல்லாம் தமது அரசியல் இருப்புக்கு ஆட்டம் காணாமல் வைத்திருக்கவே அன்றி வன்முறை மீதான வெறுப்பினால் அல்ல. உண்மையில் அரசியல் உரிமைக்காகப் போராடும் மக்களே வன்முறையையும் மனதார வெறுப்பவர்கள் ஆவர். இவர்கள் ஜனநாயக பூர்வமானது என்று குறிப்பிடும் தேர்தல் உண்மையில் கொள்ளையடிக்கவும், சட்டபூர்வமாக கொலை செய்யவும், தமது அரசியல் இருப்பைப் பாதுகாக்கவும் கூறிவரும் ஒரு மோசடியே அன்றி வேறல்ல. இன்று நடந்துகொண்டிருக்கும் சம்பவங்கள் இவற்றை முகத்தில் அறைந்தாற்போல் மக்களுக்கு உணர்த்தியிருக்கின்றன.

உணரவேண்டியது மக்களும் அவர்களது தொண்டர்களும் தான். வரலாறு சம்பவங்களை மட்டுமே காட்டும். சம்பவங்களில் இருந்து கற்றுக்கொள்பவர்களே வரலாற்றை உருவாக்குகிறார்கள்.

வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்களின் தலைவர்கள் ஆகிறார்கள். இன்று மக்களுக்குத் தேவை அவர்கள்தான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*சென்ற இதழ் தொடர்ச்சி...*

அக்டோபர் 4ம்திகதி பருத்தித்துறைக்கு அப்பால் படகில் வந்து கொண்டிருந்த பதினேழு விடுதலைப் புலிகளை இலங்கை கடற்படை கைது செய்தது. கைது செய்யப்பட்டவர்களில் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களான புலேந்திரனும், குமரப்பாவும் அடங்குவர். இந்த பதினேழு பேரும் தமிழ் நாட்டிலிருந்து ஆயுதங்களைக் கடத்திக்கொண்டு வந்ததன் மூலம் ஒப்பந்தத்தை மீறியதாகவும் கூடவே இலங்கையின் குடிபெயர் சட்டத்திட்டங்களை மீறிவிட்டதாகவும் இலங்கை அரசாங்கம் இவர்கள் மீது குற்றஞ்சாட்டியது. இவர்கள் விடுதலைப் புலிகளின் தலைமைச்செயலகத்தை சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றும் நோக்கத்துடன் ஆவணங்களை எடுத்துக்கொண்டு வந்துகொண்டிருந்ததாகவும், இந்தியப் படையினர் எந்தவிதப் பூர்வாங்கச் சட்டத்திட்டங்களையும் கடைபிடிக்காமல் தங்கள் தலைவர்களை சென்னைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் விமான மூலம் போய் வர அனுமதித்த நிலையில் இலங்கையின் குடிபெயர்தல் சட்டதிட்டங்களை மீறுதல் குறித்தான கேள்வி எந்தவிதத்திலும் எழவில்லை என்றும், விடுதலைப் புலிகள் வாதாடினார்கள். அந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சிங்கள - தமிழ் புத்தாண்டின்போது இலங்கை அரசு பிரகடனப்படுத்தியிருந்த ஒரு பக்க யுத்த நிறுத்தத்தின் போது, விடுதலைப் புலிகளின் திருகோணமலைத் தலைவர் புலேந்திரன் 150 அப்பாவிச் சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்குக் காரணமாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசுத் தொலைக்காட்சியான ரூபவாஹினியில் தொடர்ச்சியாக இரண்டு நாட்களாக உரை நிகழ்த்தினார். அந்தப் பதினேழு பேரும் கடத்தல்காரர்கள் என்றும் எனவே அவர்கள் ஒப்பந்தத்திற்குள் வரமாட்டார்கள் என்றும் அவர் முதல் நாள் உரையில் தெரிவித்தார். ஆயுதத்தளவாடங்களை எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டிலிருந்து திரும்புகையிலேயே அவர்கள் பிடிபட்டார்கள் என்று அடுத்த நாள் இரவு பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டின் பிரதான அலுவலகத்திலிருந்து தளவாடங்களையும் மற்றும் உபகரணங்களையும் கொண்டு வருவதற்காகவே அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு சாதாரண மீன்பிடி வள்ளத்தில் சென்று கொண்டிருந்ததாக புலிகள் மேலும் தெரிவித்தனர். இந்த விஷயத்தில் தங்களுக்கு உதவுமாறு யாழ்ப்பாணத்தில் இருந்த இந்திய சமாதானப்படையின் உயர் அதிகாரப்பீடத்திடம் கேட்டுக்கொண்டதாகவும் ஆனால் தங்களின் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டு விட்டதாகவும் புலிகள் மேற்கொண்டும் தெரிவித்தனர். யாழ்ப்பாணத் தலைவரான குமரப்பா, திருகோணமலைத் தலைவரான புலேந்திரன் ஆகிய இருவர் மட்டுமே ஆயுதங்கள் தரித்திருந்ததாகவும் ஒப்பந்தத்தின் படி புலிகள் தற்பாதுகாப்புக்காக ஆயுதங்கள் தரித்திருக்க ஷரத்து உள்ளதாகவும் அவர்கள் ஆயுதந் தரித்திருந்தமை ஒப்பந்தத்திற்கு இசைவானதே என்றும் புலிகள் கூறினர். மீன்பிடிப்படகில் வந்து கொண்டிருந்த புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக்கூறப்பட்ட ஆயுதங்களையும் வெடிகளையும் அரசுக்குச் சொந்தமான ரூபவாஹினியில் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளைப் பிடித்து வைத்திருப்பதன் காரணத்தைப் பற்றி ஒரு பத்திரிகையாளர் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியைக் கேட்டபோது, அவர்களைக் கொழும்புக்குக் கொண்டு வந்து அரச தொலைக்காட்சி கெமராக்களின் முன் 'போஸ்' கொடுக்க வைத்து விட்டுப் பிறகு திருப்பி அனுப்புவதற்குத்தான் என்று அவர் பதில் அளித்தார்!

பலாலியில் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தப் பதினேழு பேரையும் விசாரணைக்காக கொழும்புக்குக் கொண்டுச் செல்லப்படுவதை இலங்கை அரசாங்கம் வலியுறுத்தியது. இதனைத் தடுத்து நிறுத்துமாறு விடுதலைப் புலிகள் இந்திய அரசாங்கத்தைக் கோரினர். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதைத் தடுப்பதில் இந்திய சமாதானப்படையும் இந்தியத் தூதுவர் ஜே.என் தீக்ஷித் அவர்களும் இலங்கை அரசிடம் கணிசமான அக்கறையோடு பேச்சுவார்த்தை நடத்தியதாக செய்தி அறிக்கைகள் கூறுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றி தனக்கு ஏற்கெனவே தெரியுமாதலால் அரசின் இந்த நடவடிக்கை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது பற்றி இலங்கை அரசாங்கத்திற்குத் தான் எச்சரிக்கை செய்திருப்பதாகப் பின்னர் பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியின் போது தீக்ஷித் தெரிவித்திருந்தார். ஆனால் இலங்கை அரசு இதில் விடாப்பிடியாக இருந்தது. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களை ஒக்டோபர் 5ம்திகதி கொழும்பிற்கு விமானம் மூலம் கொண்டு செல்வதென அரசாங்கம் முடிவெடுத்திருந்தது. விமானத்தில் ஏற்றப்படுந் தறுவாயில் அந்தப்பதினேழு பேரும் சயனைற்றை விழுங்கியதாகவும், குமரப்பாவையும் புலேந்திரனையும் சேர்த்து அதில் பன்னிரண்டு பேர் பலியானதாகவும் பின்னர் அறிவிக்கப்பட்டது. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களின் கைக்கு சயனைற் எப்படிக் கிடைத்தது என்ற கேள்வி எழுகிறது. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட ஆரம்பச் சோதனையிலே அவர்கள் கழுத்தில் காவித்திரியும் சயனைற் வில்லைகள் அகற்றப்பட்டிருக்கும் என்பதைச் சாதாரணமாகவே ஒருவர் ஊகித்துக் கொள்ள முடியும்.



# சயனைற் கிடைத்தது எப்படி?


இந்தப் புதிருக்கு விடை காண்பது ஒன்றும் அவ்வளவு கடினமானதல்ல. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் துரதிருஷ்டமான அத்தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைத்தலைவர் மாத்தயா அவர்களால் புலிகளின் பிரதான சித்தாந்தவாதியான அன்ரன் பாலசிங்கத்துடன் உணவருந்த அழைத்துச்செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பலாலியில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களை இலங்கை இராணுவத்தினர் விமானத்தில் ஏற்ற முயல்வதைக் கடைசி நிமிடம் வரை இந்திய சமாதானப்படை தடுத்து நிறுத்த முயற்சித்ததாக இந்திய சமாதானப் படையின் ஒரு சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார். இந்த முயற்சிகளைக் கைவிடுமாறும் நடப்புகளை அப்படியே அவற்றின் போக்கிலேயே விட்டுவிடுமாறும் புதுடில்லியிலிருந்து 4.30 மணியளவில் ஒரு தொலைபேசிச் செய்தி அறிவுறுத்தியது. சமாதானப்படையின் அந்த சிரேஷ்ட அதிகாரியிடம் குமரப்பா அதற்கு முன்தினம், ''நீங்கள் இன்று என் மனைவியைப் பார்க்க வேண்டும்'' என்று அவசரத் தொனியில் கூறியதாக அதே செய்தி தெரிவிக்கிறது. குறைந்தது ஒரு நாளாகவாவது கடைசி நிமிடப்போராட்டம் நடந்திருப்பதை இது காட்டுகிறது.

(1989 ஒக்டோபர் முதலாம் திகதியிடப்பட்ட கொழும்பு சண்டே டைம்சின் அறிக்கையின் சாராம்சம் பின்னிணைப்பு - (11)ல் தரப்பட்டுள்ளது.) தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் இறந்துபோனால் என்ன நடக்கும் என்பது குறித்து இந்திய சமாதானப்படை அதீத அக்கறை கொண்டிருந்ததை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இலங்கை இராணுவத்திடமிருந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களை விடுவிக்க இந்திய அமைதிப்படைத் தளபதி ஜெனரல் ரொட்ரிகஸ் வன்முறையைத் தவிர மற்ற எல்லா வழிவகைகளையும் முயன்று பார்த்திருக்கிறார். கொழும்புத் தரப்பின் மூர்க்கமான தன்மையும், பின்விளைவுகளைப் பற்றிய எந்த விதமான அக்கறையின்மையும் இலங்கை அதிகாரிகளின் ஒரு பகுதியினர் இந்திய அமைதிப்படையை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இராணுவரீதியில் மோதிக்கொள்ளுமாறு தள்ளிவிட இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டனர் என்பதைக் காட்டுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி தனது பொருளாதாரக் கொள்கைகளை மேற்கு நாடுகளை நோக்கி அமைத்துக்கொண்டிருக்கும் நிலையில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதானது ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதிகாரப் போராட்டத்தை வெளிக்கொணர்ந்தது.

காமினி திஸநாயக்கவையும், ரொனி டி



புலேந்திரன்



குமரப்பா

மெல்லையும் கொண்ட ஒரு பிரிவு ஒப்பந்தத்திற்கு ஆதரவு தெரிவித்தது. பிரேமதாசவை உள்ளடக்கிய மற்றுமொரு பிரிவு - தேவை ஏற்படுமென்றால் மேற்குடன் இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவும் தயாராயிருந்த நிலையில் இந்த ஒப்பந்தம் குறித்து திட்டவட்டமான அதிருப்தியை வெளிப்படையாகத் தெரிவித்தது. தென்கிழக்கு ஆசியநாடுகளின் அமைப்பான ஏசியானில் (ASEAN) இலங்கையும் உறுப்பினராக வேண்டும் என்பதை பிரேமதாச ஒரு காலத்தில் ஆதரித்திருந்தார். தமிழர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்கு மேற்கத்தேய உதவியும் இராணுவப் பயிற்சியும் இலங்கையின் பாதுகாப்பிற்கு மிகமிக முக்கியமான தேவைகளாக இருந்தன. இந்த இரண்டு கோஷ்டியினரிடையே கொள்கை அடிப்படையில் சச்சரவுகள் இல்லாதிருந்தால், இந்த ஒப்பந்தத்தின் தோல்வி ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே காணப்பட்ட ஊன்றிய நலன்களுக்கும் பாதுகாப்பு அமைப்புக்கும் அனுகூலமாக அமைந்திருக்கும். பின்னால் 1989ல் இலங்கையில் இந்தியா நிலை கொண்டிருப்பதற்கு எதிராக பிரேமதாசவின் தலைமையிலான இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பொதுவான காரணமாய் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### வெட்கித் தலைகுனியவேண்டிய ஓர் இரவு

அன்று இரவு நடந்த சில சம்பவங்கள் குறித்து யாழ்ப்பாணக் குடிமகன் ஒவ்வொருவனும் வெட்கித் தலைகுனிய வேண்டும். ஒப்பந்தம் நடைபெறுவதற்கு முன்னால் நிகழ்ந்த யுத்தத்தின் போது எட்டு சிங்கள இராணுவ வீரர்கள் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் எப்படியும் விடுதலை செய்யப்பட்டு விடுவார்கள் என்றே அனைவரும் நம்பியிருந்தனர். அந்த இராணுவ வீரர்கள் சிலரின் உறவினர்கள் அவர்களின் விடுதலைக் குறித்து விடுதலைப் புலிகளிடம் மன்றாடிக் கொண்டிருந்தனர். தேசிய பாதுகாப்பு அமைச்சரின் உதவியைப் பலமுறை நாடி அது பயனற்றுப் போன நிலையில் யாழ்ப்பாணத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஒரு பிரபல ரோமன் கத்தோலிக்கப் பாதிரியாரிடம் காலியில் விவசாயியாக இருந்த ஒரு தகப்பனார் இராணுவ வீரனான தனது மகனின் விடுதலைக்காக விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். ஆறாம் திகதி காலையில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் - குண்டுகள் துளைக்கப்பட்ட இந்த எட்டு இராணுவ வீரர்களின் சடலங்களும் யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் வீசி எறியப்பட்டிருந்தன.

அப்பொழுது காங்கேசன்துறையில் தங்கள் தொழிற்சாலையை மீண்டும் செயல்படுத்தும் நோக்கத்துடன் லங்கா சிமெண்ட் லிமிட்டட் கம்பெனியின் பொது முகாமையாளரான ஜயமானவும், துணைப் பொதுமுகாமையாளரான கஜநாயக்காவும் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். காங்கேசன்துறை துறைமுகத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 18 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் பதிலுக்கு இலங்கை இராணுவம் 5 சிமெண்ட் தொழிற்சாலை ஊழியர்களைக் கொன்றதையும்தொடர்ந்து ஏப்ரல் 22ம் திகதியிலிருந்து இத்தொழிற்சாலை மூடப்பட்டுக் கிடந்தது. இச்சம்பவ தினத்தன்று இலங்கைத் துருப்புக்களின் பதில் தாக்குதல் நடைபெறக்கூடும் என்று எதிர்பார்த்து அஞ்சி, ஒரு சிங்களக் கப்பல் தலைவர், துறைமுகத்தில் அப்போது வேலை பார்த்துக் கொண்டிருந்த எழுபது ஊழியர்களைத் தக்க தருணத்தில் கப்பலில் ஏற்றி கடலில் செலுத்தி அவர்களைக் காப்பாற்றி விட்டார். இதைத் தொடர்ந்த சில மாதங்களில் நிகழ்ந்த ஷெல்தாக்குதலின் காரணமாக காங்கேசன்துறையின் இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளும் மோசமாகச் சேதமடைந்திருந்தன. தொழிற்சாலை மூடப்பட்டுக் கிடந்த நீண்ட காலத்திற்கும் சேர்த்து அந்த இரண்டு தொழிற்சாலைகளிலும் வேலை பார்த்து வந்த தற்காலிக ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்கப்படும் என்று முன்னுதாரணம் எதுவுமற்ற புதிய நடவடிக்கை மூலம் வாக்களித்து, தொழிலாளர்களின் ஏகோபித்த நன்றியுணர்வை ஜயமான அவர்கள் சம்பாதித்திருந்தார்.

அவருடைய நிர்வாக முறைகளில் அவரோடு ஒத்துப் போகாதவர்களும் கூட அவரைத் திறமைமிகுந்த உற்சாகமான ஒரு பொறியியலாளர் என்று மரியாதை செய்தனர். இதற்கு முதல்நாள் தான் ஜயமான லங்கா சிமெண்ட் சாலைக்கு புது ட்ரான்ஸ்பார்மர் ஒன்றை நிறுவ இலங்கை மின்சார சபைப் பொறியியாளர்களைப் பார்த்துப்பேசி அவர்களை யாழ்ப்பாணத்திற்கு வரச்சம்மதம் பண்ணி இருந்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் வரவிருக்கிறது என்று நம்பிய சிங்களவர்களுள் ஜயமானவும் ஒருவராவர். அடுத்த நாளில் சிமெண்ட் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்கவிருப்பது குறித்து அவர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்.

ஒக்டோபர் 5ம்திகதி இரவு லங்கா சிமெண்ட் தொழிற்சாலையின் விருந்தினர் இல்லத்தில் உணவருந்திய பிறகு ஜயமானவும், கஜநாயக்காவும் சோதிலிங்கம், வேலாயுதம், அறிவழகன் போன்ற பொறியியலாளர்கள் உள்ளிட்ட பல சக உழியர்களுடன் அன்னியோன்னியமாக உரையாடிக் கொண்டிருந்தார். நள்ளிரவில் விருந்தினர் இலலத்திற்குள் திடீரெனப் புகுந்த ஆயுதந்தாங்கிய பலர் ஜயமானவையும், கஜநாயக்கவையும் தம்முடன் அழைத்துச் செல்ல முயன்றனர். சக அதிகாரிகள் இதனை எதிர்த்தனர். தீவிரமாக எதிர்த்த வேலாயுதம் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டார். இறுதியில் ஜயமானவும், கஜநாயக்கவும் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டனர். மறுநாள் காலை சிமெண்ட் கூட்டுத்தாபனத்தின் ''கேற்''றிற்கு எதிரே அவர்களின் சடலங்கள் காணப்பட்டன.

*வரும்...*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசியம்:
## மார்க்ஸியம் தொடர்பான விமர்சனக் குறிப்புகள்

–கேசவன்




**சரிநிகர் 60வது இதழில் ஆசிரியபீடம் தேசியவாதம் குறித்து விவாதம் ஒன்றினை ஆரம்பித்து வைத்திருந்தது. அத்தொடரில் எம்.ஏ.நுஃமான், சிசைரோ, கொன்சன்ஸ்ரைன், ராம் மாணிக்கலிங்கம், டி. சிவராம், உட்பட பலர் எழுதினார்கள்.**
**இந்நூற்றாண்டின் முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றான தேசியம் குறித்து விரிவான விவாதம் தமிழ்ச் சூழலில் இடம் பெறவேண்டும் எனக் கருதுவதாலும், இலங்கையின் பிரதான பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு தீர்வுக்காணக் கூடிய சூழல் ஒன்று உருவாக்கப்பட வழிகோலப்பட வேண்டுமென்பதற்காகவும் மீண்டும் அவ் விவாதத்தினை சரிநிகர் தொடர்கிறது.**
**இவ்விதழில் ''மார்க்ஸியமும் தேசியமும்' என்ற தலைப்பில் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பிலிருந்து கீழுள்ள கட்டுரையைத் தருகிறோம். வாசகர்களும் எழுதலாம்.**
**ஆ-ர்**

இடத்துக்கிடம், சூழலுக்கு சூழல் மாறுபட்ட பரிமாணங்களைக் கொண்ட தேசியப் பிரச்சினைக்கான தத்துவத்தை உருவாக்குவதில் சகல தத்துவவியலாளர்களும் தோலவியையே கண்டுள்ளனர். ஒன்றுபட்ட சமூக தத்துவமாக தேசியப் பிரச்சினையை உருவாக்குவதில் உள்ள கஷ்டங்களையும் பரவலாக பலரும் அங்கீகரித்தும் உள்ளனர். இங்கு, தனக்குள் உள்வாங்கிக் கொள்ள திராணியிருந்தும், மார்க்சிசம் தனது குறுகிய போக்குகளால், ஆக்கபூர்வமற்ற தனது வரலாற்றால் தேசியப்பிரச்சினையை ஒரு எல்லையில் உள்ள பிரச்சினையாகவே கொண்டிருக்கிறது.

மார்க்சிசம் தேசியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது, வெறுமனே, ஒரு விபத்து அல்ல. மிகவும் குறுகிய சட்டம் போட்டு, இதுதான் மார்க்சிச்ழ் என மார்க்சியவாதிகள் அறைந்து விட்டதால், உலகரீதியில் நாளுக்கு நாள், சகாப்தத்துக்கு சகாப்தம் தோன்றும் பிரச்சினைகளின் பரிமாணங்களுக்கு மார்க்சிசத்தினுள் இடமில்லாமல் போய் விடுகிறது.

ஈழம் தொடக்கம் ஸ்கொட்லண்ட் ஊடாக அசர்பைஷான்.... வரையும் இன்று ஒரு கூர்மையடைந்த பிரச்சினையாகவும், மாற்றத்துக்கு வேண்டிய சமூக சக்தியாகவும் விளங்கும் தேசியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமையால், உலக ரீதியில் மார்க்சிசத்தின் தோல்வியும் தவிர்க்க முடியாததாகிறது.

பெண்கள், நிற, சூழல், பிராந்திய போன்ற பல பிரச்சினைகளுடன் முக்கியமாக தேசியப்பிரச்சினை, மார்க்சிசம் தன்னை காலகாலமாக சுற்றி கட்டிவைத்துள்ள அரணை உடைத்து, ஒரு பரந்த சட்டத்தில் வைத்து பிரச்சினைகளை அணுகுவதற்கு வற்புறுத்துகிறது.

''மார்க்சிசமும் தேசியமும்'' என்ற மிகவும் விரிவான பகுதியில் கால் வைத்திருக்கிறோம். மார்க்சிசம், தேசியம் - இவை சுலபமாக கடந்துவிட முடியாத விடயங்கள். ஆதலால் இவை இரண்டும் சம்பந்தப்பட்ட சில குறிப்புக்களை கூறலாம் என நினைக்கிறேன். குறிப்பாக தேசியம் சம்பந்தமான மார்க்சிசத்தின் மீதான விமர்சனக் குறிப்புக்களாகக் கொள்ளலாம். சுருக்கமாக தேசியம் பற்றி மார்க்சிசம் கொண்டிருந்த நிலைப்பாடுகளைப் பார்த்தால்:

முதலில், தேசியமானது முதலாளித்துவ வர்க்கத்தின் கருத்தியலாக பார்க்கப்பட்டது. ஏனெனில், தேசியக்கருத்தியல் (Bourgeois ideology) வளர்ந்து வரும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு, நிலப்பிரபுகளுக்கு எதிராக சேவை செய்தது.

இரண்டாவது, தேசிய அரசின் வளர்ச்சி, ஆரம்ப கால முதலாளித்துவத்துக்கு அவசியமான தொன்று. ஆனால், முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் தேசியம் படிப்படியாக தேய்ந்து மறைந்துவிடும் என எதிர்பார்க்கப் பட்டது.

மூன்றாவது, தேசியப்போராட்டம் ஒரு பிரத்தியேக வடிவிலுள்ள வர்க்கப் போராட்டம். ஆகவே இது சர்வதேச ரீதியில் நடாத்தப்பட வேண்டிய போராட்டம். வர்க்க ரீதியில் ஏற்படும் கூர்மை தேசியப் போராட்டத்தை மழுங்கடித்து விடும் எனவும் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் 20ம் நூற்றாண்டின் உலக அரசியல் இந்த வாதங்களில் எதையுமே பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்பது யாவரும் அறிந்த விடயம்.

மேற்கு நாடுகளில் நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியிலும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியிலும் தேசியத்துக்கு நிறையவே பங்குகள் உண்டு. ஆனால், தேசியம் வெறுமையாக முதலாளித்துவத்துடன் மட்டுமே எழுவதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் முதலாளித்துவம் தன் வாசனையைப் பரப்ப முதலே சீனாவின் கெடுபிடியால் வியட்நாம் கொரியா போன்ற நாடுகளின் ஆரம்பகால வரலாற்றில் அத்தேச மக்கள் பலமான தேசிய உணர்வுகளை கொண்டிருந்தார்கள் என்பதை மேற்சொன்ன எடுகோளினால் விளக்குவது கடினமாகும்.

தேசத்தை மேற்கட்டுமானங்களில் ஒன்றாகக் கருதி அடிப்படையான உற்பத்தி முறையிலான மாற்றம் தேசியத்தை மாற்றிவிடும் அல்லது இல்லாது செய்து விடும் என்று மார்க்சியக்கருத்து, தேசத்தை பொருளாதாரக் காரணிகளே தீர்மானிப்பதாகக் குறைத்து மதிப்பிடுவது, வெறும் யாந்திரீகமானதாகும். இது தேசியத்தின் ஓரளவு சுயாதீனமான சக்தியை, அதன் அரசியலை, வரலாற்றை அடிப்படையில் யதார்த்தத்தை மறுக்கும் போக்காகும்.

மொஸ்கோவிலிருந்து, நம்மூர் காத்தான்குடி வரை வரலாற்றுப் போக்கு ஒருங்கமைவாக, படைக்கப்பட்ட நடு காத்திரத்துக்கேற்ப நடைபெறும் என எதிர்பார்த்து, உலகப்புரட்சிக்கான திட்டத்தில் பலவகைகளையும் நன்றாகத் திரட்டி ஒரு முழுமையான இயக்கமாக்கி செயல்படலாம் எனக் கொள்வது வரலாற்றுப் போக்குக்கு எதிரான செயல்பாடாகும்.

புரட்சிக்கான வேலைத்திட்டம் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப வகுக்கப்பட வேண்டும். முரண்பட்டு நிற்கும் தேசிய நிலைமைகளை முதன்மையாகக் கருத வேண்டும். தேசம் வெறுமையான மேற்கட்டுமானமல்ல. அது மொழி கலாச்சாரம் போன்று ஒரு infrastructure ஈழத்தில் தேசியம் எரியும் பிரச்சினையாக இருக்கும் போது சர்வதேசியம் என்ன சொல்கிறது என்பது முதன்மையானதல்ல. இங்கு சர்வதேசியங்கள் தான் வெறும் மேற்கட்டுமாணம். அதனால் தான் வரலாற்றில் சுலபமாக அவை தூக்கி எறியப்பட்டன.

தேசம் மேற்கட்டுமாணங்களில் ஒன்று. எனவே வரலாற்றில் நிரந்தரமில்லாத, தற்காலிகமான ஒரு வகையினை சேர்ந்ததாகும் என மார்க்சிசம் கொண்டிருந்த நம்பிக்கை மானுடத்தின் மானுடலியல் கூறுகளை, இயற்கையான போக்குகளை மறுதலித்த தொன்றாகும். தேசம் வரலாற்றில் நிரந்தரமற்றது என்பது உண்மையான போதிலும், பொய்யானதும் கூட. அதன் நிரந்தரமான, பொருள் பொதிந்த அம்சங்களைப் பார்க்க மார்க்சிசம் தவறியுள்ளது.

தேசம் வெவ்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்பட்டு ஒரு வரலாற்று விபத்தாகத் தோன்றுகிறது. வெவ்வேறு காரணிகளும் ஒரு சீரான வகையில் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் தேசத்தின் தோற்றத்துக்கு இல்லை. நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சி அல்லது இன்னோரன்ன காரணங்களினால் வரலாற்றின் ஒரு கட்டத்தில் தேசம் தோன்றுவதால், அந்த வரலாற்று உருவாக்கம் அதன் நிரந்தரமின்மையை சுட்டிக் காட்டினாலும், மாறமுடியாத அம்சமான கலாச்சார ஒழுங்கமைவு ஒரு பூச்சிய புள்ளியில் இருந்து தொடங்கிவிடுகிறது. இந்த தொடக்கப் புள்ளி சடங்குகள் சம்பிரதாயங்கள் போன்றவற்றை திரும்ப திரும்ப செய்வதற்கு வழிவிடுவதால், இந்த காலம் மீளமுடியாததாகிறது. இது வரலாற்றில் குடிகள் தொடக்கம் தேசம் வரை வளர்ந்து இன்னும் இன்னும், புதிய தொழில்நுட்ப வளர்ச்சியுடன் வளர்ந்து கொண்டு போக்கு அம்சமாக உள்ளதே ஒழிய, தேய்ந்து போகும் அம்சமாக இல்லை.

இப்படியாக மானுடத்தில் பதிந்துவிடும் அம்சங்கள் தேசியத்துக்கான பொருளை தருகிறது. இது போன்ற இயற்கையான, மானுடலியல் அம்சங்களை விளக்குவதற்கு குறுகிய மார்க்சிச பார்வையில் இடமில்லை.

வரலாற்றுப்பொருள் முதல் வாதத்தில், நாங்கள் என்ன உற்பத்தி செய்கிறோம், என்ன சிருஷ்டிக்கிறோம் என்று அறியலாமே ஒழிய, நாங்கள் எவற்றை தீர்மானிக்க முடியாது என்று அறியவோ, எவ்றால் உருவாக்கப் படுகிறோம் என்று அறியவோ வழியில்லை.

மார்க்சிசக் கருத்தான, ஐக்கியமான வரலாற்றுப்போக்கு ஒரு கற்பனாவாதக் கருத்தாகும். இது தேசம் என்ற கருத்தாக்கத்தை வரலாற்றில் இருந்து இல்லாது செய்வதற்கான கருத்தாக்கமாகும். ஐந்து வகையான உற்பத்தி முறைகளால் வரலாறு சீராக, ஒருங்கமைவாக முன்னேறுவதாக கொள்வது தேசிய, கலாச்சார வேறுபாடுகளை குறைப்பதாகும். உண்மையில் இது முதலாளித்துவ (Bourgeois analytic reason) ஆய்வு வகைகளைச் சேர்ந்ததே. மார்க்சிசத்துள் தோன்றிய இவ்வகையான போக்கு மேற்கின் Enlightenment மரபில் வேரூன்றியுள்ளது. இது கடைசியில் தனித்தன்மைகளை அழித்து சர்வதேச சோவியத் குடியரசை அமைக்க முடியும் என்ற லெனினிசத்தின் வினோதத்திற்கு இட்டுச் சென்றது. இதன் விளைவாக சர்வதேசத்தின் பேரில் ஐரோப்பியாவை மையப்படுத்தி (Euro Centrical) கருத்துக்கள் ஒரு புறமும், ரஷ்யப் பெருந்தேசிய வாதக்கருத்துகள் மறுபுறமும் வெளிக்கிட்டதைக் காணலாம். மேலும், இதற்கு முதலே ஏங்கல்சை சிலாலிக் தேசங்களை வரலாற்று தேசங்கள் என அழைககவும், ஆசிய மக்களை காட்டு மிராண்டிகள் என மார்க்ஸ் அழைக்கவும் வழிகோலியது.

Enlightenment மரபின் 'பகுத்தறிவு வாத' (Rationalist) மரபானது, உணர்வுகள், ஆளுமைகள் போன்ற மானுட அடிப்படைகளை மறுத்ததுடன் சுபாவமான அறிவு (Instinct) உள்ளுணர்வான அறிவு (Intuitive) போன்றவற்றை செல்லத்தகாததாக்கியது. இங்கு தேசியமானது சுபாவம் - Instinct சர்வதேசியமானது மனச்சாட்சி Conscience எப்பொழுதும் தேசிய சுபாவம், சர்வதேசிய மனச்சாட்சியுடன் சண்டையிட்டுக் கொண்டே இருக்கும். ஆனால் தேசியத்துக்கே மக்கள் சக்தி அதிகம் உண்டு.

தேசம் என்ற கருத்து வரலாற்றுக்கு எதிராக ஏற்படுத்தும் என்ற வகையில் உயர்ந்த பட்ச பொருள் முதல்வாதக் கருத்தாகும். மார்க்ஸ் நினைத்ததை விட வரலாற்றின் யதார்த்தம் இயங்கியல் தன்மையும் பொருட் தன்மையும் கூடியது.

சர்வதேசிய மயமாக்கல் என்பது மார்க்சுக்கு எல்லாத் தனித்தன்மைகளையும் ஒன்று கலத்தல் என்று பொருள்படும்போது, இன்றைய யதார்த்தத்தில் தேசிய, பிராந்திய அபிலாசைகளை உயர்த்தி பிடிப்பது பொருளாதார சமத்துவத்துக்கு அவசியமான தொன்றாகும். அடையாளத்தின் இயங்கியல் கருத்தானது அதாவது Dialectic concept of identity நிச்சயமாக வேறுபாடுகளை கணக்கில் கொண்டிருக்கும்.

ஒன்றுடன் ஒன்று தேசங்கள் உற்பத்தியிலும் பரிமாறலிலும் தங்கியிருத்தலானது, ஐக்கியத்துக்கான வழியாக இருந்தாலும் இது கலாச்சார வேறுபாடுகளுடன் இயங்கியல் முறையில் தொடர்புபடாமல் சாத்தியப்படாது.

இன்றைய E.E.C. (Europeon Economic Community)ஐ மனதிற் கொண்டால் பொருளாதார சமத்துவம் அல்லது ஐக்கியம் தேசங்களின் கலாச்சார வேறுபாடுகளுடன் இயங்கியல் முறையில் தொடர்புபட்டுள்ளது புலனாகும். ஜேர்மனியின் வட்டிவீதமும் டென்மார்க்கின் இறைமையைப் பற்றிய வாதமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுவதால் தான் அவர்கள் பொருளாதார சமத்துவத்தையோ, பொருளாதார ஐக்கியத்தையோ பேசகூடியதாக இருக்கிறது.

சர்வதேச பட்டாளிவர்க்க புரட்சியின் பேரில், பகுதியான தேசிய எழுச்சிகளை புறக்கணிப்பதானது அதாவது, சர்வதேசியத்தின் பேரில் தேசியம் தியாகம் பண்ண வேண்டும் என்று கோருவது உண்மையான எதிர்கால சோசலிசத்துக்கான அனுகூலங்களை மறுப்பதாகும். மார்க்சும் எங்கெல்சும் Czechs, Croats, Southern Sloves போன்ற தேசங்களின் எழுச்சியினை சர்வதேச பாட்டாளிவர்க்கத்தின் பேரில் மறுத்திருந்தனர். கொம்யூனிசம் என்ற பெயரில் அமைவுற்ற

பின்னரும் ஹங்கேரியிலும், செக்கோசிலாவாக்கியாவிலும் ரஷ்ய பெருந்தேசிய வாதத்துக்கெதிராக கிளர்ச்சிகள் நடைபெற்றன. இன்றைய கிழக்கைரோப்பாவில் எல்லாத் தேசிய இனங்களும் தமது சுய அடையாளத்திற்காக போராடுகின்றன. எத்தனையோ வருட சோசலிச ஆட்சியின் முடிவு என்ன? 1989 இல் போலந்தின் அரசியல் மாற்றம், ரஷ்யாவுக்கெதிரான தன்மையையும் கொண்டிருந்ததே. இத்தேசிய இனங்களின் போராட்டங்களை குறுகிய மார்க்சியத்தில் எங்கு வைப்பது? யூகோஸ்லாவியாவில் இவ்வளவு வருட சோசலிச ஆட்சிக்குப்பின் Croatsஉம், Bosniansஉம் ஒரே மொழியாக இருந்தும் கூட இன்று Serbian பெருந்தேசியத்தால் நசுக்கப் படுகிறார்களே இதை என்னென்பது? தியனமென் சதுக்கத்தில், மாணவர்கள் மீது ரதம் ஓடிய கொம்யூனிச தலைமைப்பீடம் கிழக்கைரோப்பிய எல்லா சோசலிச அரசுகளும் ரஷ்யப் பெருந்தேசியவாதத்தின் அடிப்படையிலேயே அமைந்தன.

திஸத்தியன் போராட்டக்காரர்கள் 18 வயதும் 20 வயதுமே உடையவர்கள். அவர்களுக்கு அரசியல் தெரியாது, அவர்களை படிப்பிக்க வேண்டும் என்று கூறுகிறதே இதை என்னென்பது? இப்படியாக உலக வரலாற்றில் முக்கியமாக நம்தேசம் உட்பட்ட தேசியத்தின் முக்கியத்துவம் உணரப்படும் வேளை, ஸ்கொட்லண்ட் தானாக தீர்மானித்தால் பிரிந்து போகலாம் என்று முதலாளித்துவவாதிகளுக்கே சொல்லும் தைரியம் உள்ளபோது, சோசலிசவாதிகள் மறுதலிப்பை என்னவென்பது?

குறைவிருத்தி நாடுகளில் காலனியாதிக்கத்தை மூலதனம், முதலாளித்துவ வளர்ச்சியை உந்து பண்ணும். ஆகவே சோசலிசத்திற்கான முன்நிபந்தனை பெறப்படும் என்றதன் பேரில் ஆதரித்தவர்கள் மூன்றாம் உலக நாடுகளில் நடைபெற்ற ஒவ்வொரு புரட்சியும்

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிதைந்த நம்பிக்கை-2



# ஒரே குழியில் நூறுமுறை இடறி விழுவதா?

ஒரு சில தசாப்தங்களைக்கடந்த இலங்கையின் ஆயுதப்போராட்டம் தீர்க்கமான திருப்புமுனையொன்றை தரிசிக்காமல் இன்னும் இரைந்து கொண்டே இருக்கின்றது. அடிக்கடி பயனபடுத்தப்படும் பழமொழி அர்த்தம் இழப்பது போல் செல்களின் சில்மிஷங்களும் பீரங்கிகளின் பிரசாரமும் எத்தகைய வினைமையையும் (Seriousness) ஏற்படுத்தாமல் மக்களின் சமூக வாழ்வில் ஒரு சாதாரண அம்சமாக மாறியுள்ளது. "War begins with complaint its middle is secret talk and ends with a disaster" என ஒரு அரபுப்பழமொழி சொல்லி வைத்தது போல் நித்தம் நித்தம் நிகழ்கின்ற யுத்த தேசத்து இரத்த மழையில் செத்து மடிவது, மானிடம் என்ற விலைமதிப்பற்ற பெரும் வளம் மாத்திரம்தான். எனவே, இத்தகைய ஒரு பெரும் பின்புலத்தின் நின்று இலங்கையின் புரையோடிப்போன இனப்பிரச்சினையையும் போராட்டத்தையும் சிந்தித்துப் பார்ப்பது ஒவ்வொரு பிரஜையினதும் கடப்பாடாகும்.

பல்வேறு சமூகத்தவர்கள் வாழும் இந்த நாட்டிலே மூண்டிருக்கும் ஆயுதப்போராட்டத்தின் பின்புலம் தூண்டல்கள். விளைவுகள் என்பனவெல்லாம் இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் தெளிவாகத் தெரிந்த விடயமாகும். உண்மையில் புலிகள் முன்னெடுத்துச் செல்லும் இந்த யுத்தம் சுய நிர்ணயத்துக்கான போராட்டமா? (War for self - determination) அல்லது இனப் போராட்டமா? (Ethnic conflict) என்ற கேள்வி இயல்பானதும் விடைகாண வேண்டியதுமாகும்.

யுத்தம் ஆரம்பத்தில் இனமோதலாகவே மேற்கிளம்பியது. பின்னர் அதனையொட்டிய தமிழ் மக்களின் அடிப்படை உரிமைப் புறக்கணிப்பின் அடையாளமாக சுய நிர்ணய சிந்தனை வேரூன்றத் தொடங்கியது எனலாம். புலிகளது போராட்டம் இனரீதியான மோதலுக்கும் உரிமை மீறல்களுக்கும் தூபமிட்டிருப்பினும் பல்வேறுபட்ட கண்ணோட்டங்களில் நோக்கும் போது புலிகளது ''போராட்ட உணர்வு'' நியாயமானதாகும்.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் அதே நாட்டின் ஏனைய பிரதேசத்தில் வாழும் மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை சமமாக அனுபவிக்கக் கொண்டிருக்கும் உரிமையே சுயநிர்ணய உரிமை என்ற வகையிலும் பேரினவாத சர்வாதிகார சித்தாந்தம் பேசப்படும் இந்த நாட்டின் பேரினவாதப் புயலும் புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்துவதை நிஜமறிந்த எவரும் நிராகரிக்கமாட்டார்கள்.

இந்த இடத்தில் நாம் இன்னொரு உண்மையையும் புரிந்து கொள்கிறோம். அதாவது, ஆயுதப்போராட்டம் அல்லது அகிம்சை முறையிலான போராட்டம் என்பவற்றினூடே சிறுபான்மையினர் சுய நிர்ணய உரிமை கோருவது என்பது ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினையாகும். தேசிய அரசு இக்கோரிக்கை தொடர்பாக அஞ்சுவதும் ஒருமைப்பட்டுள்ள தேசிய எல்லைகள் பிரிந்து போய்விடும் என்பதற்காக போராட்டக் குழுவை நசுக்க முனைவதும் இன்றைய சூழ்நிலை எமக்குச் சொல்லும் இன்னொரு பாடமாகும்.

இத்தகையதொரு பகைப்புலத்தில் இலங்கையின் விடுதலைப் போராட்டம் எத்தகைய குறிக்கோளையும் இலக்கையும் அடைய வேண்டும். அதற்காக எந்த வகையான இராணுவ அரசியல் ரீதியான செயற்திட்டங்களை முனைப்போடு முன்கொண்டு செல்ல வேண்டுமென்பதையும் தமிழ் சமூகத்தின் எல்லாப் புத்திஜீவிகளும் கல்விமான்களும் உணர்ந்து செயற்பட வேண்டியதொரு காலம் இதுவாகவே இருக்க முடியும் என்பதைத் தொட்டுக்காட்ட வேண்டிய தேவையில்லை எனலாம் ஏனெனில், நீண்டதொரு காலப் பகுதியைக் கடந்த யுத்தம் மூலம் அடைந்த வெற்றிகள், ஈட்டிய சாதனைகள் என்பன எந்தளவு தமது கோரிக்கையை எய்த துணை நின்றுள்ளன என்ற வினா மிக முக்கியமானதாகும். உலக அரங்கில் பல போராட்டக் குழுக்கள் தமது கோரிக்கையை கிட்டியதொரு காலத்தில் அடைந்து கொள்ளும் போது புலிகளின் போராட்டம் நீண்டு கொண்டு செல்வதற்கான காரணம் என்ன என்ற வினாவிற்கு ஒவ்வொரு தமிழ் பிரஜையும் விடை கண்டேயாக வேண்டும். அப்போது மாத்திரமே கடந்த கால வரலாற்றின் கோளாறுகளைச் சீர்செய்து புதிய வழிகளில் சிந்திக்க முடியும்.

உண்மையில் புலிகள் தரப்பினர் தமது கோரிக்கையை நிறைவுசெய்ய முடியாமைக்கான உண்மையான காரணம் சில வேளை கசப்பாக இருந்தாலும் ஒரு போராட்டக்குழு என்ற வகையில் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டிய காலமும் தேவையும் வந்துவிட்டது. அடுத்து சிறுபான்மை சமூகத்தின் ஓர் அங்கத்துவன் என்ற வகையிலும் கிழக்கில் வாழும் ஒரு அவதானி என்ற வகையிலும் நான் உணர்ந்த சில அம்சங்களை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இவை அனைத்து முஸ்லிம்களின் கருத்தாகக் கூட இருக்க முடியும்.

இன்றைய போராட்டம் நீண்டு செல்வதற்கான அடிப்படைக் காரணங்கள் இரண்டாகும்.

01. பேரினவாத சிங்கள அரசியல் சக்திகளின் புறக்கணிப்பு.

02. பொதுவாக தமிழர் மத்தியிலும் குறிப்பாக புலிகளின் தலைமைத்துவங்களுக்குமிடையே நிலவும் உள்ளார்ந்த முரண்பாடுகள்.

எந்தவொரு சமூகமும் ஒரு நியாயமான கோரிக்கையை (Legitimate demand) நோக்கிய தனது போராட்ட அணுகுமுறையில் மிகக் கிட்டிய எதிர்காலத்தில் வெற்றி பெற வேண்டுமாயின் மூன்று முக்கிய சக்திகள் ஒருங்கிணைய வேண்டும். இது இஸ்லாம் சொன்ன யுத்த போதனை என்றாலும் எல்லா போராட்ட முனைப்புக்கும் பொருத்தமானதாகும்.

1. கொள்கைப்பலம்.
2. சகோரதப்பலம்.
3. ஆயுதப் பலம்.

இவை ஒன்றிலேனும் குறைபாடு ஏற்படும் போது போராட்டம் நிச்சயம் தோல்வியைத் தழுவும் என்பதையே வரலாறு எமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. இவை மூன்று சக்திகளும் எந்தளவு புலிகளின் போராட்டத்தில் பங்காற்றுகிறது என்பது ஒரு பெரும் கேள்விக் குறியாகும்.

ஒரு சமூகம் தனது சுயநிர்ணய உரிமைக்காக யுத்தக் களத்தில் குதிக்கின்றபோது அச்சமூகத்தின் எல்லாத் தனிமனிதர்களும் போராடுவதில்லை. எனினும் குறிப்பிட்ட ஆயுதக் குழு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஏனைய அச்சமூக உறுப்பினர்கள் முடியுமான எல்லா உறுதிப்பாட்டையும் பின்னணிப் பணிகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும். குறிப்பாக புத்திஜீவிகளுக்கு இதில் பெரும்பங்குண்டு. இதனையே சகோதரப்பலம் என மேலெழுந்தவாரியாக இங்கு நாம் குறித்துக் காட்டுகிறோம். இது எந்தளவு புலிகளது போராட்டத்திற்கு எட்டியுள்ளது என்பதை தமிழர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்று இலங்கையில் ''புலிகள் போராட்டம் வேறு தமிழர் பிரச்சினை வேறு'' என்ற கருத்துருவம் எல்லா சமூகங்கள் மத்தியிலும் மிக ஆழமாக வேரூன்றியுள்ளதை யாரும் மறுதலிக்க முடியாது. தற்போதைய அரசு இந்தச் சிந்தனையை ஆழப் பதித்து முழுத் தமிழ்ச் சமூகத்தையும் மொத்தமாக சூட்சுமமாக புறக்கணிக்கும் ஒரு முயற்சியில் வெற்றியும் அடைந்துள்ளது. இவ்வாறான ஓர் ஒரங்கட்டலுக்கு இட்டுச் சென்றது நான் முன்குறித்துக் காட்டிய சக்தியில் தமிழ்ச் சமூகம் பலவீனப்பட்டதேயாகும். இந்த இருதுருவ முரண்பாட்டுக் கருத்தோட்டத்துக்கான அடிப்படைக் காரணங்கள் இரண்டாகும்.

1. தமிழ்ச் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் எண்ணிக்கைகளும் வேறுபட்ட அரசியல் அபிலாஷைகளுமாகும். ஏனெனில், தமிழர்கள் இந்த நாட்டிலே பல கட்சிகளாகப் பிரிந்து நிற்கும் போது எத்தகைய தொரு அரசியல் வலுவாண்மையையும் (Political power) அவர்களிடத்தில் தக்க வைக்க முடியாத நிலை ஏற்படும். அந்தத் துர்ப்பாக்கிய நிலையே இன்று ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்சிகள் வித்தியாசமான அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து அரசியல் இலாபத்தையும் சந்தர்ப்பவாத அரசியலையும் இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. இதற்கு நாம் நிறைய உதாரணங்களைக் கூற முடியும்.

கடந்த பொதுத்தேர்தலின்போது அம்பாறை மாவட்டத்தில் ஒரு பாராளுமன்ற ஆசனத்தைக்கூட தமிழர்கள் தட்டிக்கொள்ள முடியாமல் போனமைக்கு இதுவே அடிப்படைக் காரணமாகும். அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் தொகை கூடுதலாக விருப்பினும் அரசியலில் அவர்களுக்கு எத்தகைய பலமும் தனித்துவம் இல்லை என்பதை தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளே நிரூபித்து விட்டன. இது எவ்வளவு பெரிய துர்ப்பாக்கியம் என்பதை பாமரர் முதல் படித்தவர் வரை உணர்ந்து கொள்ள வேண்டும்.

2. இந்தக் கட்சிகளையொட்டிய ஆயுதக் குழுக்களுக்கிடையே நிகழ்ந்த உள்முரண்பாடும் மோதலும். குறிப்பாக புலிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். என்பவற்றிடையே நடந்தேறிய மோதல் தமிழர்கள் ஆயுதரீதியான ஒற்றுமைச் சக்திகளல்ல என்ற கருத்தை இலங்கை அரசிடமும் குறிப்பாக சிங்கள இராணுவத்திடமும் ஏற்படுத்தியுள்ளது.

இதே போன்று புலிகளது போராட்டம் ஒரு கொள்கை ரீதியானதல்ல என்பதற்கும் நிறைய உதாரணங்களை புலிகளும் தமிழ்ச் சமூகமும் ஏற்படுத்தியுள்ளன. புலிகளது தலைமைத்துவம் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

### சமகால சர்வதேச யுத்த அணுகுமுறைகளும் புலிகள் தலைமைத்துவ உள் முரண்பாடுகளும்

சமகால உலகின் அனைத்துப்போராட்டங்களும் இரண்டு அணுகுமுறை ஊடாக முன்னெடுத்துச் செல்லப் படுகின்றன. இன்னொரு வாசகத்தில் குறிப்பிடின் போராட்டம் இரண்டு பக்கங்களில் மேற் கொள்ளப்படுகிறது.

1. ஆயுத ரீதியான போராட்டம் (War with weapon)
2. அரசியல் ரீதியான போராட்டம் (Political war)

இங்கு அவதானிக்கத் தக்க முக்கிய அம்சம் யாதெனில் ஒரே கொள்கை அச்சில் வார்க்கப்பட்ட ஏக இலக்கையும் கோரிக்கையையும் கொண்ட ஒரே குழுவோ அல்லது இயக்கமோ இந்த இரண்டு வகையான போர் உபாயங்களையும் பின்பற்றுகின்றன. இந்த வகையில் ஒரு கொள்கைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் ஆயுதக் குழு அல்லது இயக்கம் மிக கிட்டிய எதிர்காலத்தில் தனது கோரிக்கையை அடைய சாத்தியம் பிறக்கிறது.

இன்று உலகில் ஒரு பெரும் சக்தியாக உருவெடுத்துள்ள இஃ்வானுல் முஸ்லிமுன் இயக்கம் இதற்கு சிறந்ததோர் முன்மாதிரியாகும். இது இலட்சக்கணக்கான போராட்ட வீரர்களைக்கொண்ட ஒருபோராட்ட இயக்கமாகவும் ஆயிரக்கணக்கான பெரும் புத்திஜீவிகளைக்கொண்ட ஓர் அரசியல் சக்தியாகவும் ஏக காலத்தில் செயற்பட்டு வருகின்றது. இதனால் பாரியளவு முன்னேற்றத்தையும் இலக்கையும் அது எய்தியுள்ளது. இங்கு இன்னொரு அம்சம் யாதெனில் இரண்டு வகைப் போராட்டத்துக்கும் இரண்டு தலைமைத்துவம் உண்டு. ஒன்றின் செயற்பாட்டில் திட்டமிடலில் மற்றையது தலையிடுவதில்லை. அதே போல் ஒன்றினால் ஏற்பட்ட விளைவுக்கு மற்றையது பொறுப்பு வாய்ந்ததுமல்ல. இன்று பலஸ்தீனில் போராடிவரும் 'ஹமாஸ்' என்ற ஆயுதக்குழு இஃ்வான்களின் ஆயுதக்குழுவாகும். அதன் தலைமைத்துவப் பொறுப்பு அஹ்மத் யாஸினிடமும் இஃ்வான்களின் அரசியல் தலைமைப் பொறுப்பு இன்று அமெரிக்க சிறையிலுள்ள கலாநிதி மூஸா அபூமார்ஸுக்கிடமும் உள்ளது. இதுதான் இன்றைய விடுதலைப் போராட்டத்தின் நவீன அணுகுமுறையாக பல சர்வதேச அரசியல் ஆய்வாளர்களால் சிலாகிக்கப்படுகிறது. இதனை இரட்டைப் போராட்ட உத்தி. (Twice war strategy) எனலாம்.

மேற்குறித்த கண்ணோட்டத்தில் அணுகுவோமாயின் இலங்கையின் புலிகளது விடுதலைப் போராட்டம் இந்த நவீன உத்திகளோடு எவ்வளவு தூரம் இயைந்து செல்கிறது என்பது பெரும் கேள்விக்குறியாகும். புலிகளது போராட்டம் ஆயுதரீதியானதாக மாத்திரமே அமைந்துள்ளதோடு ஏக தலைமையையும் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

→

www.tamilarangam.net



எது எவ்வாறிருப்பினும் தலைமைத்துவத்திலேயே உள்ள முரண்பாடுகளும் மோதல்களும ஒரு சகஜமான அம்சமாக மாறியுள்ளது. மாத்தையா போன்ற முக்கிய புள்ளிகளை புலிகள் கொன்றதும் அன்ரன் பாலசிங்கம் போன்ற அரசியல் நிபுணர்களை இன்றைய சூழ்நிலையில் நெருக்கடிக்குள்ளாக்கியிருப்பதும் இந்த உள் முரண்பாட்டைத் தெட்டத் தெளிவாகவே புடம்போட்டுக் காட்ட போதுமான சான்றுகளாகும்.

ஒரு போராட்டத்தை குறிப்பிட்ட சில தனிப்பட்ட நலனுக்காகவும் இலாபங்களுக்காகவும் முன்னெடுத்துச் செல்லும் போது போராட்டம் கொள்கை அச்சிலிருந்து பிறழ்ந்து தலைமைத்துவ மோதலுக்கும் போட்டிக்கும் இட்டுச் செல்வதோடு இருக்கும் தலைமைத்துவம் சர்வாதிகாரப் போக்கு (Totalitarianism), தன்முனைப்பு வாதம் (Ego - centrism) கொண்டதாக மாற்றம் அடையும். இத்தகையதொரு நிலைப்பாட்டையே இன்றைய புலிகளின் தலைமைத்துவம் பிரதிபலிக்கிறது என்பதை நடுநிலையின்நின்று அவதானிக்கும் எந்த ஆய்வாளர்களும் நிச்சயம் உறுதி கூறுவர்.

### புலிகளுக்கு தேவையான ஆதரவு

### முஸ்லிம் சமூகத்தின் மனோ நிலை

புலிகளது ஆரம்பகால போராட்டங்களின் போது முஸ்லிம்கள் பொருள் ரீதியாகவும் ஏனைய பல்வேறு வழிகளிலும் பல்வேறுபட்ட பின்னணிச் சேவைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வந்துள்ளனர் என்பது ஒரு நிராகரிக்க முடியாத நிஜமாகும். இதைவிட ஒரு படி மேல் சென்று முஸ்லிம் இளைஞர்களே தமிழ்ப் போராட்டக் குழுவில் இணைந்தும் தோளோடு தோள் நின்று போராடியிருக்கிறார்கள். இது தூய இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஏற்புடமையான விடயமா என்பது ஒரு புறமிருக்க இந்நாட்டில் முஸ்லிம்கள் தமிழ் சமூகத்தை புலிகளைச் சகோதரர்களாக மதித்திருக்கிறார்கள் என்பதை பிரபாகரன் கூட மறுக்கமாட்டார். இத்தகைய காலப் பகுதியில் புலிகளது போராட்டம் கொள்கை ரீதியானதாகவும் இலட்சியவாதத்தோடும் முன்னேறி வந்தது. திடீரென பிற்பட்ட காலப்பகுதியளவில் புலிகள் தமது ஆயுதக் குழுவில் அங்கம் வகித்த முஸ்லிம் இளைஞர்களையே கொல்லத் தொடங்கியது மட்டும் அன்றி காத்தான்குடியில் தொழுதுகொண்டிருந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை கொன்று குவிக்கும் நரமாமிச வேட்டையில் இறங்கினர். சம்மாந்துறையில் முஸ்லிம்கள் வேட்டையாடப்பட்டனர். ஏறாவூரில் முஸ்லிம் பெண்களில் கர்ப்பத்தில் இருந்த குழந்தைப் பிஞ்சுகளைக்கூட ஆயுதத்தால் தோண்டி எடுத்த புலிகளின் இரத்தக் காட்டேறித்தனமும் மிலேச்சத்தனமும் தலைத்தூக்கத்தொடங்கியது. வடமாகாணத்திலிருந்து சுமார் 60 ஆயிரம் முஸ்லிம்கள் கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்து அநாதரவான அநாதைகளாக உடுத்த உடையோடு துரத்தப்பட்டனர். முஸ்லிம்களின் அகதிமுகாம்களைப் பார்க்கும் போது அவர்கள் படும் அல்லல்களையும், இன்னலையும் எந்த அரசு தீர்த்து வைக்கிறது. அடிப்படைத் தேவைகளையே நிறைவு செய்யாத அவர்களுக்கு அவர்களது அரசியல் உரிமைகளுக்குப் பதிலாக 'அழுத பிள்ளைக்கு மிட்டாய் நீட்டும்' முயற்சியில் மாத்திரமே அரசு ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இந்த இன்னல் நிறைந்த துர்ப்பாக்கிய சோக நாடகத்தின் மூல பிதாக்கள் புலிகள் என்பது வெள்ளிடை மலை. இங்கே ஒரு ஆச்சரியம் நிறைந்த அம்சம் யாதெனில், புலிகளது இந்த 'உண்ட வீட்டுக்கு இரண்டகம்' செய்யும் முயற்சியில் இன்னும் ஒய்ந்தபாடில்லை. வாழைச்சேனை, ஏறாவூர் பகுதியிலும் திருகோணமலை மாவட்டத்திலும் தோப்பூர், மூதூர் கிண்ணியாப் பிரதேசங்களிலும் புலிகள் முஸ்லிம்களோடு நடந்து கொள்ளும் விதம் இந்த உண்மையைப் புலப்படுத்த வல்லதாகும். எனவே ஒரு போதும் ஒரு கொள்கைப் போராட்டத்தின் இலட்சணங்களாக அடையாளங்களாக இவற்றைக் கணிப்பிட முடியாது. உண்மையில் இலங்கையில் இன்றைய புலிகளது போராட்டம் இலட்சியவாதத்திலிருந்து பிறழ்ந்து பயங்கரவாதம் (Terrorism) என்ற இன்னொரு பரிணாமத்தை தரிசித்துள்ளது. எந்தக் கட்டத்திலும் ஒரு சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் பயங்கரவாதமாக மாறக் கூடாது. நிச்சயமாக யதார்த்தத்திற்கும், நீதிக்கும் புறம்பான வழிமுறைகளை கையாள்வது ஒரு உண்மையான போராட்டத்தின் யுத்த தர்மமாக அமையமாட்டாது. இஸ்லாமிய உலகில் நடந்து கொண்டிருக்கும் போராட்டங்கள் புலிகளுக்கு ஒரு பெரும் முன்மாதிரியாகும். பொஸ்னியா, செச்சினியா, பலஸ்தீன், காஷ்மீர் ஆகிய அனைத்து நாடுகளிலும் உரிமைப் போராட்டங்கள் மனிதாபிமான நடைமுறைகளையும் ஜனநாயக விழுமியங்களையும் மதித்தே மேற்கொள்ளப்படுகின்றது. இதுவரை சுமார் 80ஆயிரம் முஸ்லிம் பெண்கள் சேர்பிய மிருகாபிமானிகளால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாலும் பொஸ்னிய முஸ்லிம் படையினர் எந்த சேர்பிய பெண்ணையும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக இஸ்லாத்துக்கு எதிரான மேற்கின் தகவல் தொடர்பு சாதனங்கள் குறித்துக் காட்டவில்லை. அதேபோன்று இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் சேர்பியர்களால் கொல்லப்பட்டாலும் முஸ்லிம் படைகள் சேர்பிய பொதுமக்களை திட்டமிட்டு கொல்லும் முயற்சியில் ஈடுபட்டதும் இல்லை. எனவே போராட்டம் என்பது இரண்டு இராணுவ சக்திகளுக்கிடையிலானதே தவிர இனத்துடைப்பை, இன அழிப்பை, இன முரண்பாட்டை நோக்காகக் கொண்டதல்ல.

இலங்கையின் புலிகள் இயக்கம் முஸ்லிம் சமூகத்தின் உயிர், செல்வ நலன்களுக்கு எதிராக பாதகமாக நடந்து கொள்வது ஒரு போதும் புலிகளது இருப்புக்கு உறுதியான சூழலை பெற்றுத்தராது. மாறாக சிறுபான்மையினரின் உரிமைக்காக போராடும் இயக்கம் என்ற வகையில் ஏனைய சகோதர சிறுபான்மையினரது ஒத்துழைப்பையும் புலிகள் பெற வேண்டும். அதை இப்போது புலிகள் தேடுவது போல் ஆயுத முனையால் ஏழை முஸ்லிம்களின் எளிய உடைமைகளை பறிப்பதன் மூலம் பெறமுடியாது என்பதையும் நாம் நினைவில் கொள்வோம்.

எனவே இத்தகைய இக்கட்டான காலப்பகுதியில் பேரினவாத இன உணர்வின் புதிய அலைகள் உத்தியோகபூர்வ உறுதிப்பாடுகளால் உருக்கொடுக்கப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ் சமூகமும் புலிகளும் ஒரே ஏக சக்தியாக மாற வேண்டும். முஸ்லிம்களிடமிருந்து இழக்கப்பட்ட ஆதரவைப் பெறுவதற்கான அடிப்படை செயல் மாதிரிகளை துரிதமாக இனம் கண்டு செயற்படுத்த வேண்டும். ''முஸ்லிம் அகதிகளும் மீள் குடியேற்றமும்'' இந்த இடத்தில் முக்கியதொரு கவனம் செலுத்தத்தக்க அம்சமாகும். இவற்றுக்கு மாறாக புலிகளது போராட்டம் கடந்த கால வரலாற்றில் விட்ட அதே தவறுகளை மீண்டும் மீண்டு செய்து ஒரே குழியில் நூறு முறை இடறி விழும். ''குருட்டுத் தனத்தை'' பின்பற்றிக்கொண்டிருந்தால், நிச்சயமாக இலங்கையின் வரலாற்றில் புதியதோர் திருப்பு முனை ஏற்படுவதற்குப் பதிலாக தமிழ் சமூகத்தின் பல பரம்பரை இளைஞர்களும், யுவதிகளும் சிங்கள இராணுவத்தின் ஆயுத ரவைகளில் அழிந்து போகும் அதே துரதிருஷ்ட நிலை தொடர்ந்து கொண்டே இருக்கும். யுத்தம் என்பது ஒரு போதும் முடிந்த முடிவல்ல. அது இலக்கை அடைவதற்கான வழிமாத்திரமே என்ற உண்மையை புலிகளும் அரசும் உணராதவரை நாடு அமைதியின் பூங்காவனமாக மாறுவதற்கு பதிலாக மானிட நேயத்தை புதைத்த மயானமாக மாத்திரமே இருக்கும். எனவே இந்நாட்டின் புத்திஜீவிகளே! கல்விமான்களே!! ஒரு கணம் இந்த யதார்த்தத்தை உணர, சிந்திக்க நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

– இறக்காமம் றவூப்

# தம்பி சற்று மெலிந்தானானால் அண்ணன் தானடிமை கொள்ளலாமோ?




வ.ஐ.ச. ஜெயபாலன்

சரிநிகரில் பலர் கட்டுரை எழுதுவது பக்கங்களை நிரப்பவோ வயிற்றை நிரப்பவோ அல்ல. அறப் போராட்டத்துக்காவும், போராட்டங்களுக்கான அறத்துக்காவும் நம்மிடம் உள்ள ஒரே ஆயுதம் பேனா மட்டுமே. சரிநிகர் எழுத்தாளர்களுக்குள் அவர்கள் எந்த இனப் பிரிவையோ கருத்து வட்டங்களையோ சார்ந்தவர்களாயினும், அவர்களுக்குள் பொதுவாக கனல்கிற நெருப்பு சத்தியாவேசம் தான். மேலும் அவர்கள் தாங்கள் சார்ந்திருக்கிற பகுதி குரலில்லாத மக்களின் குரலாகவும் மனச்சாட்சியாகவும் இருக்கிறார்கள். இந்த விடயங்களை அதிகாரத் தரப்பினர்- அவர்கள் எந்த இனத்தின் அதிகாரத் தரப்பினராக இருப்பினும் - நிராகரித்து விட முடியாது. தெய்வம் நின்று கொல்லும் என்பதும் தர்மம் வெல்லும் என்பதும் நமது வாழ்வியக்கத்தின் ஆதாரமான நம்பிக்கைகளாகும். காலம் காலமாக எல்லாத் தரப்பு கொடுங்கோலர்களும் இறுதியில் வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் வீசப்பட்டு வருகிறதை காண்கிற போது இந்த நம்பிக்கை உறுதிப்படுகிறது. கிட்லர், முசோலினி, மார்க்கோஸ் போன்ற அரச பயங்கரவாதிகள் மட்டுமன்றி ஸ்டாலின், பொல்பொட் போன்ற விடுதலை இயக்கத் தலைவர்கள் கூட தமது அதர்மங்களை தாம் கொன்றவர்களின் பிணங்களை தமது விடுதலை இயக்கக் கொடியினால் மூடி மறைக்க முடியாமல் அச்செயல்கள் அருவருப்பாக வெளிப்பட்டதுடன் அவர்களும் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் மீளமுடியாத வகையில் வீசி எறியப்பட்டுள்ளனர். இதனை சந்திரிகாவோ பிரபாகரனோ அஷ்ரஃப்போ அல்லது எந்த ஒடுக்கும் அரசுகளதும் அல்லது போராடும் இனங்களினதும் தலைவர்களோ உதாசீனம் செய்து விட இயலாது. ஆனால் துரதிஷ்ட வசமாக இலங்கை அரசியல் வரலாற்றில் எல்லாத் தரப்பிலும் அறம் பிழைத்தே வந்துள்ளது. தொடர்ந்தும் பிழைத்தே வருகிறது. இதனால் நாம் ஒரு முறை எய்திய விடயத்தையே சிலசமயங்களில் இடங்களின் பெயர்களை மாற்றி திரும்பத் திரும்ப எழுதவேண்டியுள்ளது.

நமது போராட்டத்தைக் கொச்சைப் படுத்திய தவறுகளில் இமாலயத் தவறு குற்றமேதுமற்ற வடபகுதி முஸ்லிம் மக்களது சொத்து சுகங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு அவர்களை அவர்களது பாரம்பரிய மண்ணில் இருந்து ஓட ஓட விரட்டியடித்தமை தான். இது நமது போராட்டத்துக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமாகும். இது நமது போராட்டத்தை சர்வதேச அரங்கில் பயங்கரமாக்கயது. தேசிய அரங்கில் பல வருடங்களுக்குப் பின் தள்ளிவிட்டது.

நமது மாண்புமிகு போராளிகளின் இரத்தத்தினால் புனிதப்பட்டிருந்த வழிகள் நெடுக நமது முஸ்லிம் சகோதரர்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர். நமது செல்வங்களை தேய்த்த படை அதுதான். நமது தோல்விகளின் கதை அது தான். இந்த அளவுக்கு நம்மை சர்வதேச அரங்கில் பயங்கரவாதிகளாக கறைப்படுத்தியது வேறு ஒரு விடயம் இன்னமும் விசாரணையில் இருக்கிற ராஜீவ் காந்தி அவர்களது கொலைச்சம்பவம் தான்.



கலைத்தீர்கள் அகதிமுகாம்களில் ''யா அல்லாவே'' என்று கண்ணீர் விட்டழுகிற அந்த மக்கள் இன்று வரை உம்மை நிந்திக்கவில்லை யென்பதை நீங்கள் அறிவீர்களா? யாழ்ப்பாணம் இராணுவத்தின் கையில் வீழ்ந்து. பயண மார்க்கங்கள் இலகுவானதும் வெளிநாடுகளுக்கு ஓடிப்போன தமிழர்கள் எல்லாம் திரும்பி வந்து யாழ்ப்பாணம் போய் வருகிறார்கள்.

கொழும்புக்கு ஓடி வந்த தமிழர்கள் யாழ்ப்பாணம் போய் வருகிறார்கள் நீங்கள் துரத்திவிட்ட அந்த உத்தமர்களோ யாருமே நிராகரிக்க முடியாத தமது தாய்மண்ணுக்கு, தமது பாரம்பரிய மண்ணுக்குப் போய்வர உங்கள் சம்மதத்தைக் கோரி நிற்கிறார்கள். உங்களுக்கு காது கேட்கிறதா...?

இதைவிடக் கொடுமை நம் தமிழர்கள் எந்தவித நாகரீகமும் இன்றி (இதற்குள் நமது கலாசாரம் பற்றி வாய்கிழிகிற பீற்றல்கள் வேறு) எரிகிற வீட்டில் கொள்ளை அடிக்கிறது போல முஸ்லிம் மக்களது நிலபுலன்களை வீடுவாசல்களை கடைகண்ணிகளை பகுதி அரசு கட்டுப்பாட்டிலுள்ள மன்னாரிலும் யாழ்ப்பாண குடாநாட்டிலும் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள வடகிழக்கு மாகாண பகுதிகளிலும் அபரித்து வைத்து ஆண்டனுபவிக்கிறார்கள். இவர்களுள் சிலர் முஸ்லிம் உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு வாடகை செலுத்துவதாகத் தெரிகிறது. ஏனையவர்களின் இத்தகைய குற்றச் செயல்கள் தொடர்பாக யாழ் அரசாங்க அதிபரும் விடுதலைப் புலிகளின் தலைவர்களும் எவ்விதம் அனுமதிக்கிறார்கள் என்று தெரிய வில்லை. இந்த காட்டுமிராண்டித் தனத்துக்கு உடனே சாவுமணி அடிக்கப்பட வேண்டும். இந்தத் தமிழர்களை விட மோசமான ஒரு இனத்துரோகி இனி மேல்தான் பிறந்து வரவேண்டும்.

இத்தகையவர்கள் முஸ்லிம் உரிமையாளர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு தமது தவறுகளுக்கு பிராயசித்தம் செய்யப்படுவதை யாழ்ப்பாணம், மன்னார் அரசாங்க அதிபர்களும் புலிகளின் மாவட்டத் தலைவர்களும் உடனடியாக உறுதிப் படுத்த வேண்டும். வடபகுதி முஸ்லிம் உரிமைக்கான அமைப்பின் ஊடாக(முகவரி: 15,A ரோஹினி வீதி, கொழும்பு - 06) வடபகுதி முஸ்லிம்களுடன் தொடர்பு கொள்ள வகை வாய்ப்புகள் உள்ளன. கிழக்கு மாகாணத்து முஸ்லிம்கள் பலரது வயல் நிலங்கள் தொடர்பாகவும், கால்நடைகள் தொடர்பாகவும் * விடுதலைப் புலிகள் அமைப்பும் இத்தகைய நடைமுறைகளை உடனடியாக அமுல்படுத்திட வேண்டும்.

வடபகுதி முஸ்லிம்கள் தொடர்பாக தவறு நடந்துவிட்டது என்று பிரபாகரன் அவர்கள் உட்பட விடுதலைப் புலிகளின் பெருந்தலைவர்கள் பலர் வருத்தம் தெரிவித்து பல ஆண்டுகள் கடந்து விட்டன. காரியம் தான் எதுவும் நடக்கவில்லை. இந்தப் பயங்கரமானதும், அநீதியானதுமான மௌனத்தின் அர்த்தம் என்ன? தமிழர்களுள் ஒருவன் என்கிற வகையில் நானும் இந்தக் கறைகளைச் சுமக்கிறேன். மனிதர்களுள் ஒருவன் என்கிற வகையில் நானும் இந்த அகதிகளின் கண்ணீரில் துடிக்கிறேன்.

தமிழ்ப்போராளிகளின் தலைவர்களை வலியுறுத்தி நான் கேட்கிற விடயம் இதுதான்.

1. வடபகுதியிலும் வெளியிலும் இன்னமும் அநீதியாக தடுத்துவைத்திருக்கிற முஸ்லிம் சகோதரர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள்.
2. வடபகுதி முஸ்லிம் மக்கள் தத்தமது பாரம்பரிய பிரதேசங்க

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அருந்ததியர் சமூகமும் அருந்ததியர் மீட்பு முன்னணியும் உள்ளூராட்சிசபைத் தேர்தலும்

— கோமதி

"நிபந்தனையின்றி எந்த சக்தியையும் ஆதரிக்காதீர்கள். எந்த பிற்போக்கு சக்திகளுடனும் கூட்டுச் சேராதீர்கள். சமூக சக்தியாக ஓரணி திரளுங்கள்"

உள்ளூராட்சிச் சபை தேர்தல் குறித்து அண்மையில் "அருந்ததியர் மீட்பு முன்னணி" எனும் பெயர் கொண்ட ஒரு அமைப்பு வெளியிட்ட துண்டுப்பிரசுரத்திலேயே மேற்படி கோஷம் எழுப்பப்பட்டுள்ளது.

அருந்ததியர் (சக்கிலியர்) எனும் சாதிய சமூகம் இலங்கையில் நகர சுத்தித் தொழிலாளர்க ளாக பல நகரங்களில் வாழ்ந்துவருகிறார்கள். இவர்களைப் பொறுத்தளவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலானது மிகவும் முக்கியமானது தான். இந்த ஒடுக்கப்பட்ட சாதியினரை இதுவரை சகல அரசியல் சக்திகளும் பயன்படுத்தி வந்துள்ள போதும் அம்மக்களை அவர்களது ஒடுக்குமுறையிலிருந்து மீட்டெடுக்கும் பணியை பிரக்ஞை பூர்வமாக எவரும் முன்னெடுத்ததில்லை. இந்நிலையில் அண்மையில் "அருந்ததியர் மீட்பு முன்னணி" எனும் அமைப்பின் பேரில் வெளியிடப்பட்ள்ள துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பலரது கவனத்தையும் ஈர்க்கச் செய்துள்ளது.

இலங்கையில் அருந்ததியர் சமூகத்தைப் பொறுத்தளவில் அது மிகமிக பிற்படுத்தப்பட்ட சமூகமாகவும் ஆகக் கூடிய இழி நிலைக்கு தள்ளப்பட்ட சமூகமாகவும் காணப்படுகிறது. ஏனெனில் இலங்கையில் உள்ள ஏனைய ஒடுக்கப்பட்ட சாதியினரைப் பொறுத்த வரையில் நகராக்கம், இடப்பெயர்வு, தொழில்நிலைபெயர்ச்சி என்பவற்றிற்கூடாக சாதிய அடிநிலையிலிருந்து தப்பித்து கொள்ளுகின்ற வாய்ப்புக்கள் ஓரளவு உண்டு. ஆனால் 150 வருடங்களுக்கு முன்னமேயே நகரசுத்தி தொழிலுக்காகவே இறக்குமதி செய்யப்பட்ட இச்சாதியினரைச் சேர்ந்தவர்கள் அதே வாழ்க்கை முறைக்குள் சிக்குண்டு மீள முடியாமலுள்ளனர். நகரசுத்தி தொழிலானது அரச அதிகாரத்தின் கீழேயே இருப்பதனால் இம்மக்களின் நலன்கள் நகரசுத்தி வாழ்வுமுறை கட்டமைப்புக்குள்ளேயே கட்டுண்டு கிடக்கிறது. இதுவே ஒரு விளிம்புநிலை விஷச்சுழலாகவும் நிலைபெற்றுள்ளது.

### அருந்ததியரின் பின்னணி

இலங்கைக்கு தென்னிந்தியாவிலிருந்து இறக்கப்பட்ட தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் அன்றைய விளிம்பு நிலையில் இருந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினரே என்பதும் உயர்சாதியினர் மிகச் சிலரே என்பதும் நாமறிந்த விடயம். அப்படி இறக்கப்பட்டவர்களை அவர்களது சாதிய படிநிலைகளை அப்படியே பேணக்கூடிய வகையிலேயே தொழில்ரீதியாக (அதிகாரப்படிநிலையின்படி) ஆங்கிலேயர், வேலைகளைப் பகிர்ந்தனர். அப்படி சாதிய படிநிலையை பேணுவதன் மூலம் அதிகார உறவுகளை சிக்கலின்றி அப்படியே தக்கவைக்கலாம் என்பதை ஆங்கிலேயர் அறிந்திருந்தனர். அதன்படியே இலங்கைமுழுவதுமுள்ள நகரங்களில் நகரசுத்தித் தொழிலுக்கு பொருத்தமானவர்களாக அருந்ததியினரை அமர்த்தினர். அவர்களுக்கு சிறு குடிசைகளை அமைத்து புறம்பான குடியிருப்பையும் தயார் செய்தனர். அன்று அமைக்கப்பட்ட அந்த குடியிருப்பிலிருந்து இன்றுவரை அவர்களது இருப்பிடம் மாற்றங்கள் எதற்கும் உள்ளானதில்லை. வேண்டுமாயின் நகராக்கத்திற்கூடாக குறிப்பிட்ட குடியிருப்பு நிலம் பெறுமதிமிக்கதாக்கப்படுகின்ற போதெல்லாம் நகரத்திலிருந்து தூர தூர தள்ளப்பட்டுக்கொண்டே போனதுதான் மிச்சம். விளிம்பு நிலை வாழ்வு முறைக்கேயுரிய கள்ளச்சாராய குடிப்பழக்கம், சீரற்ற சுகாதார, கல்வி, மருத்து பிரச்சினைகள், சிறுவயது திருமணம், குடும்பதிட்ட முறையின்மை, கல்வி கற்றோர் வீதம் அரிதான நிலை என்பன உட்பட பல்வேறு சிக்கல்களுக்குரியவர்களாக இவர்கள் உள்ளனர்.

இலங்கையிலேயே ஒரு சாதியினர் இலகுவாக அடையாளம் கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் அருந்ததியரே. ஏனெனில் பெரும்பாலும் நகரசுத்தித் தொழிலாளர்கள் எல்லோரும் அருந்ததி யராகவும், அருந்ததியரெல்லாம் நகரசுத்தித் தொழிலாளர்களாகவும் இருப்பதாலுமே இவர்கள் இலகுவாக அடையாளம் காணப்படக்கூடிய சமூகத்தினராக உள்ளனர். (இன்று அத்தொழிலில் வேறு சமூகத்தினரும் செய்யக்கூடிய வகையில் ஓரளவு நவீனமயப்பட்டுவிட்டது. இதைவிட நகரசுத்தி கட்டமைப்புக்குள் இருந்து விடுபட்ட அருந்ததியர் எத்தனையோ பேர் இருப்பினும் அவர்களில் சிலர் உயர் மேநிலையாக்கம் அடைந்தவர்களாக இருப்பினும் கூட அவை மிகமிக சொற்பமானவையே என்பது இங்கு கவனிக்கத்தக்கது.) ஏனைய இடைநிலை மற்றும் கடைநிலை சாதியினர் கூட இவ்வாறு இலகுவாக அடையாளம் காணக்கிடைக்க மாட்டார்கள்.

இவ்வாறு இலகுவாக அடையாளம் காணக்கிடைப்பதனாலேயே இவர்களை எடுத்தஎடுப்பில் "சக்கிலியர்" என்ற தூற்றுதலுக்கும் உள்ளாக்கமுடிகிறது. இந்த தூற்றுதல், தமிழ் சமூகத்தில் இருக்கின்ற உயர் சாதியினரால் மாத்திரமல்ல சிங்கள சமூகத்தவரால் கூட தூற்றப்படுகின்ற போக்கு இந்த சமூகத்தவருக்கு மட்டுமேயுண்டென்றால் அது மிகையல்ல.

### விலை போக விடமாட்டோம்!

"என்னதான் நான் புரட்சி பற்றியும் புரட்சிகர சமூக மாற்றம் குறித்தும் இயங்கிய போதும் என்னை எவரேனும் "சக்கிலியன்" என்று சொன்னவுடன் கூனிக்குறுகித்தான் போகிறேன்" என்கிறார் அருந்ததியர் மீட்பு முன்னணியைச் செர்ந்த சுப்பன் என்பவர். அவர் இதுபற்றி கூறும்போது,

எம்மீதான பிற்படுத்தலுக்கு எதிராகவும், ஒடுக்கு முறைகளுக்கெதிராகவும் பிரக்ஞை பூர்வமாக இதுவரை எந்த சக்தியும் செயற்பட்டதில்லை. இன்று எமது உரிமைகளுக்காக நாங்களே போராட தயாராகிவிட்டோம். இது தவிர்க்கமுடியாதது. இதுவரை எம்மைப்பயன்படுத்தி எம்மீது சவாரிவிட்ட சக்திகள் எத்தனையோ. இனிமேலும் அந்த ஆதிக்க சக்திகளுக்கும் பிற்போக்கு அணிகளுக்கும் எமது சமூகம் விலை போவதற்கு விடப்போவதில்லை. எமது சமூகத்துக்குள்ளிருந்த கடந்த கால தலைமைகள் கூட வெறுமனே சீர்திருத்த பணிகளையே முன்னெடுத்து வந்துள்ளனர். இனிமேல் அப்படி விடப்போவதில்லை. புரட்சிகரமான முறையில் சமூகத்தின் விடுதலையை முன்னெடுக்கப் போகிறோம். அதற்கு முன்னர் முன்நிபந்தனையான சுயவிமர்சனங்களை கடக்கும் பணியை மேற்கொண்டு வருகிறோம். மொத்த சமூக மாற்றத்துக்கான பணியினை முன்னெடுப்பதற்கு முன்னர் முன்நிபந்தனையான பணியாக இம்மக்களை அவர்களது நேரடிப் பிரச்சினைகளிலிருந்து மீட்க வேண்டியது அவசியமானது. அப்பணியையே தற்போது செய்ய முனைந்துள்ளோம்." என்கிறார்.


அருந்ததியர் மீட்பு முன்னணி அண்மையில் வெளியிட்டிருந்த ஒரு துண்டுப்பிரசுரத்தில் அதன் கடந்த கால தலைமைகள் குறித்து இப்படி சொல்லப்படுகிறது.

"சமூகத்தில் ஏதாவது பாதிப்பைச் செலுத்துகிற ஒரு உடனடி நிகழ்வோ, சில நிகழ்வுகளோ அவர்களை ஆரம்பத்தில் எழுச்சியுறச்செய்யும். (இப்படி எழுச்சியுறுபவர்களில் அன்றைய சூழலைச் சார்ந்த இளம் தலைமுறையினர் பெரும்பாலானவர்களாக இருப்பார்கள்) இப்படி தன்முனைப்பில் உந்தப்பட்டு அமைப்பொன்றை உருவாக்குவார்கள். சமூகத்தின் அவலத்துக்கு காரணமான அடிப்படை கட்டமைப்பு பற்றிய சரியான புரிதலின்றி சீர்திருத்த வேலைகளாக முன்கொண்டு செல்வார்கள். தன்னியல்பு ரீதியல்-அதாவது தத்தமது பிரதான நோக்கத்துக்கிணங்க தமது செயல்திட்டங்களை அமைப்பதற்குமாறாக தமக்கு என்னவெல்லாம் முடியுமோ அவற்றையெல்லாம் தமது மனம்போன போக்கில் செய்வார்கள். இப்படிப் போகும் போது ஒரு வித தேக்கம் வரும். திட்டமில்லாத செயற்பாடுகள் காரணமாகவும் அமைப்பு ஒழுங்கு குறித்த தெளிவு இன்மை காரணமாகவும் தம்மை சூழ அணிதிரண்டுள்ள பலரை இழப்பார்கள். இத்தேக்கம் வந்தடையும் காலத்தில் பொது நலனைவிட சொந்த நலன் மேலோங்கியிருக்கும். தமது அரசியல் பிழைப்புக்காக தமது சமூகத்தை பயன்படுத்த விளையும் எந்த பிற்போக்கு சக்திகளுடனும் கண்மூடித்தனமாக கூட்டு சேர்ந்து கொள்வார்கள். அந்த கட்டமைப்புக்குள் செய்ய தொடங்குவார்கள் இதற்காக சமூகத்தை ஏமாற்றி அவர்களுக்கு துரோகமிழைத்து தமது பிழைப்பை நடத்துவது ஒரு சங்கடத்துக்குரிய காரியமாக அப்போது அவர்களுக்கு இருக்காது. தமது இருப்புக்காக எதனையும் செய்ய துணிந்து விடுவார்கள். தம்மை அக ரீதியில் வளர்த்துக் கொண்டு மேநிலையாக்கமடைந்ததன் பின் சமூகத்திலிருந்தே தம்மை அந்நியப்படுத்தி ஒழிந்து வாழ பிரயத்தனம் கொள்வார்கள். இப்படி மேநிலையாக்கமடைந்ததன் பின் தமக்கும் தமது சொந்த சமூகத்துக்கும் எந்தவித ஒட்டுமில்லை உறவுமில்லை என காட்டவே கூடுதலாக விரும்புவர். இதுவே பொதுவான போக்காக இருந்து வந்துள்ளது.

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட இம்மக்களை பயன்படுத்தியபின் வழமைபோல் கைவிட்டு விடக்கூடிய தரப்பினர் ஏராளம்.

### உள்ளூராட்சித் தேர்தல்

உள்ளூராட்சிசபைகளைப் பொறுத்தளவில் அது அருந்ததியர் சமூகத்தினருக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தல். அவர்களது நலன்களில் பெரும்பாலானவை உள்ளூராட்சி சபைகளோடு பின்னிப்பிணைந்தவை. கடந்த பல ஆண்டுகளாக அவர்கள் உள்ளூராட்சி சபைகளில் கையேந்தி கூலி வாங்குபவர்களாகவே இருந்து வந்ததுடன் ஒரு போதும் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியதிகார மட்டத்துக்கு ஓரிரு உறுப்பினர்களைக் கூட கொண்டிருக்கக் கூடியளவில் இருக்கவில்லை. திருமலை மற்றும் கொழும்பில் விதிவிலக்காக தலா ஒவ்வொருவர் வீதம் கடந்த தடவை மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். கொழும்பு மாநகர சபையில் கடந்த தடவை நவ சமசமாஜக் கட்சியின் சார்பில் சண்முகம் ஜீவரட்னம் என்பவர் முதற்தடவையாக தெரிவுசெய்யபட்டார். (இவர் ஒருவரே நவசமசமாஜக்கட்சியின் உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது). இவர் தெரிவு செய்யப்பட்டபோது "ஒரு சக்கிலியன் கூட சபைக்குள் தெரிவு செய்யப்பட்டு விட்டானே" என்று பல இடங்களில் பேசப்பட்ட வேளை, தான் மிகவும் இகழ்ச்சியாக நோக்கப்படுவதாக நவசமாஜக்கட்சியில் அன்றிருந்த வாசுதேச நாணயக்கார மற்றும் விக்கிரமபாகு கருணாரத்தின ஆகியோரிடம் கேட்டபோது "தோழர் நீங்கள் ஏன் இதற்காக வுருத்தப்படுகிறீர்களற். நாங்கள் உங்களை ஒரு பிரதிநிதியாக தெரிவுசெய்ய முடிந்ததையிட்டு எமக்கு மட்டும் தான் பெருமை கொள்ள முடியும். வேறு எவருக்கும் அந்த வாய்ப்பில்லை. அதை நாங்கள் உரத்து சத்தமிட்டு சொல்லுவோம்" என கூறியிருந்ததும் இன்னும் நினைவிலுண்டு.



இம்முறை தேர்தலில் கொழும்பில் 6 கட்சிகளும் 6 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. ஒவ்வொரு குழுவிலும் 59 பேர் வீதம் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். மொத்தம் 708 பேர். இதில் நவ சமசமாஜக் கட்சியின் சார்பில் மட்டும் அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்த 9 பேருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. பிரதான பெருந்தேசியக் கட்சிகளைப் பொருத்தளவில் இதுவரை இச்சமூகத்துக்கு வாய்ப்புகள் கொடுத்ததில்லை. ஆனால் இம்முறை எஸ்.கணேசன் என்பவருக்கு மட்டும் ஐ.தே.க. இடம் வழங்கியுள்ளது. இவரை அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் சார்பிலேயே ஐ.தே.கா இடமளித்துள்ளது. இலங்கை தெலுங்கு காங்கிரஸ் பற்றியும் கொஞ்சம் இந்த இடத்தில் தெரிவது பொருத்தமாகும்.

அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் எனும் அமைப்பு 80களின் பிற்பகுதியில் அருந்ததியர் சமூகத்தின் 'நலனுக்காக' என்று கூறிக்கொண்டு அன்பழகன் என்பவர் தலைமையில் உருவாக்கப்பட்டது.

### பிரேமதாச உதவி

காலப்போக்கில் பிரேமதாச ஆட்சியில் இவ்வமைப்புக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. பிரேமதாசவின் ஏனைய முகங்களைத் தவிர்த்துப் பார்த்தால் அவரும் ஒரு ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்ற வகையலும், உள்ளூராட்சி சபையில் பல காலமாக இருந்தனர் என்கின்ற வகையிலும் அருந்ததியர் சமூகத்தின் குடியிருப்பு அமைந்திருந்த வாழைத்தோட்டமே அவரது பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் இருந்ததென்ற வகையிலும் இச்சமூகத்தவருடன் நெருங்கிய உறவு இருந்தது. இச்சமூகத்தவர் குறித்த ஒரு அனுதாபமும் அவருக்கு இருந்தது. இதை விட காலாகாலமாக ஐ.தே.கா விசுவாசிகளாகவும் கொழும்பு மாநகர பகுதிவாழ் அருந்ததியர்களில் பலர் பிரேமதாச ஆதரவாளர்களாக இருந்ததனாலும் அவர் அந்த வாக்குகளைப் பேணவும் விரும்பினார்.

எனவேதான் தெலுங்கு காங்கிரஸினை ஒரு அரசியல் கட்சியாக செயற்பட ஊக்குவித்ததுடன் அதனை போஷிக்கவும் செய்தார். ஜனாதிபதியாக இருந்தபோது தெலுங்கு காங்கிரசினர் நடாத்திய பல நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கவும் சென்றார். அந்த சமூத்தின் நலனுக்காக சமாதான நீதவான் பட்டங்களையும் தெலுங்கு காங்கிரஸ்க்கு ஊடாக வழங்கினார். ஆனால் அந்த சமாதான நீதவான் பட்டங்கள் தெலுங்கு காங்கிரஸின் தலைமைகளால் பல முதலாளிகளுக்கு பல ஆயிரங்களுக்கு விற்கப்பட்டது பற்றி இன்றும் கூறுவர். அந்த சமாதான நீதவான் பட்டங்கள் ஓரிரு அருந்ததியருக்கே போய்ச் சேர்ந்தது என்பதும் மிகுதி அனைத்தும் உயர்சாதி முதலாளிகளுக்கு போய் சேர்ந்ததிலிருந்தும் அந்த விற்கப்பட்ட கதை உண்மைதான் என்பதை நம்பச் செய்கிறது. பிரேமதாச அனுராதபுர போன்ற இட்களில் இருந்த அருந்ததியரின் குடியிருப்புக்களைக்கூட மாற்றி புதிய வீடுகளை வழங்கினார். வாழைத்தோட்டத்திலும் அப்படியே.

பல்வேறுபட்ட ஊழல் பிரச்சினை காரணமாக இந்த அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ்ஸிலிருந்து பிரிந்து சென்று ராஜகோபால், பன்னீர்செல்வம் போன்றவர்களின் தலைமையில் ஸ்ரீலங்கா தெலுங்கு காங்கிரஸ் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவர்களுக்கிடையில் கொள்கைப்பிரச்சினையென்று ஒன்றும் இருந்ததில்லை. கொள்ளைப்பிரச்சினையே இருந்தது எனலாம். தமது சொந்த பிழைப்புக்காகவே அமைப்பை நடாத்தி வந்தவர்கள். இறுதியில் ஸ்ரீ லங்கா தெலுங்கு காங்கிரஸ் பொது ஜன முன்னணியுடனும் அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் போய் இணைந்து கொண்டன.

### இடம் ஒதுக்கப்பட்டது எப்படி?

இம்முறைத் தேர்தலில் பொ.ஐ.மு.வினர் ஸ்ரீ.ல.தெ.காவுக்காக ஒரு வேட்பாளருக்குக் கூட இடம் கொடுக்கவில்லை. ஐ.தே.கட்சி அ.இ.தெ.காவுக்கு ஒரு இடத்தை கொடுத்தது. அந்த இடத்துக்கு அன்பழகன் போக முயன்ற போதும் அது கூட குதிரைக்கொம்பாக போனது. ஏனெனில் வேட்பாளர் பட்டியலில் இளைஞர்கள் 24வீதத்தினரைக் கொண்டிருக்க வேண்டும் எனும் புதிய விதியின் காரணமாக ஐ.தேகவின் பட்டியலில் எஞ்சிய இடம், இளைஞர்களை மட்டுமே நிறுத்தக் கூடியதாக இருந்தது. அன்பழகன் இளம் வயதைத் தாண்டியராக இருந்ததனால் இறுதியில் கணேசன் என்பவரை அன்பழகன் முன்மொழியவேண்டிதாயிற்று.

இ.தொ.காவைப் பொறுத்தளவில் அருந்ததிய சமூகத்தவரைச் சேர்ந்த பலர் அமைப்பாளராக பல காலமாக பாடுபட்டு வந்துள்ள போதும் அவர்களுக்கு ஒரு போதும் வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுக்க முன்வந்ததில்லை. இம்முறை தனித்து போட்டியிடும் முயற்சியில் இருந்த போது தற்செயலாக அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்த மூவருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் ஒதுக்குவதாக கூறப்பட்டு ஜோசப், சண்முகவடிவேல், தங்கவேல் ஆகியோரின் பெயரை குறித்து வைத்திருந்த போதும் இறுதி நேரத்தில் அரசாங்கத்துடன் கூட்டு சேர்ந்து போட்டியிட தீர்மானித்ததில் பொ.ஐ.மு சுயேட்சையாக போட்டியிடும் குழுவில் இ.தொ.காவுக்கு 7 பேருக்கே இடம் ஒதுக்கியது எனவே அந்த மூவரது பெயரும் நீக்கப்பட்டது.

இந்நிலையிலேயே வெறும் பயன்படுத்தலுக் காகவே தமது சமூகத்தை பிரயோகித்து வந்த இந்த சக்திகளை நிராகரிக்க வேண்டும் என்ற கோசத்தை அருந்ததியர் மீட்பு முன்னணியினர் முன்வைத்துள்ளார்.

### அடையாளப்படுத்தலின் அவசியம்

சாதிப்பெயரை சொல்லி ஒரு அமைப்பை கட்டுவது சரியானதா? என வினவியதற்கு அ.மீ.பு.வைச் சேர்ந்த சுப்பன் இப்படி கூறினார்.

"நிலவுகின்ற சாதி அமைப்பில் 3500க்கும் மேற்பட்ட சாதிகளில் பிராமணீயத்தை முதலாகக் கொண்டால் அந்தப்படிநிலையில் இறுதியாக வந்து முடியும் முனையாக இருப்பது அருந்ததிய சாதியே. சாதி ஒடுக்குமுறைக்கு சகல மட்டத்திலும் நேரடியாகவே மறைமுகமாகவோ நாங்கள் பாதிக்கப்பட்டு வருகிறோம். எம்மீதான ஒடுக்குமுறைகள் நிறுவனவடிவில் உள்ளன. ஏனைய ஆதிக்க உயர் சாதியினரெல்லாம் தத்தமக்கென்று சாதிய அமைப்பை ஸ்தாபித்து நிறுவன

→ 11

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சண்:விட்டுக்கொடாத புரட்சியாளர்

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சீனசார்பு) முன்னாள் பொதுச் செயலாளர் சண்முகதாசன் அவர்களின் நினைவு தினம் பெப்ரவரி 7ம்திகதி. அதனை முன்னிட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய பொதுச் செயலாளர் குமார் ரூபசிங்க அவர்கள் எழுதிய கட்டுரையின் சுருங்கிய வடிவம் இங்கு தரப்படுகின்றது.**

ஸ்ராலின் முதல் மாவோ வரையான நீண்ட வரலாற்று காலகட்டத்தையும் கடந்து தோழர் சண்ணின் பங்களிப்புகள் நீண்டு கிடக்கின்றன. அவரது வாழ்க்கைக் காலம் முழுவதும் அவர் ஒரு கழிவிரக்கப்படாத கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து வந்தார்.

சர்வதேச பொதுவுடமை இயக்கத்தினதும் (ICM) இலங்கை தொழிலாள வர்க்க இயக்கத்தினதும் வரலாற்றில் நிகழ்ந்தேறிய ஒவ்வொரு முக்கியமான நெருக்கடிகளின் போதும், அவர் உலகத் தொழிலாள வர்க்கத்தினதும் சோசலிசப் புரட்சியினதும் பிரதிநிதியாக நின்றதுடன் அவற்றின் விஞ்ஞானபூர்வமான கோட்பாடுகளையும் பாதுகாக்கப் போராடுபவராகவும் விளங்கினார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஒரு வரலாற்றுத்துறை மாணவனாக இருந்த காலத்திலிருந்தே அவர் பாட்டாளி வர்க்கத்தின் விஞ்ஞானபூர்வமான கோட்பாடுகளான மாக்சிய - லெனினியத்தை ஏற்றும், அவற்றை உயர்த்திப் பிடித்தும் வந்தார், சர்வதேச புரட்சிகர இயக்கத்தில் அங்கம் வகித்து வந்த தோழர் சண் இரண்டாம் உலக மகா யுத்தக் காலகட்டம் முழுவதும் சோவியத் யூனியன் மாபெரும் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருந்தபோது, சர்வதேச ஏகாதிபத்தியங்களையும் ரொட்ஸ்கியவாதிகளையும் எதிர்த்து சோவியத் யூனியனையும், தோழர் ஸ்ராலினின் தலைமைத்துவத்தையும் பாதுகாக்கப் போராடினார்.

பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறியதும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு முழு நேர உறுப்பினராகச் சேர்ந்து கொண்டதுடன் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளரும் ஆனார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியானது மாக்சிய-லெனினியத்தையும், சோவியத் யூனியனையும், ஸ்ராலின் தலைமையிலான அதன் தலைமைத்துவத்தையும் பாதுகாத்தல் என்ற அடிப்படையில் கட்டப்பட்டிருந்த போதும், அது பிற்போக்குவாத சீர்திருத்தவாத தலைமைகளினால் ஆதிக்கம் செலுத்தப்படுவதாக இருந்தது.

இவர்கள் தொழிலாள வர்க்கத்தின் இறுக்கமான அமைப்பினைப் பயன்படுத்தி இந்த நவகாலனித்துவ அரசுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக கடைகெட்ட பாராளுமன்றப் பாதையினூடாக சோசலிசத்தை அடையமுடியும் என்று முடிவு செய்தார்கள்.

சர்வதேச பொதுவுடமை இயக்கத்துள் நடந்த மாவோவின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ஸ்ராலினின் மறைவுக்குப்பின் சோவியத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட நவீன திரிபுவாதிகட்கும்இடையிலான போராட்டங்களின் போதும், மாபெரும் விவாதங்களின் போதும் மாக்சிய லெனினிசத்தையும் உலகப் புரட்சியையும் பாதுகாக்கும் மாவோவின் போராட்டங்களுடன் எந்தவித தடுமாற்றமும் இன்றி இணை சேர்ந்து நின்றார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துள்ளும் நடந்த மொஸ்கோ தலைமையுடன் தம்மை இணைத்துக்கொண்ட திரிபுவாதிகட்கு எதிரான கசப்பான போராட்டத்தை சண் தலைமையேற்று நடத்தினார். இப்போராட்டத்தின் மூலமாக கட்சிக்குள்ளும் தொழிற் சங்க சம்மேளனத்தினுள்ளும் இருந்த பெருமளவான தோழர்களைத் தம்பக்கம் வென்றெடுத்தார். இதன்பின் அவர் மாக்சிய லெனினிய மாவோசேதுங் சிந்தனைகளின் அடிப்படையில் கட்சியை மீளுருவாக்கம் செய்தார்.



மாவோசேதுங்கின் தலைமையில் நடாத்தப்பட்ட சீனாவின் மாபெரும் கலாசாரப் புரட்சியை தோழர் சண் உயர்த்திப் பிடித்தார். கலாசாரப் புரட்சியானது கட்சியின் தலைமைப்பீடத்திலும், அரசிலும், ஆயுதப் படைகளிலும், எதிர்ப்புரட்சிவாதிகளை பிரதிநிதித்துவப்படுத்திய அதிகார வர்க்க அமைப்பிலும் ஆதிக்கம் செலுத்திய பிற்போக்கு தலைமையகத்திற்கு எதிரான ஒரு உண்மையான மக்களின் புரட்சிப் போராட்டமாகும். இந்தப் பிற்போக்கு அணியானது சோசலிச சமூகத்தின் முரண்பாடுகளிலிருந்து வளர்ந்து வந்த ஒரு அணியாகும். கலாசாரப் புரட்சியானது, அடிப்படையில் திரிபுவாதத்திற்கு எதிராகவும், புதிய கம்யூனிஸ்ட் ஆண்களையும், பெண்களையும் உருவாக்குவதற்காக தமக்குள்ளேயும் போராடுவதை இலக்காகக் கொண்டும் உருவாக்கப்பட்டதாகும். இதன் மூலமாகவே உலக கம்யூனிச ஒழுங்கை உருவாக்கும் வரை புரட்சியை முன் கொண்டு சென்றிருக்க முடியும்.

சோவியத் ஏகாதிபத்தியவாதிகள், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டங்கள் தனிச் சொத்துடமை, வர்க்க ஆதிக்கம் என்பவற்றின் ஆணிவேர்கட்கு எதிரான தாக்குதலாக இருந்ததால், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிமீது கீழ்த்தரமான தாக்குதலைத் தொடுத்தார்கள். இத் தாக்குதலுக்கு முகம் கொடுக்கும் நோக்குடன் தோழர் சண் கலாசாரப் புரட்சியை உயர்த்திப் பிடித்தார்.

அவர் கலாசாரப் புரட்சியினால், ஏற்றிவைக்கப்பட்ட புதிய விஞ்ஞான பூர்வமான வெளிச்சங்களை உள்வாங்கியவராய் தனது இறுதிக்காலம் வரை உறுதியான மாவோயிஸ்ட்டாக இருந்தார்.

மாவோவின் மறைவுக்குப் பின்னர் முதலாளித்துவவாதிகளினதும் நவகாலனித்துவவாதிகளதும் அதிகாரங்கள் கையோங்கியபின், உலகெங்கிலும் உள்ள மாக்சிய லெனினிய கட்சிகள் ஒன்று சேர்ந்து தம்மை சர்வதேச புரட்சிகர இயக்கமாக உருவாக்கிக் கொண்டன. சர்வதேச பொதுவுடமை இயக்கத்தை(RIM) கட்டியெழுப்புவதிலும், சர்வதேச சோசலிசப் புரட்சியினை முன்னெடுத்துச் செல்வதிலும் இந்த நிகழ்வு மிகவும் முக்கியமான ஒன்றாக அமைந்தது.

சர்வதேச புரட்சிகர இயக்கத்தை உருவாக்குவதில் தோழர் சண் முக்கியமான பங்கை வகித்தார். அதன் 1984ம் ஆண்டுப் பிரகடனங்களை உருவாக்குவதில் அவர் அதிகம் பங்கெடுத்துக்கொண்டார்.இந்த இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினராக அவர் அமைந்ததன் மூலமாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு பெருமையையும் மதிப்பையும் ஈட்டித்தந்தவர் தோழர் சண் மட்டுமேயாவர். பெருவின் பாசிச நவகாலனித்துவ அரசினால் சிறைபிடிக்கப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் தனிமைப்படுத்தப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டவரும் பெரு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் **தோழர் கொன்சாலோ** வை விடுவிப்பதற்கான சர்வதேசப் பிரச்சாரத்துக்காக செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அவர் தனது உயிரை நீத்துக்கொண்டார். ஒரு மாபெரும் கம்யூனிஸ்ட் என்ற முறையில் அவர் உள்வாங்கியிருந்த அவரது சர்வதேசத் தன்மை குறித்த அக்கறைக்கு இது இன்னொரு எடுத்துக்காட்டாகும்.

தோழர் சண் தொடர்ச்சியாக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உயர்த்திப் பிடித்துவந்ததுடன் எல்லாவித பேரினவாதம், இனவாதவெறி, குறுந்தேசியவாதம் ஆகியவற்றிற்கு எதிராக உறுதியான எதிர்ப்பினைக் காட்டியும் வந்தார். அவர் இலங்கைப் புரட்சியின் ஐக்கியத்தையும், இறைமையையும் வலியுறுத்திய அதே வேளை எல்லா ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களதும் ஜனநாயக உரிமைகளையும் உயர்த்திப் பிடித்தார்.

சண் ஆயுதமேந்திய புரட்சிப்போராட்டத்தை வெளிப்படையாகவும், தெளிவாகவும், பிரச்சாரம் செய்தார். பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தையும் ரொட்ஸ்கியவாதிகளின் காட்டிக்கொடுப்பையும் அவர் எதிர்த்தார். விஞ்ஞானபூர்வமான வழியில் நீண்டகால மக்கள் யுத்தத்தின் மூலமாக புரட்சியை வழிநடாத்துவதற்கு எதிராக மக்களை திசைதிருப்பும் சந்தர்ப்பவாத அரசியலின் இன்னொருபக்கம் தான் இந்த ஜே.வி.பியின் அரசியல் என்பதாலேயே அவர் அதனை எதிர்த்தார். மக்கள் மீதும் அவர்களது புரட்சிகர ஆற்றலிலும் நம்பிக்கையற்ற முதலாளித்துவப் பாதையாளர்களின் திட்டங்களே பாராளுமன்றப் பாதையும், கிராமிய புத்தெழுச்சியும் என்று அவர் போதித்தார். இவை ஏகாதிபத்தியத்துக்கும், நவகாலனித்துவ அரசுக்கும் சேவை செய்வதுடன் ஒடுக்கப்பட்ட மக்களதும் பாட்டாளி வர்க்கத்தினதும் நலன்களை காட்டிக் கொடுக்கவும் செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

1971இல் தோழர் சண் கிட்டத்தட்ட ஒரு வருடகாலம் சிறையில் அடைக்கப்பட்டார். இந்தக் காலத்தினை அவர் மாக்சிய தத்துவம் தொடர்பான முக்கிய படைப்புக்களை ஆக்குவதிலும், இலங்கையின் மாக்சிய லெனினிய இயக்கத்தின் வரலாற்றை எழுதுவதிலும் பயன்படுத்தினார். அவரது சுயசரிதமானது, வருங்கால சந்ததியினருக்கு அவரது அனுபவத்தையும் அறிவையும் வழங்கும் இன்னொரு படைப்பாகும்.

ஆயுதம் ஏந்திய போராட்டமே இலங்கையின் புரட்சிக்கான பிரதான போராட்ட வடிவம் என்றும் அது மிகவும் தொடக்கப் புள்ளியிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் அவர் கருதினார். மக்கள் சேனை அல்லது மக்கள் படையே மிகவும் பிரதானமான மக்கள் அமைப்பாக இருக்க முடியும் என்றும் தொழிற்சங்கம் போன்ற அமைப்புக்கள் அவற்றுக்கு கீழ்ப்பட்டவையாகவே இருக்கும் என்றும் இவை பிரதான குறிக்கோளான அரசியலதிகாரத்தை மக்கள் யுத்தமூலமாக வென்றெடுப்பதனை நோக்கி குவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வந்தார். கட்சியானது ஒரு தொழில் ரீதியான தேர்ச்சி பெற்ற அமைப்பாக லெனினிய அமைப்பாகக் கட்டப்பட வேண்டும் என்றும், இரகசிய, தலைமறைவு வேலை முறையை தனது முதுகெலும்பாகக் கொண்டதாகவும், ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்டதாகவும் கட்டியமைக்கப் படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில் செய்யப்படுவதாயும் மக்கள் சேனையின் மையமாக இது அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அரசியல் அதிகார்ம் இன்றி அனைத்தும் மாயையே என்று அவர் திடமாக நம்பினார்.

இத்தகைய எல்லாவிதமான தத்துவார்த்த கோட்பாட்டு, யுத்தத்தந்திர திட்டமிடல் தொடர்பான போராட்டங்களிலும் தோழர் சண் மாக்சிய லெனினிச மாவோயிசத்தின் விஞ்ஞான பூர்வமான கோட்பாடுகளையும் உலக சோசலிசப் புரட்சியின் அவசியத்தையும் பாதுகாக்கப்போராடினார். ஒரு உறுதியான விட்டுக்கொடுக்காத கம்யூனிஸ்ட் புரட்சியாளராக அவர் இருந்ததுடன், உறுதியாக நின்ற புரட்சிக்காக ஒரு புதிய சந்ததியையும் உருவாக்கிவிட்டுள்ளார்.

○

தமிழில் – சஞ்சித்

## அமெரிக்காவின் கவலை!

ஐக்கிய அமெரிக்க இராச்சியங்களின் இராஜங்கத் திணைக்களம் 1996 மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசைப் போலவே, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதும் மனித உரிமைகளை மீறியமை தொடர்பாகக் குற்றஞ் சாட்டியுள்ளது.

அரச படைகளினால் கைது செய்யப்படுவதையும் வதை செய்யப்படுவதையும் காணாமற் போவதையும் தடுப்பதற்கு, அரசினால் உரிய நடவடிக்கை எடுக்க இயலாத காரணத்தால் மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்படுவதும், மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான விசாரணைகளை முன்கொண்டு செல்வதில் வெற்றிகரமாகவும் துரிதமாகவும் அரசு செயற்படாததையுமிட்டு இவ்வறிக்கையினூடாக அமெரிக்கா தனது கவலையை வெளிப்படுத்தி யுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்திய மத்தியவங்கி, தெஹிவளை குண்டுத் தாக்குதலகள் போலவே வட-கிழக்கில் அப்பாவிப் பொது மக்களைப் படுகொலை செய்தது தொடர்பாகவும் அவர்கள் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டினுள் இருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் கடந்த வருடத்தினுள் தமிழர்கள் 300பேர் காணாமல் போயுள்ளதாகவும், நாட்டின் ஏனைய பிரதேசங்களிலிருந்து வேறும் 50 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் இவ வறிக் கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் மட்டும் அரச படைகளின் தாக்குதல்களினால் கொல்லப்பட்ட தமிழ் அப்பாவிப் பொது மக்களின் எண்ணிக்கை 50ஐயும் தாண்டியுள்ளதாகவும், குமாரபுரம் கிராமம் மீது நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 24 ஆகும் எனவும் இவ்வறிக்கையில் காணப்படுகிறது.

குமாரபுரம் படுகொலை, விஷேட அதிரடிப்படை தொடர்புடைய பொல்கொட வாவிப் படுகொலை, 1992 மட்டக்களப்பின் மயிலந்தனைக் கிராமத்தில் இடம் பெற்ற படுகொலை போலவே தென்பகுதியில் சூரியகந்த, அன்கும்புர, நிக்கவெரட்டிய இராணுவ முகாம்களின் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தவும், நீதிமன்ற செயற்பாடுகளைப் பலப்படுத்தி வெற்றிகரமாக முன்கொண்டு செல்வதிலும் அரசு தோற்றுப் போயுள்ளதை இராஜாங்க திணைக்கள அறிக்கை கடும் விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ளது.

*(யுக்திய19970216)*

10→

## அருந்ததியர்...

மயப்பட்டு தமது ஆதிக்கத்தை செலுத்தும் போது, ஒடுக்கப்படும் சமூகங்கள் நிறுவனமயப்பட்டு தமது விடுதலைக்காக குரலெழுப்புவதில் தவறென்ன? எனவேதான் அருந்ததிய சமூகத்தைப் பொருத்தளவில் அச்சமூகம் ஓரளவேனும் மேலெழும் புவதென்றால் சமூக சக்தியாக அணிதிரள்வது தவிர்க்க முடியாததாகிறது. அதற்கு அவர்களை அடையாளப்படுத்தாமல் எப்படி...? குறிப்பிட்ட சாதி அந்த சாதியை சேர்ந்தவர்கள் என்பதற்கவே இன்னல்களை எதிர்நோக்கும்போது எப்படி அதிலிருந்து மீள்வது? இது தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவை' என்கிறார்.

○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 24



# குழந்தையின் சந்தோசமான தூக்கத்துக்கு வழி என்ன?

### தகப்பனின் வருகை

தகப்பனார் மாலையில் வீடு திரும்பும்போது, வந்தவுடன் சிறிது நேர அவகாசம் அவருக்கு அவசியம்; வீட்டு வாசலுக்கு வரும் போதே குறை சொல்வதும், எதையாவது வாங்கித்தருமாறு வேண்டுகோள் விடுவதும் ஏற்கப் படக்கூடியதல்ல. வேலையால் வந்தவுடன், முகம் கழுவுவது அல்லது குளிப்பது, ஏதாவது குடிப்பது அவசர கடிதம் வந்திருந்தால் பார்ப்பது என்று ஒரு சில நிமிடங்கள் இடைவெளி அவசியம். இந்த 'கேள்வி கேட்கப்படக்கூடாத' நேரம் நிலைமையை சுமுகமாக்கி, குடும்ப வாழ்வுக்கு சிறப்பைக் கொடுக்கும். (இதே விடயம் தாயார் வேலைக்குச் செல்பவராக இருப் பின் அவருக்கும் பொருந்தும்) குழந்தைகள், அப்பா வந்தாலும் அவருக்கு சில நிமிடங்கள் அமைதியும், வசதியும் தேவை என்பதை கற்றுக்கொள்வார்கள்.

இரவுச் சாப்பாடு மறுதலையாக ஒரு உரையாடுதலுக்கான நேரமாக இருக்க வேண்டும். சாப்பாட்டில் அதிகமான கவனம் செலுத்துவதை விட பேச்சிலும் சிந்தனையிலும் கூட கவனம் செலுத்துவது நல்லது. குழந்தை சாப்பிடும் முறை பற்றி, அதன் நடத்தை பற்றி சில விடயங்களை பேசலாம்.

### தூங்கும் நேரம்

பெரும்பாலான குடும்பங்களில் படுக்கைக்குப் போகும் நேரம் படுக்கை அடிபோடும் நேரமாக இருக்கின்றது. இது தாய்க்கும் பிள்ளைகளுக்கும் இடையில் பரஸ்பர விரக்தியை தோற்று விக்கின்றது. குழந்தைகள் முடிந் தளவு அதிக நேரம் விழித்திருக்க விரும்புகின்றன. தாயாரோ நேரத்திற்கு அவர்கள் படுக்க வேண்டும் என்று விரும்புகிறார். இந்த நேரங்கள் பொதுவாக தாய்மார் நச்சரிக்கும் நேரமாகவும், குழந்தைகள் பிடிபடாமல் நழுவுகிற நேரமாகவும் உள்ளது.

பாடசாலை போகத் தொடங்காத குழந்தைகள் தாயாருடனோ அல்லது தகப்பனாருடனோ சொருகிக் கொண்டிருக்கவே விரும்புவார்கள். ஒவ்வொரு குழந்தையுடனும் நெருக்கமாக உரையாடுவதன் மூலமாக படுக் கை நேரம் பகிர்ந்து கொள்ள ப்படலாம். அதன் பின் அவர்கள் படுக்கை நேரத்தை எதிர்பார்க்க தொடங்குவார்கள்.

அவர்கள் தாயாருடனோ அல்லது தகப்பனாருடனோ அதிக நேரம் தனியாக படுத்திருக்க விரும்பு வார்கள். பெற்றோர் பொறுமை யாக குழந்தையின் கோரிக்கையை கவனிப்பார்களானால் குழந்தை தனது பயம், நம்பிக்கை, விருப்பம், எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள பழகி விடும். இத்தகைய நெருக்கமான உறவு குழந்தைக்கு தவிப்பை நீக்கி சந்தோஷமான தூக்கத்தை வழங்குகின்றது.

சில வளர்ந்த குழந்தைகளும் பெற்றோர்களுடன் சேர்ந்து தூங்க விரும்புவார்கள். அவர்களது விருப்பங்களும் மதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். அவர்களது கோரிக்கைகள் அவமதிக்கப்படவோ விமர்சிக்க ப்படவோ கூடாது. 'குழந்தைப் பிள்ளைக்கு நிற்கிறாய்'' என்று கூறுவது தவறானது. வளர்ந்த குழந்தைகட்கு படுக்கை நேரம் நெகிழ்வுள்ளதாக இருக்க வேண்டும். 'உனது படுக்கை நேரம்' 8 க்கும் 9க்கும் இடையில் (அல்லது 9க்கும் 10க்கும் இடையில்) நீ எப்போது படுக்க விரும்புகிறாய் என்பதை நீயே தீர்மானித்துக் கொள்ளலாம்.''

படுக்கைக்குப் போன குழந்தை, தான் குளியலறைக்கு போக மறந்துவிட்டதாக கூறுவதற் காகவோ, அல்லது தனக்கு கொஞ்சம் தண்ணீர் தருமாறு கேட்பதற்காகவோ அதனுடன் சண்டைக்குப் போவது நல்லதல்ல. தனது படுக்கைக்கு வருமாறு தாயாரை ஒரு குழந்தை தொடர்ந்து கூப்பிட்டுக் கொண்டிருந்தால் 'எனக்குத் தெரியும் உன்னோடு இன்னும் கொஞ்ச நேரம் நான் இருப்பதை நீ விரும்புகிறாய் என்று. ஆனால் இப்போது நான் அப்பாவுடன் இருக்க வேண்டிய நேரம் இது'' என்று சொல்லலாம். சில உறவுகளும், நிலைமைகளும் தம்மை விலக்கி வைக்கும் அவசிய த்தை கொண்டிருக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வது அவசியமாகும்.

### களியாட்ட அனுமதிச்சீட்டு அவசியமில்லை

சில குடும்பங்களில் பெற்றோர் களது வருகையையும் போதலை யும் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் குழந்தைகளிடம் இருக்கிறது. ஒரு மாலை நேரம் வெளியே போவதற்கான அனும தியை பிள்ளைகளிடம் கேட்கும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். சில தாய்மார் குழந்தை வீட்டில் இருப்பதன் காரணமாகவே படத்திற்கோ அல்லது நாடகத் திற்கோ போவதை தவிர்த்துக் கொள்கின்றனர்.

பெற்றோர் தாம் எப்படி வாழ்வது என்பது குறித்து குழந்தைகளிடம் ஆலோசனை கேட்கத் தேவை யில்லை. தகப்பனும், தாயும் மாலை நேரத்தில் வெளியே போகிறார்கள் என்பதற்காக ஒரு குழந்தை அழுதால், அக்குழந்தை யின் பயத்தை மட்டம் தட்டத் தேவையில்லை. ஆனால் அதற் காக அதன் விருப்பங்களை நிறைவேற்றுவதும் அவசிய மில்லை. தகப்பனையும் தாயையும் விட்டு விட்டு பிரிந்திருக்க விரும்பாத குழந்தையின் விருப்ப த்தை விளங்கிக் கொள்ளவும் அனுதாபப்படவும் முடியும். ஆனால் அதற்காக களியாட்டத் திற்கு செல்வதற்கான அனுமதியை அதனிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அழுகின்ற குழந்தைக்கு நாம் இப்படிக் கூறலாம். ''உனக்கு நாம் உன்னுடன் இருப்பது விருப்பம் என்று எமக்குத் தெரியும். ஆனால் உனது அப்பாவும் நானும் இன்று ஒரு படத்திற்குப் போவதாகத் தீர்மானித்திருக்கிறோம்.

குழந்தையின் மறுப்பு, வேண்டு கோள் அல்லது மிரட்டல் என்பன கணக்கெடுக்கப்படத் தேவையில் லை. ''நாம் இங்கே உன்னோடு இருப்பதை நீ விரும்புகிறாய். ஆனால் நாம் இன்று வெளியே போவதாக தீர்மானித்திருக்கி றோம்.''

வரும்...

## யசோமா:- சாவுதான் தீர்வா!?

சிங்களத் திரையுலகு 'நல்ல' படங்களையும் ''நல்லதல்லாத'' படங்களையும் சம அளவில் வருடா வரும் தந்துகொண்டிருக்கிறது. இதில் விஷேட அம்சம் யாதெனில் தமிழ் 'நல்ல' படங்களுக்குள்ள ஆயுளை விட சிங்கள 'நல்ல' படங்களின் ஆயுள் நல்லதல்லாத படங்களை விட அதிகமானது.

இங்கு 'நல்ல' படங்கள் எனச் சுட்டுவதற்குக் காரணம் 'சகல கலாவல்லவன்' கமலஹாசன் ஒரு பேட்டியில் கூறியிருந்த பின்வரும் கூற்றே.

''சினிமாவே ஒரு கலை. இதில் கலைப்படம் (Art film), வர்த்தகப்படம், (Commercial Film) என்றெல்லாம் இல்லை. வேண்டுமானால் 'நல்ல' படம். கூடாத படம் என்று தரப்படுத்தப்படலாம்.

இக்கூற்று சிலரிடம் விமர்சனத்துக்குரியதாக இருக்கலாம். எனினும் எனக்கு இது சரியென்றேபடுகிறது.

இப்படியான 'நல்ல' சிங்களப்படங்களின் வரிசையில் தற்போது ஓடிக்கொண்டிருக்கிறது 'யசோமா''.

ஒரு பெண்ணைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்கிற கதை.

'அயோமா', 'லொக்குதுவ', 'பாலமயட்ட', 'செய்லம' போன்று ஒரு ஆண் நிலை சமூகத்தில் ஏற்படும் காதல், காமம், பாசம், வக்கிரம், வெறி உணர்வுகளுக்குள் அலைக்கழிக்கப்படுகிற ஒரு பெண்ணின் கதையே ''யசோமா''.

''யசோமா'' எனும் பெண்ணின் மர்மமான மரணத்தோடு படம் துவங்குகிறது. அதாவது காரணத்தை இறுதியில் தெரியப்படுத்துகிற ஒரு 'மர்மப்படமாக' படம் துவங்குகிறது.

இவளின் மரணத்தின் பின்னாலுள்ள ஒவ்வொரு கதைகளையும் படம் பின்னால் சொல்கிறது. காரணங்களாக 'ஆண்கள்' பலவடிவில் வருகிறார்கள். இவளின் மரணத்துக்கு காரணம் ஓர் ஆணாகவே இருக்க வேண்டும் என்பதை பட நகர்வின் சில நிமிடங்களில் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அந்த ஆண் எந்த வடிவில் இருந்தான் என்பதை சொல்லவே கதை நீளுகிறது. இந்த 'நீளல்' வழமையாக சிங்களப் படங்களில் - நல்ல படங்கள் உட்பட படத்தொகுப்பில் (Editing) தருகிற அலுப்பை விட்டும் நீங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

இதில் வரும் 'ஆண்' வடிவங்களை இவ்வாறு வகைப்படுத்தலாம்.

- உயிருக்குயிராய் காதலிக்கிற ஆண். இவன் நடுத்தர, தனியார் பள்ளி ஆசிரியனாக வருகிறான்.

- எப்படியாவது இவளை அடையத் துடித்து மோகம் கொண்டலைகிற ஆண். எதுவென்றில்லாமல் பிழைப்பு நடத்துகிற ஒரு நகரத்து ஆண்.

- உரிமை மூலம் (சித்தப்பா) இவளை தன் நலன்களுக்காக வியாபாரப்படுத்த முனைகிற ஆண்.
- தன் அதிகாரம் மூலம் இவளை அடிமைப்படுத்துகிற ஆண். இவன் ஒரு பொலிஸ் அதிகாரியாக வருகிறான்.

இவ்வளவுக்குள்ளும் வாழ்ந்து அலைந்து தன் வாழ்வழிக்கிறாள் இந்தப் பெண் ''யசோமா''

கதை இதுதான்.

தன்னை மோகித்தலைபவனையும் உதறி, தன் ஒரே உறவையும் உதறி, தன் காதலனைக் கரம்பிடிக்கிறாள். தாதியாக பணிபுரியும் 'யசோமா' வாழ்க்கை இனிதே போகிறது. இதில் 'அதிகார' ஆண் (பொலிஸ்) ஒரு விசாரணைக்காக வந்தவன் அவளில் கண் வைக்கிறான்.

இந்த விசாரணைக்கான காட்சி ஜே.வி.பி.யினரின் கொள்ளையாகக் காட்டப்படுகிறது. இதில் ஜே.வி.பி. என்பதன் அடையாளம் அவர்கள் 'சகோதரயா' என்று விளிப்பதன்மூலமும், 'இதுதானா உங்கள் புரட்சி அரசியல்..' என்று அவர்களைப் பார்த்துக் கேட்பதன் மூலமும் காட்டப்படுகிறது. படத்தின் இடையே 'டயர்' எரிப்புக் காட்சிகளும் காட்டப்படுகிறது.

'யசோமா'வில் தான் வைத்த கண் 'அவளை' எப்படியாவது அடைந்துவிடும் நிலைக்கு அவனைத் தள்ளுகிறது. இதற்கு விசாரணையைப் பயன்படுத்து கிறான். அவளின் கணவனின் 'தாடி'யும் இதற்குத் துணையாகிறது. புகார் கொடுத்தவனையே அடிக்கடி விசாரணைக்கென அழைத்து 'யசோமா'வின் மனதில் அச்சத்தைத் தோற்றுவிக்கிறான். தன் கணவன் மேல் தான் கொண்டிருக்கும் அதீத அன்பு, தன்னை இழந்தாவது அவனுக்கு ஏதும் நேராமல் காப்பாற்ற வேண்டும் என்ற நிலைக்கு அவளைத் தள்ளுகிறது. இது நிர்ப்பந்தமாக நிகழ இவள் எல்லாவற்றையும் மறைக்க, இருவரிடையே பிரிவு நிகழ்கிறது.

கணவனைப் பிரிந்து தன்னைப் பலிகடாவாக்கிய 'பொலிஸிடமே தஞ்சமாகிறாள். வாழ்க்கை சீரழிகிறது. இடையில் இவளைப் பயன்படுத்த முனைகிற நிகழ்வுகளும் மர்மத்தை அவிழ்க்கிற நிகழ்வுகளுமாக படம் நகர்ந்து முடிகிறது.

ஏற்கெனவே திருமணமான அந்தப் பொலிஸ் ஆணே அவளைக் கொலை செய்கிறான். நம்பிக்கையீனமும், தன் கீழேயே இருக்க வேண்டுமென்ற எதிர்ப்பார்ப்பும் தோல்வியும் அவனைக் கொலைகாரனாக்குகிறது.

படம் ஓர் ஆணாதிக்க சூழலில் பெண்ணின் பிரச்சினைகள்ளையே சொல்கிறது. முடிவுகளோ தீர்வுகளோ மாற்றீடுகளோ முன்வைக்கப்படவில்லை. இது சினிமாவுக்குத் தேவையில்லாததாக இருக்கலாம்.

'யசோமா' அநியாயமாககொல்லப்பட்டிருக்கிறாள். இச்சாவின் மூலம் ஆண் 'வெறி'யாதிக்க உக்கிரம் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் தான் மாற்றீடுகள், முடிவுகளுக்கான தேடலைத் துவங்க வேண்டும்.

சத்யா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வர்த்தக சினிமாவும் சமூகத்தில் அதன் தாக்கமும்

-வடிவேல் இன்பமோகன்

சினிமா 20ம் நூற்றாண்டின் மிகச்சிறந்த வெளிப்பாட்டுச் சாதனம். 1895இல் Lumicre சகோதரர்களினால் சினிமா வெளிப்பாட்டுச்சாதனமாகத் தோற்று விக்கப்படுகின்றது. 1896இல் இந்தியாவிற்குள்நுழைகின்றது. தமிழில்கீசகவதத்துடன் ஆரம்பமாகி 1931இல் பேசும் படமாக வளர்ச்சியடைகின்றது.

சினிமாவை 3 பெரும் பிரிவாக வகுத்து நோக்கலாம். அவை,

1. முதலாம் தரப்படம்: இவை கலைப்படமாக இருக்கும்.
2. இரண்டாம் தரப்படம்: கலைத்துவ வெளிப்பாட்டில் ஆர்வம் உள்ள கலைஞர்களால் வர்த்தக சினிமாவின் தாக்கத்தையும் உள்வாங்கி வெளிவரும் இரண்டிற்கும் இடைப்பட்ட படங்கள்..
3 மூன்றாம் தரப்படம்: முழுமையான வர்த்தக நோக்கில் வெளியாகும் படங்கள் என்பனவாகும். இம்மூன்று படங்களிலும் வர்த்தக சினிமாவே அதிக வளர்ச்சியடைந்ததாகவும், மக்களின் பெருவிருப்பத்திற்கு உரியதாகவும், மக்களின் மேல் பாரிய தாக்கத்தைத் தோற்றுவிப்பதாகவும் இருக்கும்.

மூன்றாம் தர சினிமாவின் நோக்கம் பொருளாதார நலனாக இருப்பதால் தாம் எவ்வழியில் தமது பொருளாதாரத்தை உயர்த்தலாம் என்னும் அடிப்படையில்தான் இச்சினிமாவின் செயற்பாடு இருக்கும். இந்நோக்கு நடிகர், நெறியாளர், தயாரிப்பாளர் போன்ற சகல பிரிவினரிடமும் இருக்கும். நடிகை விசித்திரா ஒரு பேட்டியில் *''சினிமாவிற்கு நிறையப் பேர் வர்றதே நிறையச் சம்பாதிக்கனும் என்பதற்காகத்தான். யாராவது சமூக சேவை செய்ய சினிமாவிற்கு வர்றாங்களா? அதிகமா தருகிறோம் கொஞ்சம் கவர்ச்சியா நடி என்றா செய்கின்றோம்.''*

*(தினமுரசு-182)*

எனக்குறிப்பிடுவதும், இந்திய முன்னணி நடிகர் கமலஹாசன் *நான் ஒரு உயர்ந்த யானை. மணிரத்தினம் சொன்ன சம்பளம் எனக்குப் போதாது*

*(தினமுரசு-176)*

எனக்குறிப்பிடுவதும், தாம் பொருளாதார நலனில் கொண்ட அக்கறையையும், தாம் விற்பனைப் பண்டமாக பயன்படுவதையும் புலப்படுத்துகின்றது.

இயக்குனர் சுந்தரம், *நல்ல விசயங்கள் எல்லாம் சீரியஸ் விசயங்கள், சீரியஸ் விசயங்கள் எல்லாம் பிஸ்னஸ் ஆகாது. அப்படிப்பட்ட விடயத்தை சொல்லத்தான் தொலைக்காட்சி இருக்கின்றதே''* எனக்குறிப்பிடுவதும்.

*(நவமணி)*

இது போல் தயாரிப்பாளர் ஜீ. வெங்கடேஸ்வரன் அவர்கள், *''தமிழ்த் திரைப்படம் இளைஞர்களின் கையில்தான் இருக்கின்றது. தமிழ் சினிமா இளைஞர்களின் பிடிக்கேற்றால் போல் ஆடிக் கொண்டு இருக்கின்றது.*

*(இந்தியா டுடே)*

எனக்குறிப்பிடுவதும் பொருளாதார காரணிகளின் பாதிப்பை உள்வாங்கி சினிமா எடுப்பதைக் காட்டுகின்றது. இவ்வர்த்தக சினிமா மக்களைத் தொடர்ந்து தனது பிடியில் வைத்து இருப்பதற்கு, அவர்களுக்கு சினிமாவின் மேல் உள்ள நாட்டத்தை அதிகப் படுத்துவதற்கு பல உத்திகளைக் கையாளுகின்றது.

இதற்கு ஏனைய பல தொடர்புச் சாதனங்களும் பங்களிப்புச் செய்கின்றன. இவ் ஏனைய தொடர்புச் சாதனங்களின் நோக்கம் சினிமாவை கருவியாக பயன்படுத்தி தமது பொருளாதாரத்தினை விரிவுபடுத்துவதேயாகும். இது இரட்டைப்பயன்பாட்டைத் தருகின்றது.

சினிமா சார்பான செய்திகளை வெளியிடும் பிலிமாலயா, பொம்மை போன்ற சஞ்சிகைகளும் ஆனந்த விகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகளும் சினிமா சார்பான பல குறிப்புக்களை வழங்கி மக்களின் சினிமா நாட்டத்தை அதிகரிக்கின்றன. ஆனந்த விகடன் படங்களுக்கு புள்ளி வழங்குகின்றது. இங்கு அதிக புள்ளி





வழங்கி'' படத்தை மக்கள் பார்க்க முயல்கின்றனர்.

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் போன்றவை தமது நிகழ்ச்சி நிரலில் சினிமா விளம்பரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. வீரகேசரி, *இந்தியன் படத்திற்கு, காட்சிக்கு காட்சி விறுவிறுப்பான கதையம்சம் இனிமையான காதல் காட்சிகள், காதுக்கு இனிய பாடல்கள், மெய்சிலிர்க்கும் சண்டைக் காட்சிகள் நிறைந்தது இந்தியன். (30.10.96)*

என விளம்பரப்படுத்துகின்றது. இவை தவிர சினிமா விளம்பரத்தின் மூலம் மக்களை கவர்ந்த பத்திரிகைகளில் ஒன்று தினமுரசு. இங்கு தமது வர்த்தகத்தை உயர்த்த பொருளாதார நலனைப் மேம்படுத்த சினிமாவை பயன்படுத்தும் நிலையில் சினிமா பார்ப்பதற்கும் மக்களைத் தூண்டுகின்றது.

சினிமாப் படங்கள் வெளிவர முன்னர் பாடல்கள் வெளிவருகின்றன. இவை ஒலிப்பதிவு நிலையம் (Recording Bar) மூலம் மக்களைச் சென்றடைகின்றது. பாடலை ரசித்த மக்கள் பாடலுக்காக படம் பார்க்கக் காத்து கொண்டு இருக்கின்றனர்.

இவைதவிர சினிமாக்காரர்கள் தாங்களாகவே சில நடவடிக்கைகளை மக்களை தம் வசம் இழுக்க மேற்கொள்கின்றனர். தாம் திரையரங்குகளில் காண்பிக்கும், காண்பிக்க இருக்கும் இனி வெளிவரப்போகும் படத்தின் சில காட்சிகளை மக்களைக் கவரத்தக்க விதத்தில் போஸ்டர்களாக மக்கள் முன் நிலைப்படுத்தல், சினிமா அரங்குகளில் குறித்த படம் காண்பித்துக் கொண்டு இருக்கும் போது அடுத்துக் காண்பிக்கும் படத்தின் சில கட்டத்தைக் காண்பித்தல், சில நடிகர்கள் நல்ல நடிகர்கள் எனவே அவர்களின் படங்களும் சிறந்தவை என்றும் அபிப்பிராயத்தை தோற்றுவித்தல் என பல உத்திகளை கையாளுகின்றனர்.

படங்களின் அமைப்பும் மக்களை வைத்தே தீர்மானிக்கப்படும். எவ்வாறான விதத்தில் அமையும் போது மக்களை கவரலாமோ அதற்கேற்றாற் போல் அதன் அமைப்பு இருக்கும்.

1. ஒரு கதையோட்டம் இருக்கும். கதாநாயகன் கதாநாயகி என்போர் அவர்களுக்கு எதிரான வில்லன் பாத்திரத்தை வெல்வதாக இருக்கும். அத்துடன், மக்களின் நகைச்சுவை உணர்வைத் தூண்டக்கூடிய ஒரு குட்டிக் கதையும் இருக்கும்.
2. பாடல் காட்சிகள், நடனக் காட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பர், டூயட் பாடல்கள் பிரதானப் படுத்தப்படும்.
3. காதல் காட்சிகளின் ஊடே படம் நகரும்.
4. பாலியல் காட்சி, வன்முறைக் காட்சி என்பன பிரதானப் படுத்தப்படும்.
5. படம் முடிந்து போகும் போது மக்கள் எதை எதிர்பார்க்கிறார்களோ அதைப் பெற்றுக் கொண்டு செல்லத்தக்கதாக முடிவு அமையும்.

இவ்வாறான தன்மையில் மக்களின் பலவீனமான பல பகுதிகளை உணர்ந்து தமது தயாரிப்பான சினிமாவை மக்களைக் கவரத்தக்க வித்தில் மக்களுக்கு வழங்குகின்றனர். இச்சினிமா சமூகத்தில் பல்வேறு நிலையில் பல தாக்கங்களை கொண்டு வருகின்றது. சினிமாவின் மூலம் ஒரு சமூக நடைமுறை காட்டப்படுகின்றது. இது கற்பனைப் படுத்தப்பட்ட யதார்த்தமாக இருக்கும். சினிமாவில் காட்டப்படும் விடயத்தை தங்களின் நடைமுறையுடன் பொருத்தி சினிமாவில் காட்டப்படும் வாழ்வு மேலானது என உணர்வர். பின்னர் அதை நடைமுறை வாழ்வில் கடைப்பிடிக்க முயல்வர். இவ்வாழ்வு யதார்த்த வாழ்வுடன் ஒன்ற முடியாத தன்மையும், சினிமாவில் காட்டப்படும் வாழ்வு நடைமுறை வாழ்வுடன் முரண்படுவதும் என பல வாழ்வியல் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். இந்நிலையில் யதார்த்த வாழ்வில் பல அவலத்தைத் தோற்றுவிக்கும்.

அடுத்த இதழில் முடியும்...

# தரிசனம்

துருவத்தில் தொடங்கி
தொலையாது நீளுமென் நெடும்பயணத்தில்
நைந்து போன கண்களை விழித்தேன்.
கோயம்புத்தூர் மீது பறப்பதாய்
விமானி உரைத்தான்

என் கோவையின் மீதா
தசாப்தம் முன்னே
உயிருக்கஞ்சி நான் ஓடிய போது
வருக என் அடைக்கலம் என அரவணைத்த
கோவையின் மீதா
உப்பிட்டவரே உங்களை நினைந்தென்
கவிமனம் கிளர்வதை
காண்கிறீரா...........

பசிய கந்தல் விலகிய மார்பில்
அறுந்த காவிரித் தாலி மின்ன
முகிற் பாவாடை கலைகிற போதெலாம்
சிறுவாணித் தேக்க கருமணி துலங்க
என் தமிழகத்தி துயில் நீங்குகிறாள்..........

நெடுநாளின் பின்
காதலி உன்னைத் தரிசிக்கின்றேன்.
என் பெரும் துயர்களில்
முகம் கோணாது பங்கு கொண்டவர் யார்
எரியும் நெருப்புள் என் புகலிடம் ஏது
புயலிடை எனது அகல் விளக்கதனை
அணையாது காத்த தேவதைக் கரம் எது
மன்று மன்றாய்
'கள்ளமற்றவன் என் காதலன்' என்று
வழக்குரைத்த கண்ணகி யாரோ.

என் ஆருயிர்க் காதலி
காமுற்று நீயே பளிச்சென சீவி
பொன் பூண் பொருத்தி அழகு பார்த்த
கூரிய எனது கொம்பை அசைத்துன்
மார்பில் பாய்ந்தேனே.

கீழே தெரிவன
தூத்துக் குடியின் துறை முகம்.
சிதம்பரனாரின் கண்ணீரும் கனவும்
இன்று வரைக்கும் முத்தாய் விழைகிற
உப்பளத்து வரப்பு மேடுகள்.
என் போல் ஓயாது
உன்னைத் தழுவ அலையும் பெருங்கடல்.
தொலைவில் இருந்த குமரிப் பாறையாம்
உனது பாதப் பெருவிரல் தன்னை
கண்களால் தொட்டு
மன்னித்திடுக என்று பணிந்தேன்.

நளாயினிப் பெண்ணே !
மீண்டும் வருவேன் புதிய மனிதனாய்
மீண்டு வருவேன் புதிய கவிதையாய்.

வ.ஐ.ச. ஜெயபாலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



**'நிலவிலே பேசுவோம்' என்.கே ரகுநாதனை அறியாதார் இலர். 35 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான அச்சிறுகதைத் தொகுதி ஈழத்து இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கம் அதிகமானது என்று சொல்வார்கள். அறுபதுகளின் சாதியெதிர்ப்புப் போராட்ட வெளிப்பாடாகப் பரிணமித்திருந்தது அத்தொகுதி.**

**இதேபோல் சாதியெதிர்ப்புப் போராட்டத்தை மையமாகக்கொண்டு மேடையேற்றப்பட்ட 'கந்தன் கருணை'நாடக எழுத்துருவைப் படைத்தவரும் என்.கே. ரகுநாதன் தான் என்பதை பலர் அறியார். அவருடைய இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான 'தசமங்கலம்'' இப்போது வெளிவந்திருக்கிறது. 1961க்கும் 1996க்கும் இடையில் எழுதப்பட்ட 12 சிறுகதைகள் அத்தொகுப்பில் உள்ளன. அதிலிருந்து 'நெருப்பு' என்ற சிறுகதையை இங்கு தருகிறோம்.**

**1961இல் சரஸ்வதி இதிழில் வெளியான இக்கதை 1983 ஜூலைப் படுகொலையை ஒட்டி 'இலக்கியப் பாலம்' என்ற சஞ்சிகையில் மீள் பிரசுரம் செய்யப்பட்டது. 1985இல் சிங்களத்தின் பிரபல எழுத்தாளரான கே.ஜி. அரமதாஸ இதனைச் சிங்களத்தில் மொழி பெயர்த்து ''நவசம்ஸ்கிருத்ய' வில் வெளியிட்டார்.**



# நெருப்பு

**என்.கே.ரகுநாதன்**

'கோழி மேய்ச்சாலும் கோறணமேந்திலை மேய்க்க வேணும்' என்பது எங்கள் நாட்டுப் பழமொழி. சிறிய உத்தியோகமாயிருந்தாலும் அரசாங்க உத்தியோகம் பார்த்துப் பிறவிப் பெருங்கடல் நீந்துக! என்பது இதன் பொருள். நம் முன்னோர் வரண்ட பூமியிலே பயிர் செய்து இத்தத்துவத்தை அறுவடை செய்தார்கள் போலும்! யாழ்ப்பாண மண்ணில் பிறந்த யாரும் இத் தத்துவப் பாதையிலிருந்து விலகி நடக்க முற்பட்டதே கிடையாது. அப்படியிருக்கும்போது, அப்பா மட்டும் இதற்கு எப்படி விலக்காக முடியும்?

இருபத்தைந்து வருஷத்துக்கு முந்தி ஒரு நாள், அரையிலே துண்டைக் கட்டிக் கொண்டு புகையிலைப் பாத்திக்கு தண்ணீர் மாற்றிக் கொண்டிருந்தாராம் அப்பா. கிராமத்திலிருந்து மூன்று மைல்களுக்கப்பாலிருந்த கிறிஸ்தவக் கல்லூரியில் எட்டோ ஒன்பதோ வரை படித்துவிட்டு மேற்கொண்டு பணம் கட்ட வழியின்றி தோட்டத் தரைக்குள் நுழைந்தாராம். தபாற் சேவகன் வந்து அரசாங்க உத்தியோகத்துக்கு அழைக்கவே, உடலில் படிந்திருந்த செம்மண்ணை வாய்க்கால்த் தண்ணீரிலே கழுவிக்கொண்டு கொழும்பை நோக்கி வந்துவிட்டாராம். உத்தியோகமல்லவா? உத்தியோகம் புருஷ லட்சணமல்லவா? அதனால் கனமான மண்வெட்டியைத் தரையிலே எறிந்துவிட்டுக் கனமில்லாத பேனாவைக் கையில் பிடித்துக்கொண்டு உத்தியோகம் பார்க்கத் தொடங்கினாராம்.

அப்பாவுக்கு எப்பொழுதும் கடமையிலே கண். சலியாத உழைப்பும் விடா முயற்சியும் அவர் பிறவிச் சொத்துககள். அவை, அவருக்குப் புகழ் ஏணி மாதிரி. வெகு விரைவிலே உயர்ச்சிகள் பல பெற்று, இன்று அவர் பெரிய பதவி வகிக்கிறார். அவர் உத்தியோக வாழ்க்கை கொழும்பிலேயே ஆரம்பமாகியது. பின், ஒரு முறை தீவுமுழுவதையும் வலம் வந்து கொழும்பிலேயே நிற்கிறது.

பட்டினக்கரை இரைச்சலும், பரபரப்பும் பிடிக்காத அப்பா, கொழும்புக்கு வந்த புதிதில், நகர்ப்புறத்தில் இருந்து சற்று ஒதுங்கி தெஹிவளையில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அதில் குடியிருந்தார். காலம் செல்லச் செல்ல பதவியும் உயர உயர பணமும் சேர்ந்தது. வாடகைக்கு இருந்த வீட்டையே விலைக்கு வாங்கி விட்டார். வேலையின் காரணமாக அப்பா ஊர் ஊராகத் திரிந்தாலும் நானும் தங்கையும் அம்மாவுடன் கொழும்பிலேயே இருந்தோம். கொழும்பில் உள்ள நல்ல கல்லூரிகளில் படித்து நாங்கள் பெரிய உத்தியோகம் வகிக்க வேண்டும் என்று அப்பாவுக்கு ஆவல்.

இப்படியே விட்ட குறை தொட்ட குறையாக வாழ்வில் தொடர்புகள் எல்லாம் உத்தியோகம் பார்க்க வந்த இடத்திலேயே வேரூன்றி கிளைத்து விட்டன. வாங்கிய வீட்டை இடித்துத் தள்ளி, அது இருந்த இடத்திலே அழகான பங்களா கட்டிக் கொண்டு, வானம் பார்த்த பூமியான யாழ்ப்பாணத்தை விட்டு கொழும்பிலேயே குடியேறி விட்டோம்.

அப்பா பெரிய பதவி வகிக்கும் காரணத்தால் அவருக்கு எல்லாச் செல்வமும் வந்து சேர்ந்தன. எங்கள் வீடு விளங்குகிறது. எத்தனையோ பெரியார்களும், பிரமுகர்களும் எங்கள் குடும்பத்துக்கு நண்பர்கள் ஆனார்கள். ஆனாலும் புஞ்சிசிங்கோவின் நட்புக்கு எதையும் ஈடுசொல்லவே முடியாது.

2

கிழவர் புஞ்சிசிங்கோ எங்கள் அடுத்த வீட்டுக்காரர். அடுத்த வீட்டுக்காரராவது? எங்கள் வீட்டுக்காரரே அவர்தானே! கடன் தொல்லைக்காக சொந்த வீட்டை எங்களுக்கு விற்றுவிட்டு வீட்டுக்கருகில் உள்ள துண்டு நிலத்தில் குடிசை ஒன்று அமைத்துக்கொண்டு இருக்கிறார். பம்பு என்கிற மூங்கில் கழிகளை வேலிமாதிரி இணைத்துக்கட்டி, அதன் இருபக்கங்களிலும் களிமண்ணை அணைத்து பதினைந்து இருபது வருஷங்களுக்கு முன் கட்டிய குடிசை அது. எத்தனையோ கோடைகளும், மாரிகளும் வந்து போய்விட்டன. 'கம் காரிய சபாவ' என்று அழைக்கப்படும் கிராமிய ஆட்சி முறை ''ஏர்பன்கவுன்சில்'' அந்தஸ்துக்கு உயர்ந்தும் அது ¿ன்னுள் மாற்றம் எதுவும் இன்றி காலத்தை வென்று நிற்கிறது. வீட்டுக்குத் தண்ணீர்க் குழாயும் இல்லை; கக்கூஸ் வசதியும் கிடையாது. வீதியோரத்தில் உள்ள குழாயிலும் கக்கூஸிலும் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியது தான்.

கொம்பனித்தெருவில் உள்ள வெள்ளைக்காரனுடைய தேயிலைக் கம்பெனியொன்றில் கிழவர் வேலை பார்த்து வந்தார். வாச்சர் வேலை! அவருடைய மனைவி தர்மபத்தினி! கிழவருக்கு இரவு வேலையானபடியால் 'பின் தூங்கி முன் எழும்பும் பேதை' என்று சொல்ல வாய்ப்பில்லை. ஆனாலும் சௌகரியத்தை உத்தேசித்து வேளையோடு எழுந்து சென்று தன் காரியத்தை முடித்து விட்டு குழாயில் தண்ணீரும் பிடித்துக் கொண்டு வந்து விடுவாள். அப்புறம் தேநீர் ஊற்றுவதற்குள் கிழவரும் வந்து விடுவார்.

கிழவர் சின்ன வயதிலிருந்தே என்னைப் 'பனங்கொட்டை' என்றுதான் அழைப்பார். ''ஒங்க யாப்பனாவிலே எது சரி இருக்கா தம்பி? பனங்கொட்டெதாங் மிச்சங் இருக்கிறான்!'' என்று என்னைச் செல்லமாகக் கேலி பண்ணுவார். எனக்கு கோபம் வந்து விடும். எங்கள் நாட்டுக் கற்பக விருக்ஷத்தைக் குறைத்துச் சொன்னால் வராதா பின்னே? ''போ, போ! அங்கே பனங்கொட்டை இல்லை,[1]'கொஸ்' தான் இருக்கு!'' என்று சொல்வேன்.

கிழவர் சிரித்தபடி தன் நெஞ்சிலே கையை வைத்து ''இந்தக் கொஸ் இருந்தது சுட்டித்தான் நீங்க இப்படிப் பேசிறான் இல்லாது போனா...'' என்று வாயைப் பிதுக்குவார்.

''இல்லாது போனா என்ன வந்தான்?'' என்று அவர் பேசுகிற தமிழைக் கேலி செய்வது போலக் கேட்பேன்.

கிழவர் குரலை மெதுவாகத் தாழ்த்திக் கொண்டு ''தம்பி! ஒங்க அம்மா கிட்டக் கேலுங்க. அவன் எல்லாங் சொல்லுவான்!'' என்பார்.

அம்மா என்னத்தைச் சொல்லுவது? வயது வந்து, நான் இளைஞனாகிய பின்பு கிழவரே அந்தக் கதையை சொன்னார்.

பங்குனி மாதத்து வெயில் காலத்தில் ஒரு நாள் பகல் பத்து மணியளவில் தூங்கி எழுந்து விட்டுக் குளிப்பதற்காகத் தெருக் குழாய்க்கு வந்தாராம் கிழவர். அங்கே பெண்கள் குளித்துக் கொண்டிருந்தார்களாம். மரஞ்செடி கொடிகளில் உள்ள ஒரு இலைகூட ஆடாமல் நெருப்பு மாதிரி வெயில் கரித்துக்கொண்டிருந்ததாம். ஒரே புழுக்கம். உடல் முழுவதும் பிசுபிசுக்கவே, கிழவர் எங்கள் வீட்டுக் குழாய்க்கு வந்தாராம். வந்தால் -

வீட்டுக்குள்ளே முனகல் சத்தம்! ''ஐயோ... அம்மா... அம்மா... ஆ...!'' என்று அது இழைந்து வந்ததாம். தலையைத் தூக்கி ஜன்னலுக்கூடாகப் பார்த்தால் அங்கே வயிற்றைப் பிசைந்தபடி நிலத்தில் கிடந்து துடி துடித்துக்கொண்டிருந்தாளாம் அம்மா.

அம்மாவின் வயிற்றிலே நான். முதற் குழந்தை. அனுபவக் குறைவினால் ஏற்ற ஒழுங்குகளை அப்பா வேளையோடு செய்யத் தவறிவிட்டாராம்.

கிழவர் அப்புறம் அங்கே நிற்கவில்லையாம். சிட்டாய்ப் பறந்து போய் மனைவியைக் கூப்பிட்டு அம்மாவிடம் அனுப்பிவிட்டு, நொடிப்பொழுதில் எங்கிருந்தோ ஒரு குதிரை வண்டியைக்கொண்டு வந்தாராம் அம்மாவை அதில் ஏற்றி வைத்தியசாலையில் சேர்த்த பின்னர் தான், அப்பாவுக்கு தகவல் சொன்னாராம். அப்பா வந்து டாக்டர் சொன்னதைக் கேட்டு, கிழவரைக் கட்டிக்கொண்டு நன்றிப் பெருக்கால் கண்ணீர் சிந்தி விட்டாராம்.

''நல்ல வேளை! ஒரு ஐந்து நிமிடம் முந்தி விட்டீர்கள். இல்லையென்றால் அது பிள்ளையோடு போகுமா, அல்லது தாயோடு போகுமா? என்று சொல்ல முடியாது!'' என்று அங்கலாய்த்தாராம் டாக்டர்.

என்ன நடந்தது? என்று புரியாமல் தடுமாறினாராம் அப்பா. தண்ணீர் எடுக்கப் போன அம்மா, குழாயடியில் சறுக்கி விழுந்ததனால் கர்ப்பம் நிலை குலைந்து நஞ்சுக்கொடி நசுங்கிப் போய்விட்டதாம். நிறை மாதக் கர்ப்பிணியை வீட்டில் வைத்துக்கொண்டு இவ்வளவு அலட்சியமாய் இருந்ததற்கு டாக்டர் அப்பாவைக் கண்டித்துப் பேசினாராம்.

''ஒங்க அப்பாவுக்கு பபா சரிக்கட்டத்தாங் தெரியும். அது நல்ல மாதிரிப் பெத்தெடுக்கோணும் பத்தித் தெரியாது!'' என்று கிழவர் என்னிடம் அப்பாவைக் கேலி செய்வார்.

''ஏன் நான் நல்ல மாதிரியில்லையா?'' என்று பதிலுக்குக் கேட்பேன்.

''நீங்க மிச்சங் நல்லம். நீங்க அவன் மாதிரி செய்ய மாட்டான். ஒங்கலுக்கு நோனா ஒன்னு வந்து அவன் வவுத்திலே பபா கிடைச்சா எங்க சரி போகமாட்டான். நோனாவைச் சுத்தி சுத்தியே திரிவான்.''

''போ, போ! போய்த் தூங்கு. இல்லாது போனால் இரவுக்குக் கம்பனி வாசலில் தூங்கி வழியப் போகிறாய். அப்புறம் வேலை போய் விடும்!'' என்று நான் வெட்கத்தை மறைப்பதற்குத் திரையைத் தொங்க விடுவேன்.

3

எனக்கு இபபோது இருபத்திரண்டு வயதாகி விட்டது. தோற்றத்தில் எத்தனையோ மாறுதல்களையடைந்து விட்டேன். ஆனால் கிழவர் நான் அறிந்த காலத்திலிருந்து பார்த்த தோற்றத்திலேயே இன்றும் இருக்கிறார். நோய்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நொடி என்று ஒரு நாள் கூடப் படுத்திருக்க மாட்டார். கடமையிலே ஒரு கடுகளவுகூடப் பிசக மாட்டார். டியூட்டி என்றால் டியூட்டி தான் மாலை ஐந்து மணியானதும் உடுப்பை மாற்றுவார். ஒரு சாறம், அதற்கு மேலே ஒரு தோல் பெல்ட், அப்புறம் காக்கிச் சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பி விடுவார். காலில் ஒரு செருப்புக் கூடக் கிடையாது. எப்படித் தான் மழை பெய்தாலும், புயல் அடித்தாலும் ஆறு மணிக்கு ஜம்மென்று வேலையை ஆரம்பித்து விடுவார். பின் விடிந்து ஆறு மணி வரையும் இமையோடு இமை மூடமாட்டார். ஒரு சுண்டெலி கூட அவரைத் தாண்டி உள்ளே போக முடியாது. வேலையில் அவ்வளவு கண்டிப்பு.

ஆனால், உள்ளே இருக்கிற வெள்ளைக்காரப் பெருச்சாளிகள் பகல் பகலாக, நாம் விழிப்புடன் இருக்கும்போதே நமது செல்வத்தைச் சுரண்டுவதைப் பற்றி அவருக்கு எப்போதும் கவலை!

''இந்தப் பசங்க நம்ம தேசத்தைக் கொஞ்சங் கொஞ்சமா சாப்பிடுறான். இந்த கவர்ண் மென்ட் சரியில்லே. இது எல்லாம் நிறுத் தோணும்!'' என்று அடிக்கடி சொல்லுவார்.

''நம்ம கவர்ண்மென்ட் வந்தா இவங்களை யெல்லாங் பிடிச்சு அனுப்புறது!'' என்று என் காதுக்குள் மெதுவாகச் சொல்லுவார். வெள்ளைக்காரன் மீது அவ்வளவு ஆத்திரம். தொழிலாளர் நலனுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் எந்த வழிகளிலாவது கம்பனி முதலாளிகள் ஈடுபடும் போது பார்க்க வேண்டுமே அவரை! கொடியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு தொழிலாளர் அணியின் முன் வரிசையில் வெகு ஆக்ரோஷத்துடன் நிற்பார். வயது கூடக் குறைந்து ஒரு வாலிபனைப் போலத் தோற்றமளிப்பார்.

அப்பாவுக்கு இம்மாதிரி வேலைநிறுத்தங்கள், ஊர்வலங்கள் என்றாலே பிடிக்காது. ''நாலு காசு சம்பாதிக்கிறதுக்காக வேலை செய்கிறோம். நமக்குப் பெண்சாதி. பிள்ளை குட்டிகள் என்றெல்லாம் இருக்கு. இந்த வம்பெல்லாம் எதற்கு?'' என்று கிழவருக்கு புத்தி சொல்லுவார்.

கிழவர் இப்படியான சந்தர்ப்பங்களில் அப்பாவிடம் எதையும் பேசமாட்டார். சிரித்துக்கொண்டு என்னிடம் வருவார். ''ஒங்க அப்பா மிச்சங் பழைய ஆள். அவன் கந்தோரிலே பெரிய உத்தியோகம் பாக்கிறது சுட்டி அப்படித்தான் சொல்லுவான்'' என்பார்.

ஒரு முறை கிழவர் வேலை செய்கின்ற கம்பனியில், வேலாயுதம் என்ற தொழிலாளியை அநியாயமாக வேலை நீக்கம் செய்து விட்டார்கள். வேலாயுதம் தொழிற்சங்கம் மூலம் தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லியும், முதலாளிகள் அவனைத் திரும்பவும் வேலைக்கெடுத்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். அப்புறம் எல்லாத் தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து வேலை நிறுத்தம் செய்தார்கள். திமிர் பிடித்த முதலாளிகள் கருங்காலிகளைக் கொண்டு வேலை நிறுத்தத்தை முறியடிக்க முயற்சி செய்தனர்.

'வேலாயுதத்தை திரும்பவும் வேலைக்கு எடு! என்ற கோஷ அட்டைகளைத் தாங்கிக் கொண்டு தொழிலாளர்கள் கம்பனி வாசலை அடைத்துக்கொண்டிருந்தார்கள். அந்த வாரச் சம்பளம் கிடைக்காததனால் அவர்களுக்கு பசி. கடும் வெயிலின் அகோரம் வரண்ட பாண் துண்டை 'பிளேன் டீ'யில் நனைத்து விழுங்கி விட்டு கொதிப்புடன் இருந்தவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் கருங்காலிகள் உள் நுழைவதைக் கண்டதும் பொறுமை இழந்து போனார்கள்.

''போகாதே!'' என்று எல்லோரும் உரத்த குரலில் சத்தம் செய்தார்கள். ராஜாங்க மரியாதையோடு செல்பவர்களுக்கு இக்குரல் காதில் விழவில்லை.

'அடோ! முதலாளிக்கு ஒண்ட பொஞ் சாதியை...'' தொழிலாளர் பாஷை வெட்டொன்று துண்டிரண்டாகக் கணீரிட்டது. அவ்வளவுதான்! கைகலப்பு ஏற்பட்டு விட்டது. கிழவர் கொடிக் கம்பை உருவி எடுத்துக் கொண்டு பாய்ந்து செனறு கிருதா மீசைக்காரன் தலையில் ஓங்கி அடித்து விட்டார். அவன் மண்டை பிளந்து இரத்தம் கொட்டியது.

அப்புறம் என்ன நடந்திருக்கும்? நடக்க வேண்டியது அணுப் பிசகுமின்றி ஒழுங்காகவே நடந்தது. பொலிஸாரை வைத்துக் கொண்டு அவர்கள் பாதுகாப்பில் வந்தவனுக்கே மண்டையைப் பிளந்தால் அவர்களுக்கு அவமானம் உண்டாக்கியதாகாதா? அவர்களது வீரதீர பராக்கிரமத்தை இழிவு படுத்தியதாகாதா?

கிழவர் காப்பும் கையுமாகப் பொலிஸ் நிலையத்துக்கு இழுத்துச் செல்லப்பட்ட செய்தியறிந்ததும், அவருடைய மனைவி பொடிஹாமி தலையிலடித்துக் கொண்டு அப்பாவின் காலடியில் விழுந்தாள். ஆனாலும் என்ன? அப்பா புறப்பட்டுப் போவதற்கிடையில் பொலிஸார் கிழவரை 'லாக்கப்'பில் வைத்து தங்கள் கைவரிசையைக் காட்டி வீரத்தை நிலை நிறுத்தி விட்டனர். வெள்ளை முதலாளி கொடுத்த விஸ்கியும் கோழிக் கறியும் இலேசுப்பட்டவையா என்ன?

கிழவர் பிணையில் விடுவிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் கிடந்து சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டு விட்டது.

4

வேலை நிறுத்த விசாரணை தொழிற் கோட்டுக்குப் போயிற்று. வேலாயுதத்துக்கு வேலை கொடுக்கும்படி தீர்ப்பாயிற்று. ஆனால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த நாட்களுக்குக் கூலி கொடுக்காமல் முதலாளிகள் அவர்களைப் பழிவாங்கினர்.

கிழவருக்குச் சம்பளமுமில்லை; வேலைக்குப் போகவும் இயலவில்லை. அத்துடன் நோய் வேறு. இந்த இலட்சணத்தில் பிடி அரிசிக்கு வழியின்றி பொடிஹாமி துடித்துக் கொண்டிருந்தாள்.


அப்பா, பொடிஹாமியைக் கூப்பிட்டுப் பணம் கொடுத்தார். புஞ்சிசிங்கோ ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததும் அவனை அழைத்துப் 'புத்தி' சொன்னார்.

''அவன் இலட்சக் கணக்கிலே பணத்தைக் கொட்டி கொம்பனி நடத்துறான். அவனுடைய இலாப நட்டம் அவனுக்குத் தான் தெரியும். உங்களுக்கு ஏதாவது தெரியுமா? ஏதாவது குற்றங்குறை கண்டு ஒருவனை வேலையிலிருந்து நீக்கினால் மற்றவர்கள் ஏன் தங்கள் தலையிலே போட்டுக்கொள்ள வேணும்?'' என்று விசாரணை செய்தார்.

'அவன் ஒரு குத்தமும் செய்யல்ல மாத்தயா. அவன் கொஞ்சம் உரமான ஆள். வேலை செய்தா முதலாளிக்கு நாங்க அடங்கி நடக்கணுமா?' என்கிற மாதிரி மனசு அவனுக்கு. அதுதான் அவனுக்கு நோட்டீஸ் கொடுத்தது'' என்றார் கிழவர்.

''அவனுக்கு நோட்டீஸ் கொடுத்தால் மற்றவங்களுக்கு என்ன குறைஞ்சது? உனக்கென்ன குறைஞ்சுது?''



''அப்படிச் சொல்லாதீங்க மாத்தயா. அவன் நம்ம கூட்டாளி. நாங்க எல்லோரும் ஒரு வர்க்கம். நாங்க ஒத்துமையா இருந்தது சுட்டித்தான் அவனுக்கு-''

''போதும், நிறுத்து! போய் உன்ரை வேலையைப்பார்! என்று சொல்லிவிட்டார். கிழவர் அப்புறம் எதுவும் பேசவில்லை,. வழக்கம் போல் என்னிடம் வந்து ''பாத்திங்களா தம்பி! ஒங்க அப்பா பேசறது நல்லமில்லே'', என்று ஆரம்பித்து, வேலை நிறுத்தத்தைப் பற்றி விஸ்தரிக்கத் தொடங்கி விட்டார்.

பொலிஸார் கொடுத்த பிரஸாதத்தைப் பற்றி நான் வேடிக்கையாகக் கேட்டபோது, அவருக்கு ஆவேசமே வந்து விட்டது. அவனை ஒரு நாளைக்கு பழிவாங்கி விடுவதாக உறுமினார். ஆனால் அடுத்த கணம் சிரித்துக்கொண்டே, ''தம்பீ! இந்த றாலாஹ்மி நாய்கள் எல்லாம் இப்ப முதலாளிமார் வீசிற எலும்பைக் கடிச்சிட்டு நம்ம மேலே பாயிறான். நம்ம கவர்மெண்ட் வந்தா நாங்க அவனுக்கு எலும்பு போட மாட்டான்; இறைச்சி போடுவான். அவனை வச்சி இந்த முதலாளிமார்களை ஒளிச்சுக் கட்டறது!'' என்று காதுக்குள் மெதுவாகச் சொன்னார்.

கிழவருக்கும் அப்பாவுக்குமிடையில், கொள்கையளவில் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருந்தாலும், மிக நெருங்கிய உறவினர்களிடையில் காணப்படும் அன்பும், அந்யோன்யமும் மலர்ந்திருந்தன. ஒற்றுமையும், நட்பும் காலத்துக்குக் காலம் பெருகி வளர்ந்து வந்தது.

யாழ்ப்பாணத்தில் எங்கள் உறவினர்கள் யாராவது இறந்து விட்டால் அல்லது வேறு தேவைகளின் பொருட்டு அப்பாவும் அம்மாவும் அங்கு போக வேண்டிய சந்தர்ப்பங்கள் இடையிடையே ஏற்படுவதுண்டு. அப்பா வேலையின் நிமித்தம் இரண்டொரு தினங்களில் திரும்பி விட்டாலும் அம்மா சில சமயங்களில் ஒரு வாரத்துக்கதிகமாக நின்று வரவேண்டி ஏற்பட்டு விடும். அப்படியான சந்தர்ப்பங்களில் எல்லாம் படித்துக் கொண்டிருந்த என்னையும் தங்கையையும் பற்றி அம்மாவுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதேயில்லை. பொடிஹாமி முக மலர்ச்சியுடன் எங்கள் வீட்டுக்கு வந்து சமைத்துத்தருவாள். காலை உணவாக அவள் ஆக்கித் தருகிற 'கிரிபத்' எங்களுக்கு ரொம்பவும் பிடிக்கும். அதைத்தொட்டு சாப்பிடுவதற்கு அவள் தயாரிக்கும் காரமான சம்பலுக்கு ஒரு தனி ருசி. மத்தியான வேளைகளில் நாங்கள் கிழவியை எங்கள் வீட்டில் சாப்பிடும்படி வற்புறுத்துவோம். ஆனால் அவள் மறுத்து விடுவாள்.

தங்கை சிரித்துக்கொண்டே ''தாத்தே பக்கத்தில் இல்லாவிட்டால் சாப்பாடு இறங்காது தானே!'' என்று கேலி பண்ணுவாள். ஆனால் உண்மை அது அல்ல. எத்தனை சுவையான கறிகள் இருந்தாலும் என்ன? கொஸ் மொலுங்[2] இருப்பது போல வராது அவளுக்கு. அது ஒன்றே போதுமே. வீட்டுக்குப் போய்த்தான் சாப்பிடுவாள்.

இரவில் எங்களுக்கு துணையாகவும் வந்து படுப்பாள். அவள் வீட்டில் யார் வந்து எதைத் திருடப் போகிறான்?

என் மீதும் தங்கை மீதும் பொடிஹாமிக்கு உயிர் என்றால் அது மிகையல்ல. நாங்கள் அவளை 'அம்மே' என்று அழைப்போம். அவள் என்னைப் புத்தா'[3] என்றும் தமயந்தியைத் 'துவ'[4] என்றும் அழைப்பாள். உண்மையில் தன் பிள்ளைகளைப் போலவே அன்பு பாராட்டி வந்தாள். தன் பிள்ளைகள் என்றா சொன்னேன்.? பாவம் தன் வயிற்றில் ஒரு பிள்ளை பிறக்க வேண்டுமென்பதற்காக, ஒரே புதல்வனையே புறக்கணித்து ஓடிப் போன புத்தபகவானின் காலடியில் மலர்களைச் சொரிந்து சொரிந்து ஏமாந்து, கடைசியில் எங்கள் மீது தன் அன்பைச் சொரிந்த வண்ண மிருக்கிறாள்.

5

இப்படியே கால் நூற்றாண்டு காலம் ஒரே குடும்பத்தினர் போல அந்யோன்யமாக வாழ்ந்து வந்த எங்களிடையே பகைமை உண்டாக்குவதற்கும் சிலர் முயற்சித்து வந்தனர். தமிழர்களாகிய எங்களுடன் ஒரு சிங்களவன் நெருங்கி உறவாடுவதைக் குறை கூறி அத்தெருவில் உள்ள சிலர் கிழவரைக் கேலி செய்தனர். ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வந்த யாழ்ப்பாண நண்பர் ஒருவர், புஞ்சிசிங்கோ எங்கள் வீட்டில் யதேச்சையாகப் புழங்குவதைக் கண்டு விட்டுப் போகும் போது, ''என்ன சொன்னாலும் சிங்களவன் சிங்களவன் தான்! அவங்களையெல்லாம் வீட்டில் அண்டவிடக் கூடாது'' என்று சொன்னதைக் கேட்டு அப்பா சிரித்தார். அதேபோல, அத்தெருவில் வசிக்கும் சிங்கள வகுப்புவாதி ஒருவன் கிழவரைக் கூப்பிட்டு, ''உனக்கு வெட்கமில்லையா? நீயும் உன்னுடைய மனைவியும் அந்தத் தமிழன் வீட்டிலே போய் என்ன செய்கிறீர்கள்? அடிமை வேலை செய்கிறீர்களா?'' என்று கேட்டு விட்டுப் போனான்.

இனப்பற்று வெறியாக மாறி அந்த நாட்களில் பேய்க் கூத்தாடவில்லை என்றாலும், இரு இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வதைச் சகிக்காத மக்கள் இரு பகுதியிலுமிருந்தனர். இச் சந்தர்ப்பத்தில் நாட்டில் மொழிப் பிரச்சினை மெல்ல மெல்லத் தலைதூக்கிக்கொண்டிருந்தது. நாட்டின் பெரும்பான்மையினரான சிங்கள மக்கள், தங்கள் மொழியான சிங்கள மொழியை அரசபீடத்தில் ஏற்ற வேண்டுமென முயற்சி செய்தனர். அது சாத்தியமாயிற்று! ஆனால் சிறுபான்மையினரான தமிழ்மக்கள் தங்கள் மொழிக்குச் சம அந்தஸ்து வேண்டும் எனக் கோரினர். காலகதியில் அது சிறு கிளர்ச்சியாகவே உருப்பெற்றது. இதையொட்டி தமிழர் சிலர் பாராளுமன்றத்துக்கு முன்னுள்ள 'கோல்பேஸ்' திடலில் ஒரு நாள் சத்தியாக்கிரகம் செய்தனர். அது சிங்களக் காடையர்களின் வேட்டைக் காடாயிற்று.

வடக்கிலும் கிழக்கிலும் நாங்கள்; சிறுபான்மையினரான தமிழ் மக்கள். மற்றைய பகுதிகளில் பெரும்பான்மையினரான சிங்கள மக்கள். இவ்விரு மக்களும் தனித்தனி வாழும் பிரதேசங்களில் மற்ற இன மக்களும் கலந்து வாழ்கின்றனர். தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களவர்; சிங்களப் பிரதேசத்தில் தமிழர். வியாபாரம் செய்ய, உத்தியோகம் பார்க்க அல்லது வேறுவேறு வினைகளுடன் வந்தவர்கள். மண்ணாசையும் அதிகார வெறியும் பிடித்த மன்னர்கள் காலத்துக்குக் காலம் சண்டை செய்து ஒருத்தரையொருத்தர் அழித்தொழித்த காலத்திலும் கூட, தங்களுக்குள் வெறி கொள்ளாமல், சண்டை சச்சரவு பிடிக்காமல் பல நூற்றண்டு காலமாக அந்யோன்யமாய் வாழ்ந்த மக்கள்! அவர்கள் வாழ்வில் அமைதியின்மை நிழலாடியது.

நாணற் புல்லைக் கிள்ளி அதைப் பிரமாஸ்திரமாக ஏவிய காகுத்தனைப் போல நாடாள நினைத்தவர்கள் மொழி வெறியைக் கட்டவிழத்து விட்டார்கள்.

கிழவர் புஞ்சி சிங்கோவின் வீட்டுக்கு, அத் தெருவில் உள்ள பெரிய மனிதர் ஒருவர் எழுந்தருளினார். ''தமிழன் எங்களுடைய நாட்டை மெல்ல மெல்லப் பிடிக்கப் பார்க்கிறான். சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் வியாபாரம் செய்து பணம் குவிக்கிறான். பெரிய பெரிய உத்தியோகங்களில் இருக்கிறான். வந்த இடத்தில் காணி, பூமி வாங்கி வீடு வாசல் கட்டி வாழ்கிறான். இப்படியே விட்டுக்கொண்டு போனால், இன்னும் கொஞ்சக் காலத்தில் சிங்கள இனம் அழிந்து விடும்.''

கிழவர் வந்தவருடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். ''நீயே பார் வாடகைக்கு இருந்த உன்னுடைய வீட்டை விலைக்கு வாங்கி, அது இருந்த இடத்தில் பங்களா கட்டி விட்டான். நீ இன்னும் குடிசையிலே இருக்கிறாய். இதைப்பற்றி நீ யோசிக்கவில்லையா?'' என்று கேட்டார்.

→16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



15→

''தமிழருடைய நாட்டிலும் சிங்கள மக்கள் வாழ்கிறார்கள் தானே!'' என்றார் கிழவர்.

''பாண் விற்று வாழ்கிறார்கள்!''

''உத்தியோகமும் பார்க்கிறார்கள்; கடைகளும் வைத்திருக்கிறார்கள்.''
''மிகவும் கொஞ்சப் பேர்!''

''கொஞ்சத் தமிழர் வாழ்கிற இடத்தில் அதிகம் சிங்களவர் தொழில் செய்ய முடியாது!''

வந்தவருக்கு கோபம் தலைக்கேறிவிட்டது.

''புஞ்சி, இனத்துரோகம் செய்யாதே!'' என்று திருவாய் மலர்ந்தருளி விட்டுப் போய் விட்டார்.

இது நடந்து சில நாட்களின் பின்னர் ஒரு நாள் இரவு எங்கள் வீட்டுக் கூரைமீது சில கற்கள் விழுந்தன. அப்பா, பொலிசுக்கு ரெலிபோன் செய்தார். அவர்கள் வந்து அப்பாவின் புகாரை எழுதிக்கொண்டு போனார்கள். அவர்களால் அதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? கல் வீசியவர்களைக் கண்டு பிடிக்க வேண்டு மென்றால் பொலிஸார் முன்பாகவல்லவா அவர்கள் கல் வீச வேண்டும்? பொலிஸார் வந்து போனதன் பின் இரண்டு நாள் ஒன்றுமில்லை. பிறகு இடையிடையே கற்கள் பாய்ந்து வந்து கூரையோடுகளையும் ஜன்னல் கண்ணாடிகளையும் பதம் பார்த்தன. இரவில் மட்டும் நடைபெற்று வந்த இந்த மாய விளையாட்டு நாளாக ஆகப் பகலிலும் நடைபெறத் தொடங்கியது.

6

அப்பா ஒரு நாள் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து ''இந்த ஏவல்ப் பேய்கள் எங்களுடைய வீட்டில் மட்டுமல்ல, கொழும்பு முழுவதும் நடமாடித் திரிகின்றன. அதிலும் தமிழர்களுடைய வீடுகளில் தான் அதுகளின் அட்டகாசம்! இந்தப் பேய்களை பொலிசாரால் பிடித்துக் கட்ட முடியாதா!'' என்று வேதனையோடு சொல்லிச் சிரித்தார்.

பேய்கள் நாடு முழுவதும் நடமாடித் திரிந்தாலும், அரசாங்கம் தன் காரியத்தில் கண்ணுங்கருத்துமாய் இருந்தது. சிங்கள மொழியை அரசாங்க மொழியாக அமுல் செய்ததன் முதற்படியாக, பஸ்களிலும், கார்களிலும் ஆங்கிலத் தொடர் இலக்கத்துக்குப் பதிலாகச் சிங்கள ஸ்ரீயைப் பொறித்தது.

சிங்கள ஸ்ரீ பொறித்த பஸ்கள், சிங்களப் பிரதேசங்களில் ஜோராக ஓடின. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் விழுந்து படுக்க ஆரம்பித்து விட்டன. பஸ்களாவது விழுந்து படுப்பதாவது? தமிழர்கள் பஸ்களுக்கு முன்னே விழுந்து படுக்கத் தொடங்கினார்கள்.

வைத்தியசாலையில் நோயுற்றுப் படுத்திருக்கும் மனைவியைப் பார்க்கப் புறப்பட்ட ஒரு ஏழை பஸ்ஸை மறித்துப் படுத்தவர்களிடம், ''எழுந்திரய்யா? அல்லது நான் காரில் போவதற்குப் பணம் கொடய்யா?'' என்று சண்டைக்குப் போனான். அவனுக்கு தன் மனைவியைப் பார்க்க வேண்டுமென்பது தான் முக்கியமாகத் தெரிந்தது. அதேமாதிரி நேரத்துக்குச் செல்லவேண்டிய பாடசாலை மாணவர்களும், வேலைக்குச் செல்ல வேண்டிய ஏழைத் தொழிலாளர்களும் பஸ்ஸை ஓடச்செய்தனர்.

பஸ்கள் ஓடுவதைத் தடுக்க முடியாத தமிழர்கள், ''நமக்குச் சிங்கள ஸ்ரீ வேண்டாம்; தமிழ் ஸ்ரீ வேண்டும்!'' என்று சொல்லி இரண்டுமல்லாத சமஸ்கிருத ஸ்ரீயை பஸ்களில் பொறித்தனர். தார்ச் சட்டிகளைக் கையில் ஏந்திக் கொண்டு சிங்கள ஸ்ரீக்களை அழித்தனர்.


தமிழர் சிங்களத்தை அழித்தால், சிங்களவர் சும்மா இருப்பார்களா? அவர்களும் தார்ச் சட்டிகளை தூக்கினர். தமிழர் சிங்கள ஸ்ரீயை மட்டும் அழித்தனர். ஆனால் சிங்களவர், இ.போ.ச. விலிருந்து கண்ணில் பட்ட தமிழ் எழுத்துக்களையெல்லாம் அழித்தனர். வியாபார நிலையங்களின் விளம்பரப் பலகைகள், அலுவலகங்களில் அறிவிப்புப் பலகைகள் எங்கும் தமிழை அழித்தனர். சில இடங்களில் பொலிஸ் நிலைய அறிவிப்புப் பலகைகளே தார்ப்பூச்சில் மறைந்தன.

வீதிகளை திசை காட்டும் கட்டைகளில் தமிழ் மேலும் தார்; சிங்களத்தின் மீதும் தார். பாமர மக்கள் எஞ்சியிருந்த ஆங்கில எழுத்துக்களைப் பார்த்துத் திசை தெரியாது தடுமாறினர். தார்ப்பூச்சினால் நாடு இருளில் மூழ்கிக் கொண்டிருந்தது.
சிங்கள நாட்டில் வசித்த தமிழ் மக்களும் தமிழ்ப் பிரதேசத்தில் வசித்த சிங்கள மக்களும் உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு வீதியிலே இறங்கினார்கள். எத்தனை ஒய்யாரமா, கைகளை வீசி ராஜநடை போட்ட மக்கள்! இன்று கூனிக் குறுகிக் கண்களே கால்களாய் நடந்தார்கள்.

ஒரு நாள் அப்பாவின் பெயருக்கு அநாமதேயக் கடிதம் ஒன்று வந்தது. ஆங்கிலத்தில் டைப்செய்து பிரதி செய்யப்பட்ட கடிதம் அது. அதில் காணப்பட்ட வாசகம்:

'வெகு விரைவில் எங்களுடைய நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும். இல்லையென்றால் நடப்பதைக் கண்டு கொள்வீர்கள்.'

நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதைப்பற்றி எங்களுக்கு எந்த விதமான பிரச்சினையும் உண்டாகவில்லை. ஆனாலும், தற்காலிகமாக அம்மா வீட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்ல வேண்டிய சந்தர்ப்பம்



ஒன்று குறுக்கிட்டது. யாழ்ப்பாண நீதிமன்றத்தில், அம்மாவுக்குச் சேரவேண்டிய பிதுரார்ஜித நிலம் சம்பந்தமான வழக்கொன்று அப்போது விசாரிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. கோர்ட்டில் அம்மாவின் சமூகம் அவசியம் அநாமேயக் கடிதம் வந்த அன்றே ''கோர்ட் சம்மன்ஸ்'ஸும் வந்தது.

நாடு முழுவதும் அட்டூழியமும் பயங்கரமும் நிலவிக்கொண்டிருந்த அச்சர்ந்தர்ப்பத்தில் எங்களைத் தனியே விட்டுப்போவதை நினைத்து அம்மா கலங்கினாள். ஆயினும் போயே ஆகவேண்டும்! கிழவரையும், பொடிஹாமியையும் அழைத்து ''இரண்டு நாளில் திரும்பிவிடுவேன். பிள்ளைகள் பத்திரம். உங்களை நம்பித்தான் போகிறேன்.'' என்று கேட்டுக் கொண்டாள்.

''ஒண்ணுக்கும் பயம் வேண்டாம். நாங்க இருக்கும் போது அவுங்களுக்கு எதுசரி வர விடமாட்டான். நீங்க யோசிக்காம போய்ட்டு வாங்க நோனா''. என்று பொடிஹாமி கூறிய உறுதி வார்த்தைகளோடு அம்மா ரயிலேறினாள்.

அன்று இரவு எங்கள் வீட்டுக் கூரைமேலும், ஜன்னல் கண்ணாடிகள் மீதும் மிக அமர்க்களமாகக் கற்கள் விளையாடின. அப்பா ஒரு கணம் பொலிசுக்குப் போன் செய்ய நினைத்தார். ஆனால் 'வழக்கமான ஜுரம் தான்; இன்று கொஞ்சம் கூடிவிட்டது' என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டார்.

7

மறுநாள் மத்தியானம். எங்கள் பாடு எப்படி என்று பார்த்துப் போகும் எண்ணத்துடன் அப்பா ஒவ்விஸிலிருந்து வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். கிழவரும் மனைவியும் வீட்டிலேயே இருந்தார்கள். அம்மா திரும்பி வரும்வரையில் அவர்களுக்குச் சாப்பாடு, படுக்கை எல்லாம் எங்கள் வீட்டிலேயே என்று ஏற்பாடு. தங்கை மட்டும் இல்லை. மிக முக்கியமான 'லெக்ஸர்' ஒன்று இருப்பதனால், அதற்குக் கட்டாயம் சமூகமளிக்க வேண்டுமென்று அவள் பல்கலைக்கழகத்துக்கு போயிருந்தாள். அப்பாவும் பொடிஹாமியும் எவ்வளவோ தடுத்தும் போயிருந்தாள். நான் வேளையோடு சாப்பிட்டுவிட்டு, ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று ரெலிபோன் மணி ஒலித்தது. நான் எழுந்து சென்று பதில் கொடுத்தேன்.

''ஹலோ....''

''அடோ, தெமிளப் பண்டி!''

மறுபக்கத்திலிருந்து வந்த குரல், கர்ண கடூரமாக ஒலித்தது. பதில் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தேன்.

''மட்டக்களப்பிலே நம்ம ஆளை ஒரு தமிழன் சுட்டுக்கொன்று விட்டான். இனி என்ன நடக்கும் தெரியுமா?''

எனக்கு இரத்தம் உறைவதுபோலிருந்தது. மெதுவாக 'ரிஸீவரை' வைத்து விட்டு விறாந்தைக்கு வந்தேன். சிறிது நேரம் பேசுவதற்கே சக்தியின்றித் திகைத்து நின்றேன். பின்னர் கிழவரை அழைத்து அதைப்பற்றி விசாரித்தேன்.

''என்ன இது? உண்மைதானா? நீ ஏதாவது அறிந்தாயா?'' என்று கேட்டேன்.

''அப்படி நடக்க மாட்டான் தம்பி! யாரோ பொய்க்காறன் பேசி இருப்பான். இந்தச் சாதிபேதய ஆளுகள் ஒண்ணு ஒண்ணு சொல்லி எதுசரி செய்யப் பார்க்கிறது!'' என்றார் கிழவர்.

அந்தச் சமயம் தெருவில் பலர் உரத்த குரலில் பாடிக்கொண்டு சென்றது காதில் விழுந்தது. 'பைலா'ப் பாட்டு! சொல்வதற்கே கூசும் கருத்துள்ள அந்தப் பாட்டுக்களைப் பாடியவர்களைப் பார்க்கவே பயமாயிருந்தது. பட்டினத்துக்குப் புதியவர்கள் என்பது தெரிந்தது. மடித்துக் கட்டிய சாரமும், தலையில் கட்டிய லேஞ்சியும், கிருதா மீசையுமாக...

ரெலிபோனில் கேட்ட அந்தப் பயங்கரமான குரல் என் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

'இனி என்ன நடக்கும் தெரியுமா'

அதைப் பற்றிச் சிந்திப்பதற்குக்கூட இடம் வைக்காமல் வெகு விரைவில் எது நடக்கக் கூடாதோ அது நடந்து விட்டது!

அப்பா சாப்பிட்டு முடிந்ததும், அவசரமாக ஒவ்வீஸுக்குப் புறப்பட்டுப் போனார். போனவர் போனவர்தான்! திரும்பவில்லை. இன்று வரை திரும்பவேயில்லை.

காட்டுத் தீபோல நாடு முழுவதும் பரவிய வகுப்பு வெறிக்கு எத்தனையோ ஜீவன்கள் அநாதரவான நிலையில் துடிக்கத் துடிக்கப் பலியாக்கப்பட்டன. ஆண்கள், பெண்கள், பச்சிளங் குழந்தைகள் என்ற பேதமின்றிக் கொலை செய்யப்பட்டனர். பட்டப் பகலிலேயே சித்திரவதை, கொலை, கொள்ளை, கற்பழிப்பு...

அ-ப்-பா-வை-யு-ம்...

யாராவது ஒரு முரடன் அவர் மார்பில் கத்தியைப் பாய்ச்சிக் கொலை செய்து விட்டு காரையும் கொளுத்தியிருப்பான். அல்லது காருக்குள்ளே கட்டி வைத்து உயிருடனே பெற்றோலை ஊற்றி...

என் கண்முன்னே நடைபெற்ற கோரக் காட்சிகளை நினைத்துப் பார்க்கவே உள்ளம் நடுங்குகிறது. அன்று மாலை நெருங்க நெருங்க. வெறியர்களின் அட்டூழியங்கள் உக்கிரமடைந்து கொண்டே வந்தன. அவர்களின் வெறித்தனமான கூக்குரல்களும், கும்மாளமும் வீதியெங்கும் அதிகரித்தன. ஒரொரு சமயம் வீதியில் நடமாட்டம் பரபரப்படைந்தது; இன்னோர் சமயம் வெறிச்சோடிக் கிடந்தது. திடீரென்று போத்தல்களும், கற்களும் வீதியிலே உருண்டன. நெஞ்சுக் கூட்டினுள்ளே, கத்திக்குத்துகளும், துப்பாக்கி வேட்டுகளும் அதிர்வதாகப்பிரமை தட்டியது. மாலை மங்க மங்கப் பயங்கரமான செய்திகள் காதுகளில் நாரசமாக விழுந்தன. அப்பாவுக்கு ரெலிபோன் செய்வதற்காக இலக்கத்தைச் சுழற்றியபோது நான் திடுக்கிட்டேன்; ரெலிபோன் இணைப்புத் துண்டிக்கப் பட்டிருந்தது.

8

அப்பாவையும் தங்கையையும் எதிர்பார்த்துக் கணத்துக்குக் கணம் ஏமாற்றமும், மனக் கலக்கமுமே அதிகரித்தது. திடீரென உணர்ச்சி வந்தவர் போலக் கிழவர் துடித்துப் பதைத்துக் கொண்டு எழுந்தார். ''இந்த ஊட்டிலே இருக்க வாணாம். இருந்தா 'டேஞ்சர்' வாறது. அதுசுட்டி நம்ம ஊட்டுக்குப் போங்க. நான் தங்கச்சியைக் கூட்டி வாறான்!'' என்று சொல்லி விட்டு வெளியே போனார்.

பரபரப்புடனும், பீதி நிறைந்த கண்களுடனும் பொடிஹாமி என்னைத் தன்வீட்டுக்கு அழைத்துப் போனாள். நாங்கள் அவள் வீட்டில் நுழைந்த அந்தக் கணமே எங்கள் வீட்டுக் கூரைமீது கடகட என்று கற்கள் விழுந்தன. ஓடுகளும், கண்ணாடிகளும் நொறுங்கும் சத்தம் காதுகளைத் துளைத்தது. முரடர்களின் அட்டகாசம்!

'குய்' என்ற இரைச்சலோடு, வீட்டுக் கூரை மேல் திடீரென்று பெரு வெளிச்சம் தெரிந்தது. பெற்றோலில் குதித்துப் பொங்கி எழுந்த தீச் சுவாலைகள் வானத்தைத் தொடுவதைப்போல வளைந்து வளைந்து தாவியெரிந்தன.

ஊழிக்காலத்தின் கோரத் தாண்டவம்!
''தெமளனுகள் எங்கே?''

''எங்கே அந்தப் பறத் தெமிளோ?''

உணர்ச்சி வெறியில் பீரிட்டெழுந்த கோரக் குரல்கள் குடிசையை நெருங்கின. பொடிஹாமி என்னை ஒரு மூலையில் மறைத்து வைத்து விட்டுக் கையில் பெரிய கத்தியொன்றை எடுத்துக் கொண்டு வாசலுக்கு ஓடினாள்; கதவை இழுத்துப்பூட்டிக்கொண்டு வெளியே நின்றாள்.

''கதவைத் திற!''

''அவங்களை வீட்டிலே மறைத்து வைக்காதே!''

''பொய்சொல்லாதே!''

''அவனைத் தந்து விட்டு உன் உயிரைக் காப்பாத்து!''

வெறியர்களின் பேய்க்கூத்து கணத்துக்குக் கணம் அதிகரித்துக் கொண்டே வந்தது. எல்லாவற்றுக்கும், கிழவி கத்தியை ஓங்கியபடி ஒரே பதிலைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''உள்ளே நுழையாதே, நுழைந்தால் வெட்டிவிடுவேன்!''

நான் என்னைத் தெய்வத்திடம் ஒப்புக் கொடுத்துவிட்டேன். ஆனாலும், என்னால் முயன்றதைச் செய்யத் தயாரானேன். எழுந்து குடிசையின் பின் பக்கம் ஓடினேன். மூலைச் சுவரில் இருந்த பரணில் தாவி ஏறி வெளியே குதித்துத் தப்ப வழிதேடினேன். சுவருக்கும் கூரைக்குமிடையில் இருந்த சிறு இடைவெளி, பலகைகளால் மறைக்கப்பட்டிருந்தது. ஒரு பலகைத் துண்டைப் பலமாக இழுத்து எடுத்து விட்டுப் பின்புறம் எட்டிப் பார்த்தேன். சாக்கடை! அதை மூடிப் பற்றைச் செடிகள், புதர்கள் மண்டிக் கிடந்தன.

பொடிஹாமி முன்பக்கம் முரடர்களுடன் போராடிக்கொண்டிருந்தாள். ஆக்ரோஷத்தோடு அவள் சொன்ன வார்த்தைகள் அந்த முரடர்களின் கூச்சலையும் மீறி என் காதுகளில் விழுகிறது:
''யத்துலட்ட யண்டனங் மாவ மறலா யண்ட!''

நான் பலகைகளை உடைத்து, வெளியே குதிக்கத் தயாரானபோது, 'ஆ! மகே புத்தா!'' என்ற அவலக் குரல் கேட்கிறது. தொடர்ந்து முரடர்கள் உள்ளே தடதடவென்று ஓடி வரும் சத்தம். நான் வெளியே குதித்துப் புதருக்குள் மறைந்து கொள்கிறேன். ஒரு கணப் பொழுதைக்கூட வீணாக்கவில்லை. சாக்கடைக்குள் இறங்கிப் பதுங்கிப் பதுங்கி நகர்கிறேன். என் நெஞ்சின் இடியே என்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்ற அச்சம்! கடைசியில் இருளோடு இருளாக நடந்து முஸ்லிம் நண்பர் ஒருவர் வீட்டில் அடைக்கலம் புகுகிறேன். இனிப்பயமில்லை. எப்படியாவது என்னை ஒரு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து விடலாம்.

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அடிமைப் பெண்

# மறுபக்கம்

– ஆழ்வார்குட்டி

"நான் தான் பூலான் தேவி! சகோதரிக்கு ...த்தவனே!" என்று நம்மைத் திட்டயபடியே ஆரம்பிக்கிறது, பண்டிற் குயீன் என்னும் திரைப்படம்.

முகத்தைச் சுழிப்பதில் பயன் இல்லை. அவளுக்கு நாம் செய்த அக்கிரமங்களுக்குப் பதிலாக அவளால் அப்படித்தான் சொல்ல முடியும்!

சமூகம், தலித்பெண்ணின் உடல் மீதும், ஆன்மா மீதும் பிரயோகித்த வன்முறை; பிரதிபலனாக அப்பெண்ணினால் சமூகத்தின் மீது பிரயோகிக்கப்படும் எதிர் வன்முறை; என்பன இத்திரைப்படத்தின் ஆதாரசுருதி. மேற்கூறிய வரிகள் இருத்தினச் சுருக்கமாக அதனைக் கூறிமுடிக்கின்றன.

1983இல் உத்தரப்பிரதேச முதலமைச்சர் முன்னிலையில் காவல் துறையினரிடம் சரணடைந்த பின்னர் சிறையிலிருந்தபடியே பூலான தேவி அவர்கள் - அவரை நாம் கொள்ளைக்காரி என்றும், கொலைகாரி என்றும் இழிந்த சாதி என்றும் சொல்லிக் கொள்கிறோம். - எழுதிய வாழ்க்கைக் குறிப்புக்களின் ஆதாரத்துடன் இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பூலான்தேவி அவர்கள் எழுத்தறிவற்றவர். அதற்கான வாய்ப்புக்கள் நம்மால் பிடுங்கப்பட்ட ஒரு சமூகத்தின் பிரதிநிதி அவர். தற்பொழுது ஜனநாயக அரசியலில் ஈடுபட்டுள்ள பொழுது (ஈடுபடுத்தப்பட்டுள்ள பொழுது) கற்றுக் கொள்வதில் அவர் மிகவும் ஆர்வம் காட்டி வருகிறார்.

சரணடையும் சந்தர்ப்பத்தில்; "எனது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும், எனது சமூகத்தினருக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். எமக்கு நிலம் வழங்கப்படவேண்டும். எமக்கு இலவசக் கல்வி வழங்கப்படவேண்டும்" என அவர் நிபந்தனைகள் விதித்திருந்தார் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டும். ஆனால் அவை எவ்வளவு தூரம் எய்தப்பட்டன என்பது எமக்குத் தெரியாது.

சிறையிலிருந்த சந்தர்ப்பத்தில் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு பிரபல திரைப்படவியலாளர் மிருணாள்சென் அவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவி புரிந்துள்ளார் என நண்பர் ஒருவர் கூறினார்.

இத்திரைப்படத்தின் தயாரிப்பாளரும், இயக்குநருமான செகர் கபூர் அவர்களுக்கெதிராக பூலான்தேவி அவர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

தனது வாழ்க்கை வரலாறு உள்ளது உள்ளபடியே படமாக எடுக்கப்படவில்லை எனவும், சில சம்பவங்கள் திரித்தும் புனைந்தும் கூறப்பட்டுள்ளன என்றும், ஒப்பந்தத்தின் பிரகாரம் தனக்குச் சேரவேண்டிய பணம் முழுவதும் தந்து முடிக்கப்படவுமில்லை எனவும், பூலான் தேவி அவர்கள் குற்றம் சாட்டுகின்றார்.

"பூலான் தேவியின் சுயசரிதை முழுவதையும் அப்படியே திரும்பவும் செலுலோய்டில் பதிவு செய்வது எனது நோக்கமல்ல, அவரது வாழ்க்கை அனுபவங்களில் முக்கியமானவற்றுக் கூடாக நமது சமூகத்தின் கோர முகங்களில் ஒன்றை உலகுக்குத் தெரியப்படுத்துவதே எனது நோக்கம்" என செகர் கபூர் அவர்கள் வாதிடுகிறார். பூலான்தேவிக்கு சேரவேண்டிய பணம் முழுவதும் பின்னர் செலுத்தப்பட்டதாகவும் அறிமுடிகிறது.

பூலான் தேவியாக பம்பாயின் சேரிப்புறத்தைச் சேர்ந்த ஒரு சிறுமியும்; ஏற்கெனவே நாடகங்கள் மூலம் பிரபல்யமடைந்திருந்த சிமா பிஸ்வால் என்னும் ஆற்றல் மிக்க நடிகையும் நடித்துள்ளனர். பண்டிற் குயீன் வெளியாகி, உலகெங்கும் ஓடி 'காம சூத்ரா' நாட்டினரின் தற்போதைய பாலியல் பராக்கிரமங்களைப் பறைசாற்றி, வசூலை அள்ளிக் குவித்த பின்னர்; சிமா பிஸ்வால் மிக மிகப் பிரபல்யம் அடைந்து விட்டார். ஆனால் அவரது கணவர் அவரை விவாகரத்து செய்துவிட்டார்.

சிறுபராயத்து பூலான் தேவியாக நடித்துள்ள சிறுமி சில காட்சிகளில் நடிப்பதற்கு ஆரம்பத்தில் மறுத்துள்ளாராம். அவரது கணவர் (சிறுமிக்கு திருமணமாகி விட்டது!?) அவரைக் கைவிட்டு விடுவார் என்கின்ற பயம்தானாம் காரணம். அப்புறம் சிமா பிஸ்வால் நடிக்கும் காட்சிகளில் உடனிருந்ததால் தெம்பு பெற்று அக்காட்சிகளை நடித்துக் கொடுத்தாராம். பூலான் தேவி தனது கணவனை அடித்துக் கொலை செய்யும் பொழுது, "சிறுமிகளை கல்யாணம் செய்யும் தாய்க்கு ...த்தவர்களை நான் கொல்வேன்" என கூச்சலிடுகின்றார் என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு முழுவதையும் இப்படத்தில் காணமுடியாது. தற்போதைய தினமுரசில் வெளியாகும் ஒரு தொடர் பூலான்தேவியின் கதையை சொல்ல முயல்கின்றது. ஆனால் அங்கு தகுந்த வார்த்தைகள் பாவிக்கப்படுகின்றனவா என்பது சந்தேகமே. அதை எழுதுவபர்களின் தார்மீகப்பொறுப்பு, கலம் - செ.மீ. அளவுகள், பத்திரிகையின் விற்பனைச் சுட்டெண் என்பன அதைத் தீர்மானிக்கின்றன.

அதிர்ச்சியூட்டும் இத்திரைப்படத்தைப் பார்த்து முடித்ததும் செகர் கபூரின் நோக்கம் ஓரளவுக்காவது நிறைவேறியிருப்பதை உணர முடிகிறது.

31.01.1997இல் பெண்கள் கல்வி ஆய்வு மையத்தில் இத்திரைப்படத்தின் வீடியோப் பிரதி காண்பிக்கப்பட்டது. வெளியிடங்களிலும் இப்பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூலான்தேவி அவர்கள் செய்த குற்றங்கள் இரண்டு. ஒன்று அவர் தலித் ஆகப் பிறந்தது. அடுத்தது அவர் பெண்ணாகப் பிறந்தது.

இந்தியாவில் இன்னும் பொழுது புலராத ஏழ்மை மிகுந்த கிராமங்களிலும், நடு இரவிலும் விழித்திருக்கும் பகட்டான நகரங்களிலும் இன்றும் பூலான் தேவியின் அனுபவங்கள் வேறு பலருக்கு நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனால் அவர்களது வாழ்க்கை பெரும்பாலும் தற்கொலை அல்லது சித்தப்பிரமையில் முடிந்து விடுகின்றது.

பரிதவிக்க வைத்த வாழ்க்கை அனுபவங்களைப் பெற்று, சிறையில் எட்டாண்டுகள் வாடிய பின்னர் பூலான்தேவியை இன்று முழு உலகமும் அறியும். டயானா சீமாட்டி கூட அவரை சந்திப்பதில் ஆர்வமாயிருக்கிறாராம். பூலான் தேவி இப்போது ஒரு நட்சத்திரம். இனி அவரை ஒடுக்குவது கடினம்.

மறுபக்கம் ஒன்றும் உள்ளது!

"பட்டத்து ராணி பார்க்கும் பார்வை..." என அடிமைப் பெண் திரைப்படத்தில் நம்மைப் பார்த்து கண் அடித்தவர் அவர். கொன்வென்ட் படிப்பு, சரளமான ஆங்கிலம், உயர்ந்த ஜாதி, பணம்... என அவரது தகுதிகள் நீளமானவை.

நட்சத்திரமாக இருந்து கொள்ளைக்காரியாக மாறியவர் அவர். அவர் எம்மை கெட்ட வார்த்தைகளைப் பாவித்துத் திட்டமாட்டார். இருக்கவே இருக்கின்றன. "ரத்தத்தின் ரத்தமே... உடன் பிறப்புக்களே..." போன்ற வழுவழுப்பான வார்த்தைகள்.

அவருக்கும் சிறை பஞ்சு மெத்தை தானாம்!

"அவள் யாரோ... நான் யாரோ...
அவன் எனது மகனல்ல...
இனி நான் நகை பூட்ட மாட்டேன்...
ராசா எனக்கு தங்கம் தங்கமாக பரிசு தந்தார்...
அமைதிப் பூங்காவில் அராஜக வாதிகள்..."

என்றெல்லாம் அறிக்கை விடுவார்.

அதெல்லாம் ராஜதந்திரம்!!

தமிழர்களின் அரசியலை நன்கு புரிந்து வைத்திருக்கிறார்! திரும்பவும் பதவியைப் பிடித்து விடுவார் போலத் தெரிகிறது. அரசு கட்டில் ஏறியதும்,

"அடிடா... அவனை" என்பார்.

இவரை மடக்குவதும் கடினம். ஏனெனில் இவரும் இன்னும் ஒளி மங்காத ஒரு நட்சத்திரம்.

நாமும் ஒரே குற்றத்தைச் செய்து கொண்டேயிருக்கிறோம்.

மறதி!! மறதிதான் அது. ○

# திரைப்படத்தின் தாக்கமும் பெண்களின் வாழ்நிலையும் – 3

## சில இந்தியப் பெண் நெறியாளர்கள்

– கேஎஸ்சிவகுமாரன்

சட்டத்தின்படி பெண்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக இல்லாவிட்டாலும், பெண்கள் தொடர்ந்தும் ஆணாதிக்கத்தின் பிடிகளிலிருந்து முற்றாக விடுதலை பெறவேயில்லை. ஆயினும் திரைப்படத்தில், பெண்கள் ஆண்களை விடக்கூடுதலான அக்கறையை குடும்பம், சமுதாயம், அரசியல் போன்ற விடயங்களில் செலுத்திவருகிறார்கள் என்று தான் கூறவேண்டும். இவர்களுடைய படங்களைப் பார்க்கும் ஆண்களும் பாதிப்பு அல்லது ஒரு சில மாற்றங்களுக்கு உட்படுகிறார்கள்.

நல்ல முறையில் திரைப்படங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் அதே வேளையில், பெண்களை வெறுமனே போகப்பொருள்கள் தான் என்ற கருத்துத் தொனிக்கும் விதத்தில் பெரும்பாலான இந்தியப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பெண்களின் அழகையும், கவர்ச்சியையும், கலாரீதியாக ரசிக்கும் வண்ணம் காட்டாது மலினமான முறையில் அவர்களைச் சித்திரிப்பதனால் அறிவு, அனுபவம், பக்குவம் பெறாத பார்வையாளர்கள் பெண்களைக் கேவலமாக ரசிப்பதும் பார்ப்பதும் ஒரு தாக்கத்தை உண்டு பண்ணி, பெண்களின் அந்தஸ்தையும், வாழ்நிலை மேம்பாட்டையும் உயர்த்துவதற்குப் பதிலாக கீழ்நிலைக்கு மேலும் மேலும் தள்ளுவதையே நாம்காண்கிறோம். ஹிந்தி, தெலுங்கு, தமிழ், மலையாள மொழிப்படங்களில் பெரும்பாலானவை தரமானவையாய் இருப்பதில்லை. இதற்குக் காரணம் குடும்பப் படங்கள் என்ற பெயரில் கீழ்மட்ட ரசனையுடையவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக, நெறிமுறையற்ற விதத்தில் இவை நெறிப்படுத்தப்படுவதாகும். அதே சமயத்தில் வங்காளம், மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளிலும் ஹிந்தி, தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளிலும் நல்ல ரசனை தரும் சில படங்களும் வெளிவராமலில்லை.

டெல்லி திரைப்பட விழாவில் காட்டப்பட்ட படங்களில் பெரும்பாலானவை பெண்களைச் சுற்றி எடுக்கப்பட்ட படங்களாகவே இருந்தன. இந்தியப் படங்களை எடுத்துக் கொண்டால், சித்தானந்த தாஸ் குப்தா நெறிப்படுத்திய அருந்திசி (Arundisi) என்ற வங்காளப்படம், பூலான் தேவியின் கதையைச் சித்திரிக்கும் பண்டிட் குயீன் (Bandit Queen) என்ற ஹிந்திப் படம் (இதனை நெறிப்படுத்தியவர். சேகர் கபூர் , சுமித்ரா பாவே (Sumitra Bhave) நெறிப்படுத்திய டோகி (Doghi) என்ற மராத்தியப் படம், சுஹாசினி நெறிப்படுத்திய இந்திரா என்ற தமிழ்ப்படம், ஷியாம் பெனிகல் நெறிப்படுத்திய மம்மு (Mammo) என்ற ஹிந்திப்படம், சலீம் அக்பர் மிர்சா (Saleem Akhfar Mirza) நெறிப்படுத்திய நசீர் (Naseer) என்ற ஹிந்திப்படம், ஹரி குமார் (Hari Kumar) நெறிப்படுத்திய சுக்ருதம் (Sukrutham) என்ற மலையாளப் படம், கே.எஸ்.சேதுமாதவன் நெறிப்படுத்திய ஸ்திரீ (Stri) என்ற தெலுங்குப்படம், ரிதுபர்ணா கோஷ் (Rituparno Ghosh) நெறிப்படுத்திய நிஷே ஏப்ரல் (Unishe April) என்ற வங்காள மொழிப்படம், மதுஸ்ரீ தத்தா நெறிப்படுத்திய Memories of Fear என்ற ஆங்கில விவரணச் சித்திரம், சுபாஷோசௌதாரி (Subhacho Chowdhary) நெறிப்படுத்திய ஸ்ரில் லைஃப் (Still Life) என்ற ஆங்கில விவரணம், செய்ஃயோ சிங் (Sehjo Singh) நெறிப்படுத்திய சோனாமாத்தி (Sona Matti) என்ற மார்வாரி மொழி விவரணம். சாகரிசாபா (Sagari Chhaba) நெறிப்படுத்திய தத்வ என்ற ஹிந்தி விவரணச் சித்திரம் ஆகியவையாகும்.

முற்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நேர்ந்த துயரம் தான் என்னவோ?

சரிநிகர் - 114இல் 'இப்படி சொல்ல வேண்டியிருப்பதே துயரம்' என்று விவாதம் வீசாமல் மூடி அடித்த பெட்டியை உடைத்துத் திறந்துவிடும் துடிப்புடன் சில வரிகள்...

பிள்ளைக்கு அடித்தால் பெற்றோரிடம் பொலிஸ் வந்துவிடும். அப்படி அடிப்பது நாகரிகக்குறைவு. ஏதோ இந்த அந்நிய நாட்டின் சில நல்ல அம்சங்களை உள்வாங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற பிரமை. இதனூடு அந்த நண்பர் சிலாகித்தார், ''பிள்ளையை அடிப்பது பிழையானது தான்; அடிக்கக் கூடாது; பார்க்கிற பார்வையில் பிள்ளை காலடியில் வந்து நிற்க வேண்டும்.''

அதிகாரம் செயற்படும் களத்தில் - அதன் கருத்தியலில் - மாற்றம் ஏற்படாத நிலையில் அது வெவ்வேறு வடிவங்களில் (முன்னரை விட குரூரமாகவும் கூட) வெளிப்படவே செய்யும்.

முஸ்லிம் மக்கள் விடயத்தில் புலிகள் தமது 'தவறு'களையும், செய்த கொலைகளையும் ஏற்றுக்கொண்டு முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். புலிகளால் கொல்லப்பட்ட/பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவது முதல் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட அனைத்து முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்ற (சேரன் முன்வைக்கும்) இரு நியாயமான நிபந்தனைகளை புலிகள் நிறைவேற்றினால் கூட முஸ்லிம்கள் மீதான புலிகளின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதாகவோ, 'ஆஹா புலிகள் திருந்தி விட்டார்கள்' என்றோ கொண்டாட நான் தயாரில்லை. (அதன் அர்த்தம் இந்நிபந்தனைகளை மறுப்பது என்பதல்ல.) இந்த நிபந்தனைகள் நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் ஒருவித 'சரிக்கட்டலாக'க்கூட நடந்தேறலாம். நரித்தந்திரோபாயமாகக்கூட நடந்தேறலாம். புலிகளின் கருத்தியலில் அமைப்பின் அகமும் புறமும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவது முக்கியமான முன்நிபந்தனையாகும். இந்தப் புறத்தில் - அதாவது தமிழ் மக்களிடம் முஸ்லிம்கள் சம்பந்தமான கற்பிதங்களில் உடைவுகளை ஏற்படுத்துவதும், தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு நிலையை மேன்நோக்கிய நிலைகளில் தக்க வைத்துக் கொள்வதுமான தளங்களில்தான் நாம் நின்று பேசுகிறோம். (சரிநிகரும் அவ்வாறு தான் என்று நான் நினைக்கிறேன்.)

இதற்கு புலிகளின் அதிகாரத்துவம் ஒரு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும்போது, புலிகளின் அகத்தில் பாலசிங்கத்தின் அறிக்கையை விரித்து வைத்து சேரனுடன் ஒன்றாக இருந்து சிலாகிக்க என்னிடம் ஏதுமில்லை. அறிக்கைகளை மாற்றங்களாக உருமாற்றிக் காட்டும் அப்பாவித்தனமும் என்னிடம் இல்லை; அதுவே முஸ்லிம் மக்கள் தொடர்பான புலிகளின் அரசியலாக்கும் மேலோட்டமும் இல்லை.

புலிகள் இயக்க உட்கட்டமைப்பும் அதனுடைய இறுக்கம் மற்றும் புனிதம், கட்டுப்பாடு, விசுவாசம் போன்ற கருத்தியலிலிருந்து உருவாகும் சிந்தனையும் எதேச்சாதிகாரத்துக்கு இட்டுச் செல்கிறது என்ற சேரனின் கருத்துத் தளத்தில் (முழு உடன்பாட்டோடு) பேசுவதற்கு நிறைய இருக்கிறது. அதை சாத்தியமாக்கும் நுண்களங்களை நாம் சல்லடை போட்டுத்தேடவேண்டியுள்ளது. பிள்ளை மீது அதிகாரம் செலுத்துகின்றனர் பெற்றோர்; மாணவர்மீது அதிகாரம் செலுத்துகிறான் ஆசிரியன்; பெண்மீது அதிகாரம் செலுத்துகிறான் ஆண்... இப்படித்தொடங்குகிறது அதிகாரங்களின் நுண்களங்கள். கருத்தியல் தளத்தில் சமூக அங்கீகாரத்தோடு இவை நடந்தேறுகிறது. இந்த நுண்களங்கள் வன்முறையாலும் கருத்தியலாலும் கட்டமைக்கப்படுகிறது. இங்குதான் ஒழுங்கு கட்டுப்பாடு, புனிதம், நியதி என்றெல்லாம் கற்பிதங்கள் செய்யும் மதம், கலாசாரம், போதனைகள், மரபுகள், இலக்கியங்கள் எல்லாமே எமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் தேடுதலுக்குட்பட வேண்டியதாகிறது. புலிகளின் கட்டுமானங்களுக்குள் மட்டும் இது தனித்து நிலவுவதாகப் பார்த்தால் நாம் மீண்டும் மீண்டும் ஏமாற வேண்டிவரலாம். புலிகள் இயக்கக் கட்டமைப்பு, அதன் தலைமை என்பவற்றின் தனித்துவத்தால் அது மேலும் உச்சநிலைகளுக்கு கட்டியமைக்கப்படுவதற்கு அடித்தளம் இந்த சமூகத்திலேயே வளமாகக் கிடைக்கிறது. இந்த வளம் இயக்கக் கட்டமைப்புகளுக்குள் கொழித்துக் கிடந்தது என்பதற்கு எந்த இயக்கமும் விதிவிலக்கில்லை. 'புதியதோர் உலகம்' நாவல் இதற்கு ஓர் அருமையான சாட்சி.

(புலிகளின் பெண்விடுதலை சம்பந்தமான கருத்தை ஒருபுறம் வைத்து விட்டு) சமூகம் வகுத்த 'பெண்'ணின் வரையறைகளில் சில மீறல்களைச் செய்துள்ள இன்றைய பெண் போராளி இந்தப் போராட்டத்திலிருந்து ஒதுங்கி அமைப்பைவிட்டு வெளியே வரும்போது அவளை இந்தச் சமூகம் எந்த ஸ்தானத்தில் வைக்கும் என்பதுபற்றி விவாதங்கள் எழும்புவதற்குக் காரணமே சமூகம் தனது முழிக்குள் சொருகியிருக்கும் புனிதம், ஒழுங்கு... என்பவற்றின் மீதான அச்சம்தான்.

புலிகளை ஒட்டுமொத்தமாக முஸ்லிம் எதிர்ப்பாளர்களாகப் பார்ப்பது தவறு என்பது எனது விமர்சனத்தின் (நான் எழுதியது சிறு வாசகர் கடிதம் மட்டுமே) உட்கிடக்கை என்று கட்டுடைக்கிறார் சேரன். இந்த இடத்தில் தமிழர் முஸ்லிம்கள் என்று பிரித்து உலாவ விடுவது போன்ற ஒரு நெருடல் ஏற்படுகிறது. இது ஒரு வேளை எம்மையறியாமலே எம்மிடம் எஞ்சிநிற்கும் கசடுகளோ என்றும் சிந்திக்கத் தோன்றுகிறது. இது ஒரு புறம் இருக்க, இந்தக் கட்டுடைப்பு ஒரு திருகல் நிலையில் பெறப்பட்ட ஒன்று என்பதை சொல்லியாக வேண்டியுள்ளது. புலிகள் மாற்று இயக்கப் போராளிகள் மீது வெறிகொண்டு பாய்ந்து உயிரோடு ரயர் போட்டு கொளுத்தினார்கள்; அவர்களின் பெற்றோர்களை மண்ணை விட்டே ஓரிசா வரை துரத்தினார்கள். ஜனநாயக சக்திகளைக் கொலை செய்தார்கள். சிறைப்படுத்தினார்கள். சிங்கள மக்களை கண்மண் தெரியாமல் சுட்டுப் பொசுக்கினார்கள். இவைகளையும் முஸ்லிம் மக்கள் மீதான படுகொலைகள், விரட்டியடிப்பு போன்ற கொடுமை நிறை வரலாற்றுத் தலைகுனிவுகளையும் கவனத்தில் எடுக்கும் போது புலிகளின் ஆதிக்க அரசியல் வெளிப்படுகிறது. அவர்களிடம் நிலவும் முஸ்லிம்கள் மீதான தமிழ்ப் பேரினவாத அரசியல் வெளிப்படுகிறது. இன்னொரு புறம் பேரினவாதிகளுக்கு எதிரான அவர்களின் போராட்டத்தில் தமிழ் மக்களின் நலன் சார்ந்த அரசியல் இருக்கிறது (இதனாலேயே அரச இராணுவத்தோடு சேர்ந்து நின்று புலிகளை எதிர்க்கும் தமிழ்க் குழுக்களை நிராகரிக்க நேர்ந்தது). இந்த அரசியலை நீக்கி வெறும் கொலைக்காரத்தனத்தை ஆத்மாவின் கவிதை சித்திரித்ததையே வெறும் புலி எதிர்ப்பு என்கிறேன். இது கனதியற்றது என்கிறேன். இதிலிருந்து மீளாவிட்டால் படிப்படியாக இனவாத சகதிக்குள் அமிழ்ந்துவிடும் ஆபத்துக்கூட இதனுள் உள்ளடங்கியிருக்கிறது என்கிறேன். எமது விருப்பு மட்டும் எமது நிலைப்பாட்டை தொடர்ந்தும் காப்பாற்றப் போதுமானதல்ல என்கிறேன். இதைவிட்டுவிட்டு புலிகளை ஒட்டுமொத்தமாக முஸ்லிம் எதிர்ப்பாளர்களாகப் பார்ப்பது தவறு என்பதுதான் எனது 'விமர்சனத்தின்' உட்கிடக்கை என்று சேரன் கட்டுடைப்பது தவறானது.

எதிர் நிலைகள் என்பது கூட அவற்றிற்கிடையிலான தொடர்பின் மூலம் தான் அததற்குரிய அர்த்தத்தைப் பெறுகின்றன. பன்முகத் தன்மைகளைத் தரவல்ல இந்தத் தொடர்பின் வெவ்வேறு நிலைகளை புறந்தள்ளிவிட்டு (உண்மை/பொய், எதிர்ப்பு/விசுவாசம்... என) இருமைகளை வகுத்துக்கொண்டு பிரச்சினைகளை அணுகப் புறப்படும் போது பார்வை குறைபாடுடையதாகிறது. முத்திரை குத்தல்களை இலகுவாக செய்யும் முடிகிறது. ஆத்மாவின் இந்தக் கவிதையுடன் முரண்பட்டோம் என்பதற்காக எனதும் ஜெயபாலனதும் கருத்துக்கள் பொதுமைப்படுத்தப்பட்டது கூட இந்தவகையானதுதான். இது எதிர்பார்க்காத ஒன்று.

''கவிதை மோசமானது என்று நான் அபிப்பிராயப்படுவதற்கு காரணம் கவிதை பேசுகிற(!) அரசியல் தான்'' என்று சரியாகவே அடையாளம் கண்ட சேரன், புலிகளின் (பாலசிங்கத்தின்) அறிக்கையையே முஸ்லிம் மக்கள் தொடர்பான அரசியலாக்கி அதையே ஆத்மாவின் கவிதைக்குள்ளும் ஏற்றிக் காட்டுகிறார். அவருடைய இந்த முயற்சிக்கு கவிதையின் வாசகர்களிடம் பதிலிருக்கும். எனது வாசனைக்குள்ளிருந்து அது இடறிவிடுகிறது. இராணுவ மேலாதிக்கம் வாய்ந்த அரசியல் என்று பகுதித்தனமாக திணித்தாலும் கூட நிலைமை அதுவேதான். எனவே தான் அதை வெறும் புலிஎதிர்ப்பு வகைப்பட்டது என்றேன். அதாவது அரசியல் நீக்கம் செய்யப்பட்ட கவிதை என்கிறேன். மற்றபடி கவிஞனின் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தில் சேரனின் கருத்துடன் பிசகே இல்லை. கவிதையை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்து எனது கருத்தை நிறுவும் மோசமான அணுகுமுறைக்கு என்னால் வரவே முடியாது. கவிதை என்னில் ஏற்படுத்திய பாதிப்பிலிருந்து தான் எனது விமர்சனமே பிறக்கிறது என்பதால் கவிதை வரிகளுக்குள் நின்று சுழன்று பதிலளிக்கும் தவறை நான் செய்வதாக இல்லை.

புலம்பெயர் வாழ்வில் காலம் கழிக்கும் நாம் சொந்த மண்ணில் ஒன்றாகப் புரண்டு வாழ்ந்த வட்டங்களைப்பற்றிய உணர்திறனே எம்மிடமிருந்து தூரப்பட்டுக் கொண்டு போவதாக உணரும் போது, முஸ்லிம் மக்களுடன் சேர்ந்துவாழும் சந்தர்ப்பமே கிடைக்காத என் போன்றவர்களிடம் அவர்கள் சம்பந்தமான உணர்திறனில் குறைபாடுகள் இருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்வதிலோ அல்லது யாராவது சுட்டிக்காட்டுவதிலோ துயரப்பட என்ன இருக்கிறது.

சேரனுக்கு நேர்ந்த துயரம் தான் என்னவோ?

ரவீந்திரன்
சுவிற்சலாந்து

# ஏறுவெயில் (உரை)பற்றி...

இதழ் 113இல் மஜீதின் ஏறுவெயில் தொகுதி தொடர்பான சேரமான் கணைக்கால் இரும்பொறையின் உரையைப் படிக்க நேர்ந்ததும் இதை எழுத வேண்டுமென்று எனைத்தூண்டியது. மஜீதின் ஏறுவெயில் கவிதைத் தொகுதி தமிழின் ஒரு உச்சப்படைப்பென்று வாதிட நான் வரவில்லை. சே.க.இ.யின் நீண்ட உரையைப் பிரித்து சில கேள்விகளைக் கேட்டு விடலாமென்று நினைக்கிறேன். அத்துடன் அவர்ன் சரி என்று கருதும் நுனிப்புல் மேயும் இலக்கியப் பார்வையை சரி செய்யவும் இது உதவும்.

கவிஞனின் தனித்தன்மையை கவிதையின் எந்த அம்சத்தை வைத்து அடையாளம் காண்கிறார் என்பது தவிர்க்க இயலாமல் எழும் கேள்வியே! கவிதை என்பது ஓர் உணர்வுதான் என்று சாதாரணமாய் சொல்வது கவிதை பற்றிய இவரின் அறியாமை என்றே நினைத்து விடத் தோன்றுகிறது. கவிதைக்கு வெளிச்சூழல் மிக முக்கியமானதே. மூலம் என்றும் சொல்லலாம். வெளிச்சூழலில் உரசப்படும் பொறிகள் மனசின் பிராந்தியங்களில் கரைந்து மீள மனசில் எங்கோ ஒரு மூலையில் புது உருக்கொள்கிறது. வெளியுலகை மனதில் உருக் கொள்வதற்கே உணர்வு பயன்படுகிறதே தவிர உணர்வு தான் கவிதையல்ல. (வடிவமைக்கப்பட்ட உணர்வு மனதில் தோன்றுவதில்லை) வெளியுலகின் மூலம் உணர்வினால் உருக்கொள்ளப்பட்டு பிறகு மொழிப்படுத்தப்படுவதே கவிதை எனும் முழுமையாகிறது. ஆகவே கவிதையின் கருவிலும் கவிதை நகர்ந்து வருகின்றபோதும் எந்த அம்சத்தைக் கொண்டு கருவை முழுமையாய்க் காட்டுவது என்பதிலுமே ஒரு கவிஞனின் தனித்தன்மையைக் கண்டு கொள்ள முடியும். சே.க.இ. சொல்லும் தனித்தன்மை என்ன?

மஜீதின் தனித்தன்மையைக் காட்டக்கூடிய கவிதைகள் ஏறுவெயிலில் நிறையவேயுண்டு.

சோலைக்கிளியின் சாயலென்றும் - சண்முகம் சிவலிங்கத்தின் என்னவோ - வாசுதேனின் வேறென்னவோ என்கிற சே. க. இ.யின் ஒரே உந்துதல் தனது வெப்புசாரத்தின் சிதறல்களை வசனங்களில் ஆங்காங்கே தூவுவது தான். அல்லது இவரின் நவீன கவிதை பற்றிய உயர்தரமான அறியாமையே இது என்பதும் பொருந்தும். சென்ற கால் நூற்றாண்டு (தொல் நவீனம்) இலக்கியக் கவிதையின் இடைவிடாத கசிவின் தொடர்ச்சியே நவநவீன இலக்கியம். கிழக்கின் இலக்கியத்திற்கென்றொரு தனித்தன்மை உயிர்கொண்டிருப்பது தற்செயல் ஒன்றல்ல. இன்னும் எம். பௌஸர், றஷ்மி போன்றோரின் கவிதைகளிலும் கிழக்கின் இலக்கியத்தன்மையைக் கண்டு கொள்ள முடியும்.

''இப்பவும் இப்படியும்'' என்கின்ற மஜீதின் கவிதை. சோலைக்கிளியின் எட்டாவது நரகத்திலிருக்கும் ''நினைவுகள்'' என்ற கவிதை போல் ஆரம்பித்து வாசு தேவனை காட்டு கிறது என்று சொல்லியிருப்பது எப்படி என்று சற்று விளக்கினால் என்ன?


வாசுதேவனைக் காட்டுவதாக இருந்தால் சோலைக்கிளியைப் போல் ஆரம்பிக்குமா? அல்லது சோலைக்கிளியைப்போல் ஆரம்பித்தால் வாசுதேவனைக் காட்டுமா? என்னதான் இது சே.க.இ.? நீங்கள் சொல்வது சரிதான். உங்களுக்கு அப்படித்தான் தென்படும். கட்டாயம் மூன்று தடவையல்ல அதை விட பல மடங்கு அதிகமான தரம் நீங்கள் படிக்கத்தான் வேண்டும். அப்போதுதான் உங்கள் மனதில் ஒட்டலாம் என நினைப்பதில் தவறில்லை என்றே கருதுகிறேன். ஈழத்து இலக்கியம் வடக்கிலிருந்து - கிழக்கிற்கு நுண்ணிய திரும்புதல(Micro Turn)டைந்திருக்கிறது. இந்த நுட்பமான வேறுபாட்டை உணர்வதன் மூலம் கிழக்கின் இலக்கியத்திற்குரிய தனித்தன்மையை அறிவதில் ஏற்படும் சிக்கல்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதை சேரமான் கணைக்கால் இரும்பொறை விளங்கிக் கொள்க!

கரிஷ்மாகிருஷ்ணசாமி
அக்கரைப்பற்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## சில்லறைகளுக்காக சில சில்லறைகள்!

மெல்லத்தமிழினி மீண்டும் தலைகாட்டியிருப்பது வரவேற்கத்தக்கது. மெல்லத்தமிழினி... எனத்தொடங்கும் அடுத்த வரியான சாகும் என்பதை உண்மையாக்குவது போல் திடீரென சாக்காட்டி விடாதீர்கள்.

சில அமைப்புகள் தகுதி தராதரம் பார்த்தே நிகழும் வன்முறைகளை எதிர்த்து குரல் கொடுக்கின்றன! இனம்பார்த்தே செயல்படுகின்றன! எல்லாப் பெண்களும் கலாநிதிகளாகவோ, விரிவுரையாளர்களாகவோ இருப்பதில்லையே. அல்லது பெரிய இடத்தில்பிறந்து பதவிகளில் இருப்பதில்லையே... குறிப்பாக சமீபத்தில் டி.என்.எல் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டகாசத்தினைக் கருத்தில் கொண்டு ஊன்றி உணர்ந்தோமெனில் பல உண்மைகள் புலப்படும்.

சம்பந்தப்பட்ட பெண்மணி செல்வாக்கு உடையவராக இருந்ததால் பிரச்சினை தீவிரமாகி எதிர்ப்பு உக்கிரமாக ஓங்கியது. இதன் பின்னணியாக எழுந்த எதிர்ப்பலையின் முக்கிய விடயமாக உணரப்பட்டது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கொடூரத்தன்மை. ஆனால் போராட்டக் குரலாக வெடித்தது பெரும்பாலும் இச்சட்டத்தை வட-கிழக்குக்கு வெளியே அமுல் படுத்துவதை கண்டித்தே. அப்படியாயின் இதன் உண்மைத் தன்மை என்ன? அங்குள்ளவர்கள் யார்? இங்குள்ள இஷானிகள் காப்பாற்றப்படவேண்டும். அங்குள்ள நந்தினிகள்...?

மற்றையது இன்றைய சூழலில் ஒரு பெண் அதுவும் ஒரு தமிழ்ப் பெண் தற்கொலையாளியாக தன்னை மாற்றிக் கொண்டமைக்கு புலிகளின் திட்டமிட்ட யுக்தி கராணமல்ல. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கொடுங்கோலாட்சியே. சும்மா இருக்கும் பெண்ணிடம் வெடிப்பொருளைக் கட்டிக்கொண்டு பாய் என்றால் எப்படிப் பாய்வாள்? அவள் என்ன நெருப்புச்சுடும் என்றறியாத பாலகியா? பாலபாடம் படிப்பிக்க புறப்பட்டிருக்கும் பல அதிமேதகு புத்திஜீவிகள் உண்மைகளை உறங்க வைக்க தாலாட்டுப் பாடுவதை நிறுத்த வேண்டும். உண்மைகள் உறங்காது விழித்து எழும்! உணர்வீர்களாக...

டக்ளஸ் தேவானந்தாவின் செவ்வி படித்தேன். சிரிப்பதா அழுவதா எனத் தெரியவில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையை விட மிக மோசமாக இருக்கிறது. ஜனநாயக வழிக்கு திரும்பிய தமிழ்க்கட்சிகள் நடப்புகள் புரிந்தும் சிறு சிறு சில்லறைச் சலுகைகளுக்காக வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் நின்று தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகளையும், வேகத்தினையும், மந்தப்படுத்தி கொச்சைப் படுத்துவது கவலையைத் தருகிறது.

பிரதேசசபை தேர்தல்கள் வரப்போகின்றன. திருவிழா நடக்கப்போகிறது. சரிநிகர் ஆசிரிய பீடத்தாருக்கு ஒரு அன்பான வேண்டுகோள். தயவு செய்து அரசியல் கட்சிகளின் கபட நாடகத்தினை காட்சிக்கு கொண்டு வருவது உங்களின் முக்கிய பங்கு. குறிப்பாக மலையக அரசியலாளர்களின் முகமூடி கழற்றப்படவேண்டும். ஏனெனில், இவர்களின் தில்லானாவால் பேரினவாத கட்சிகள் மகுடம் சூட்டப்படும் நிலைக்குள்ளாகலாம். இதைக் கொண்டு யுத்தத்தைத் தொடர வாய்ப்புண்டு.

கணேசலிங்கம் அவர்கள் தமது குத்துக்கரணத்தை மேற்கொண்டுள்ளார். நிச்சயமாக அவர் பொ.ஐ. முன்னணியினரின் பாசறைக்குள் நுழைவார். தமிழர் என்ற முத்திரையுடன் பிச்சபாத்திரமேந்தி ஆண்டி வேடத்தில் தேர்தல் திருவிழாவின் போது வலம் வருவார்.

சரி, எமது எதிர்ப்பார்ப்புக்கள் நிறைவேறட்டும். சரிநிகராக தொடர்ந்தும் இருப்பின் தயக்கமென்ன, நாம் என்றும் உங்கள் பக்கமே!

*கேகாலை மலர்*
*கேகாலை*

## பக்கச் சார்பற்றது தான்!

சரிநிகர் 114ம், 115ம் இதழ்களில் வெளியான "தேவை: அறிவுபூர்வமான நடவடிக்கை" என்ற எம்.எம். நூறுல்ஹக் என்பவரின் கட்டுரையையும், இதழ் 115ல் வெளியான ஏயெம்மே நிஸாம் என்பவரின் "சிதைந்த நம்பிக்கை" என்ற கட்டுரையையும் கண்ணுற்றேன். உண்மையில் இதுவரை சரிநிகர் ஒரு புலிப்பத்திரிகை என்ற எனது கணிப்பீடு பொய்த்து விட்டதையும், சரிநிகர் ஒரு பக்கச்சார்பற்ற பத்திரிகை என்பதையும் முழுமனதாக ஏற்றுக் கொள்கின்றேன்.

முஸ்லிம்கள்; தமிழர்களின் விரோதிகளல்ல என்பதையும், தமிழர், முஸ்லிம்களின் உறவில் தற்போது ஏற்பட்டுள்ள விரிசல்களுக்கு காரணகர்த்தாக்கள் யார் என்பதையும் குறித்த இரு கட்டுரைகளும் நன்கு புடம் போட்டுக் காட்டியுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒத்திசைவு இல்லாமல் எப்படி இந் நாட்டில் புரையோடிப் போயிருக்கும் பிரச்சினையைத் தீர்க்க முடியாதோ அதேபோல முஸ்லிம் காங்கிரசின் ஒத்துழைப்பு இல்லாமல் தமிழர் முஸ்லிம்களின் உறவை எவ்வழிகளிலும் மேம்படுத்த முடியாது என்பதையும் கருத்தி ல் கொள்ள வேண்டும்.

*எம்.எல்.எம். பாரிஸ்*
*கல்முனை*

7→

## தேசிய....

தேசியத்தை அடிப்படையாக வைத்தே நடந்த வரலாறுகளை எப்படி மறுக்கமுடியும். மெக்சிக்கோ, சீனா, கியூபா, வியட்நாம் போன்ற நாடுகளை உதாரணங்களாகக் கொள்ளலாம். எல்லா நவீன வரலாறுகளிலும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், தேசியவிடுதலைப் போராட்டத்தில் வேர் விட்டே பெறப்பட்டிருக்கிறது அல்லது ஒரு தேசிய அடையாளத்தை (National Identity) பாதுகாக்கும் போராட்டத்திலேயே பெறப்பட்டுள்ளது.

சோசலிசத்தில் 1919இலும் 1941 இலும் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு போராட்டத்தினூடே போல்ஷிவிக்கட்சி, மக்கள் ஆதரவை பெருமளவில் பெற்றது. தேசியத்தினூடாகத்தான் சோவியத் சோசலிச குடியரசை ஒவ்வொரு யான உந்துசக்தியாக தேசியம் திகழும்போது அதை மத்தியப் படுத்தாத ஆராய்வுகளால் நீண்ட தூரம் செல்லமுடியாது என்பதே உண்மை.

கூட்டத்திலும் போல்ஷிவிக் கட்சியினால் பலப்படுத்த முடிந்தது. இங்கு பிரதான காரணி தேசியமே.

கிழக்கைரோப்பிய எல்லா சோசலிச அரசுகளும் ரஷ்யப் பெருந் தேசியவாதத்தின் அடிப்படையில் அமைந்ததை எப்படி மறுக்கமுடியும். சீனாவின் சோசலிசப் புரட்சி, அகிலங்களின் (Internationaly) துணையின்றி, அதை விட மூன்றாவது அகிலத்திற்கு எதிராகவே பெறப்பட்டது. இப்படியாக உலக ரீதியான அரசியல் மாற்றத்தின் உண்மை ○

## மலைநாட்டுக் காந்தியை மறந்தது ஏன்?

இலங்கை - இந்திய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய ஸ்தாபனங்களின் தலைவராகவும், முன்னாள் நாவலப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும் அரசியல் தொழிற்சங்க தலைவராகவும் திகழ்ந்து "மலைநாட்டுக்காந்தி" என்று புகழ் பெற்றவர் அமரர் கே.ராஜலிங்கம் அவர்கள். அவரது 34வது மறைவு தினம் 11 - 2- 1997 இல் ஆகும். இந்நேரத்தில் அவரது சிறப்பான சேவையை நினைவு கூர்வது அவசியமாகும்.

மலையக மக்களின் உயர்வுக்கு உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்து மாடமாளிகை வசிப்பிடம், வங்கி கணக்கு, மனைவி மக்கள் ஏதுமின்றி உண்மையில் காந்தீய முறையில் போராட்டங்கள் பல நடத்திய அகிம்சைவாதியாக திகழ்ந்தவர்.

இன்று அவரது ஞாபகச் சின்னமாக திகழ்வது அவர் நிறுவிய புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயம் மட்டுமே. அவர் மறைந்து 34 வருடங்கள் ஆகிறது. இந்நேரத்தில் அவர் பெயர் இ.தொ.காவினால் மறக்கப்பட்டது பெரும் கவலையைத் தருகிறது. அவர் ஆற்றிய பெரும் பணியின் காரணமாகவே இன்று இ.தொ.கா பெரும் தொழிற்சங்கமாக விளங்குகிறது.

ஆனால் அந்த ஸ்தாபனம் அவரை நினைவு கூராதது கவலை தருகிறது. அவரின் உடைந்த கல்லறை திருத்தப்படாமலேயே உள்ளது. அதைச் சுற்றி தேயிலைக் கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன. அவரது வாழ்க்கை வரலாற்றையாவது இ.தொ.கா. ஒரு புத்தகமாக வெளியிடலாம். அல்லது அவர் நிறுவிய சரஸ்வதி வித்தியாலயத்தை ராஜலிங்கம் மகாவித்தியாலயம் என்று பெயர் சூட்டி அஞ்சலி செய்யலாம். இவை எவற்றையும் செய்யாமல் இ.தொ.கா. காலம் கடத்துவது ஏன்?

மறைந்த மலைநாட்டுக்காந்தி கே.ராஜலிங்கம் அவர்களின் சிறப்பான சேவையை மலையக மக்கள் மறந்து விடவில்லை. ஆனால் அவர் கட்டியெழுப்பிய இ.தொ.கா. மறந்தே விட்டது.

*எஸ்.ரி.ரகுவரன்*
*நாவலப்பிட்டி*

16→

## நெருப்பு....

இரண்டு நாட்களுக்குப் பின் அகதிகள் முகாமில் தங்கையைச் சந்திக்கிறேன். பீதியும் நம்பிக்கையின்மையும் நிறைந்து உயிரைக் கையிலேபிடித்துக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான அபலைகளின் ஈனக்குரல்களின் மத்தியில் இருவரும் சந்திக்கிறோம். அழுது அழுது காய்ந்து அழுக்கேறிப் போயிருக்கும் முகம்; தாவணி கிழிந்து கந்தலாகிப் போயிருக்கிறது.

அப்பாவை நினைத்து இருவரும் கண்ணீர் சிந்துகிறோம். ஒருவரோடொருவர் பேசாமலே விக்கி விக்கி அழுகிறோம். பின்னர் அந்தத் துயரை கணப்பொழுது மறந்து கிழவர் முரடர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தையும், பிறகு என்னைக் காப்பாற்ற ஓடிப்போனதையும் தேம்பித் தேம்பி சொல்லுகிறாள். அம்மேயைப் பற்றி விசாரிக்கிறாள். அம்மேயைப் பற்றி விசாரித்தும் என் நெஞ்சு வெடித்து விடும் போலக் கனக்கிறது "யத்துலட்ட யண்டனங் மா மறலா யண்ட!"[5] என்று அவள் ஆக்ரோஷத்தோடு கூறிய வார்த்தைகள் என் மதில் விசுவரூபம் எடுத்து ஒலிக்கின்றன. அத்துடன் 'ஆ! மகே புத்தா![6] என்று அவள் எழுப்பிய கடைசிக்குரல் என் நெஞ்சைப்பிளக்கின்றது.

- அம்மே, எங்கள் தெய்வமே! அம்மாவுக்கு கொடுத்த வாக்குத் தவறாமல், காப்பாற்றி விட்டாய். ஆனால் நீ.

- புஞ்சித் தாத்தா! எதற்காக இவ்வளவு அவரசப்பட்டு வீட்டுக்கு ஓடிப்போனாய்? என்னைக் காப்பாற்றவா? அன்றி அம்மேயைப் பார்ப்பதற்கா?

***1961***

**1'கொஸ்' - பலாக்காய், சிங்கள மக்கள் விரும்பி உண்கிற உணவு. பழுக்காத பலாச் சுளைகளை உப்புப் போட்டு அவித்துச் சோறு மாதிரியும், அதில் கறி வறுவல் முதலியனவும் சமைத்து விரும்பி உண்பார்கள்.**
**2 'கொஸ் கொலுங்' - பலாக்காயில் செய்யப்படும் வறுவல்.**
**3 'புத்தா' - மகன்.**
**4 'துவ' மகள்.**
**5 'உள்ளே போவதானால் என்னைக் கொன்று விட்டுப் போங்கள்!'**
**6 'ஆ! என் மகனே!'**

○

## போகாதே! துணை போகாதே!

சரிநிகர் இதழ் 114இல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேர்காணலை வாசிக்கக் கூடியதாக இருந்தது.

தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கான தீர்வில் ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.கட்சியினது நிலைப்பாட்டை விளக்க வந்த அவர் "இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் எல்லோருடைய ஆதரவையும் பெற்றுத் தான் நிறைவேற்ற வேண்டும் என்பது கதைப்பதற்கு இனிமையானாலும் நடைமுறைக்கு சாத்தியப்படாது" என்கிறார்.

இவ்வருட இறுதிக்குள் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை முன்வைக்க உள்ளதாக அரசு கூறி வருகிறது. இவ்வாறு அரசு முன்வைக்குமிடத்து அதில் தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதிக்கும் விடயங்கள் இருக்குமாயின் நிச்சயம் தமிழ் கட்சிகள், ஏன் டக்ளஸும் கூட இதற்கான எதிர்ப்பைத் தெரிவித்துத் தானாக வேண்டும். அவ்வேளையில் டக்ளஸ் அவர்கள் தற்போது நேர்காணலில் கூறிய அதே வார்த்தைகளையே அரசு தரப்பும் கூறி அதாவது எல்லோருடைய சம்மதத்தையும் பெற்று இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று கூறுமிடத்து டக்ளஸ் என்ன செய்யப்போகிறார்?

தமிழ் கட்சிகளிடம் தமிழ் முஸ்லிம் மக்கள் புதிதாக எதையும் எதிர்பார்க்காவிட்டாலும் தற்போது உள்ள சிற்சில உரிமைகள் பறிபோவதற்கு துணையாக இல்லாமலிருந்தாலே போதும் என்று நினைக்கிறார்கள்.

*மு. கருணாகரன்*
*எட்டியாந்தோட்டை*

○

9→

## தம்பி....

ளுக்கு, வீடுவாசல்களுக்குப் போய் வர, விரும்பினால் வசிக்கிற மீற முடியாத உரிமையை நீங்களும் மதித்து நடப்பீர்கள் என்பதை உறுதிப் படுத்துங்கள்.

3. வடகிழக்கு மாகாணங்களில் தங்களது முழு அல்லது பகுதி கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற பகுதிகளில் முஸ்லிம் மக்களது அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை உரியவர்கள் அல்லது உரியவர்களது அனுமதி பெற்றவர்கள் மட்டுமே ஆண்டு அனுபவிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துங்கள்.

4.கிழக்கு மாகாண முஸ்லிம் கிராமத் தலைவர்களுடன் முரண்பாடிருந்தால் பேசித்தீருங்கள். முஸ்லிம் கிராமங்களுக்கு ஷெல் அடிப்பது போன்ற பயங்கரவாதச் செயற்பாடுகளை உடனே கைவிடுங்கள்.

யாழ்ப்பாணம் மன்னார் அரசாங்க அதிபர்களும் தத்தம் பகுதியில் இத்தகைய அநீதிகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

இறுதியாக முஸ்லிம் தேசிய சக்திகளுக்கு ஒரு வேண்டுகோள். விடுதலைப் புலிகளுடனான போராட்டத்தில் சிங்கள இராணுவத்தினரோ ஊர்காவல் படையினரோ கொல்லப்படுவதற்கு பதிலாக அப்பாவித் தமிழ் மக்களைப் பிடித்து படுகொலை செய்கிற காட்டு மிராண்டித் தனத்தை சிங்கள இனவாதிகளே கைவிட்டு நெடுங்காலமாகிறது என்ற விடயத்தை தயவு செய்து காலம் தாழ்த்தியாவது கவனத்துக்கு எடுங்கள். ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA.

## இரு வாரங்களில்

**பெப்.3**

கிருஷாந்தி கொலை வழக்கு விசாரணை மே மாதம் 12ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதுடன் தடயப் பொருட்களை அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்ப மன்று அனுமதித்தது.

**பெப்.4**

-49வது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

-'எடிபல இராணுவ நடவடிக்கை வவுனியா-மன்னார் வீதியில் ஆரம்பமானது.

**பெப்.7**

-சித்தாண்டியில் மகிழடிப்பாலம் படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

-மட்டு-கிரானில் பொறிவெடியில் சிக்கி யோ.நிர்மலா (வயது-15) யோ.கங்கேஸ்வரி (வயது-12-ஆண்டு 4 மாணவி) இரு சகோதரிகள் காயம்.

-வவுனியா நகர் மீது புலிகள் நடத்திய நீண்ட தூர வீச்சு பீரங்கிக் குண்டுத் தாக்குதலுக்கு இரு பொலிஸார் பலி. நால்வர் படுகாயம்.

**பெப்.9**

-வன்னி இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து 800 பேருக்கும் அதிகமானோர் அகதிகளாக மடு கோவில் பகுதியில் தஞ்சம்.

-சைப்பரஸ்ஸில் பதிவு செய்யப்பட்ட 'கரிபியன் குயின்" என்ற கப்பல் முல்லைத்தீவு கடலில் வைத்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

-மட்டக்களப்பிலிருந்து வந்த 'பவுசர்" ஒன்று கறுவாக்கேணியில் இனந்தெரியாதோரால் வழிமறிக்கப்பட்டு 4 பேர் வெட்டப்பட்டதில் மூவர் மரணம். 7 பேர் படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

-கலந்தர் லெப்பை ஜினைதீன் எனும் ஊர்காவல் படையினன் புலிகளால் சுட்டுக்கொலை. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்புப் பகுதியில் கலவரங்கள்.

-யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் 200 பேருடன் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தொலைபேசியின் மூலம் யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொண்டு உரையாடிய பின் நடவடிக்கைகள் மேற்கொள்ள 10 நாள் அவகாசம் கேட்டார்.

-வவுனியா நகர படைத்தளம் மீது புலிகள் கடும் பீரங்கித் தாக்குதல். 6 படையினர் படுகாயம்.

**பெப்.10**

-பாலமீன்மடு துறைமுகப்பகுதியில் ஏக்கநாயக்க எனும் பொலிஸார் சுட்டுக்கொலை.

-யாழ்-புத்தூர் புலிகள்-படையினர் மோதலில் இரு படையினர் பலி.

**பெப்.11**

-இரத்தினபுரி மாவட்ட பொது ஜனஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவலவும் அவரது மெய்க்காவலரும் குருவிட்டவில் நடந்த ஐ.தே.க-பொ.ஐ.மு ஆதரவாளர்களுக்கிடையே நடந்த மோதலின் போது சுட்டுக் கொல்லப்பட்டனர்.

-மட்டக்களப்பில்-புன்னச்சோலையில் கணபதிப்பிள்ளை உதயசேகரன் (வயது-18) பொலிஸாரால் மறிக்கப்பட்டு சட்டையால் கைகள் கட்டப்பட்டுக் கொடூரமாக தாக்கப்பட்ட பின் ஆயுதங்களை வைத்திருக்குமாறு வற்புறுத்திய பொலிஸார் பின்னர் தலையில் சுட்டுக் கொன்றனர்.

-வவ்னியாவில் பொலிஸார் மீது புலிகள் வீசிய கிரனைட் தாக்குதலில் இரு பொலிஸார் படுகாயம்.

**பெப்.14**

-சிங்கள ஆணைக்குழு கொழும்பில் விசாரணையை நடத்தியது. முக்கிய பௌத்த பீடாதிபதிகள் சாட்சியமளித்தனர்.

-வவுனியா-தோணிக்கல்லில் மூன்று மின் கோபுரங்கள் குண்டு வைத்துத் தகர்ப்பு.

-ஒட்டமாவடியை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தாக்குதலால் 4வயதுக் குழந்தை உட்பட 12 குடிமக்கள் படுகாயம்.

-அம்பாறை-முகாமடை, மாந்தோட்டம் முகாம்களையும் அதனைச் சூழ உள்ள குடியிருப்புகளையும் சுற்றிவளைத்து ஆயிரம் விவசாயிகளுக்கும் மேற்பட்டவர்கள் படையினரால் விசாரணை செய்யப்பட்டதுடன், படையினரின் தாக்குதலுக்கும், சிலர் துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகியுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டனர்,

-வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இரு பொலிஸாரும், ஒரு ஊர் காவல் படையினரும் கொல்லப்பட்டதுடன் மூன்று பொலிஸாரும் காயம். பொது மக்கள் நால்வரும் காயம்.

**பெப்.15**

நாலந்த எல்லாவலவின் மரணச் சடங்குகள் நடந்தன. அதனைத் தொடர்ந்து புஞ்சிநிலமே, ரத்னதிலக்க உட்பட ஐ.தே.க.வின் ஆதரவாளர்கள் பலரது வீடுகள், சொத்துக்கள் பொ.ஐ.மு ஆதரவாளர்களால் நாசமாக்கப்பட்டதுடன் பலர் தாக்கப்பட்டனர்.

**பெப்.16**

-வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்த ஆறு சுருவாட்டுக்கடைகள் இனந்தெரியாத நபர்களால் கொழுத்தப்பட்டது.

-கல்முனை-பாண்டிருப்பு பொலிஸ் அரண்கள் மீதான புலிகளின் தாக்குதலில் இரு பொலிஸார் படுகாயம்.

-நாலந்த படுகொலையைத் தொடர்ந்து தேடப்பட்டு வந்த இரத்தினபுரி மாவட்ட எம்.பி.சுசந்த புஞ்சிநிலமே, மற்றும் முன்னாள் மேயர் மகிந்த ரத்னதிலக்க ஆகியோரில் ரத்னதிலக்க தனது வழக்கறிஞருடன் சரணடைவு.

**பெப்.17**

-நாலந்த எல்லாவலவின் படுகொலையைத் தொடர்ந்து இரத்தினபுரி, குருவிட்ட, எஹலியகொட ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட அதிகாரிகள் 55 பேர் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

-தேர்தலில் போட்டியிடும் ஜே.வி.பி வேட்பாளர்கள் அனைவர் பற்றியும் தனித்தனியான கோவைகளைத் திறக்க பொலிஸார் முடிவு.

# வவுனியா: இடமாற்றத் தரிப்பிடம்!

பாதுகாப்புக்காரணங்களுக்காக வவுனியாவில் பல்வேறு நடைமுறைகள் கையாளப்படுகின்றன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இங்கு வருபவர்களும் நாட்டின் தென் பகுதியிலிருந்து வருபவர்களும் நகரப்பகுதியின் உள்ளே நுழையும் போதே பாஸ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வவுனியாவிலிருந்து குடும்பமாக வருபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் இடம்பெயர்ந்தவர்களாகவே கருதப்படுகின்றார்கள். இவர்கள் நேரடியாக இங்குள்ள நலன்புரிநிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுவார்கள். இவர்களது அடையாள அட்டைகள் யாவும் பெறப்பட்டு இவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்படுவார்கள். யாழ் செல்பவர்கள் உரிய பதிவுகள் நடைமுறைகளின் பின்பு பஸ்வண்டிகளின் மூலம் திருகோணமலையூடாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இவ்வாறு ஒருவர் தனது பயணத்தை தொடர்வதற்கு 10 நாள் முதல்3 வாரங்கள் வரை எடுக்கின்றது. வன்னியிலிருந்து புறப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சென்றடைய இப்போது 1 1/2 தொடக்கம் 2 மாதங்கள் வரையில் எடுக்கின்றது.

இதைத்தவிர நாட்டின் தென்பகுதிக்கோ அல்லது வவுனியாவுக்கோ செல்வது என்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. 35 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட வயதுக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள் விசாரணையை தாண்டிக்குளம் தடைமுகாமில் முடிக்க வேண்டும். இதனையடுத்து குடும்பக் கோவை (Family File) ஒன்று தயார்செய்யப்பட வேண்டும். கொழும்பு அல்லது வேறிடத்துக்குச் செல்பவர்களாயின் செல்லும் இடத்து வீட்டுக்காரரது விபரங்கள் அப்பகுதி பொலிஸ் மூலமாக அறிக்கை வடிவில் பெறப்படவேண்டும். வவுனியாவில் உள்ளவர்களானால் வவுனியா பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவு பகுதியினர் அவர்கள் தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் இவ்வளவும் இழுத்தடிப்புக்கு மத்தியில் நடந்தேறி முடிந்தால் தான் நலன்புரி நிலையங்கள் என்ற பொது தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலை கிடைக்கும். இதற்கு சாதாரணமாக 2 1/2 அல்லது 3 மாதங்கள் வரையிலான காலம் எடுக்கின்றது.

இது ஒரு புறமிருக்க செல்வாக்கு மிக்கவர்களும் பணச் சக்தியுடையவர்களும் இந்த இழுத்தடிப்புகளுக்கிடையே காய்வெட்டி விஷயங்களை வென்று விடுதலையாகிச் செல்கின்ற சம்பவங்களும் நடைபெறத்தான் செய்கின்றன. மோசடிப் பேர்வழிகளிடம் காசைக் கொடுத்து விட்டு தேள் கொட்டிய திருடனின் நிலைமைக்குத் தள்ளப்பட்டவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

இதைவிட வவுனியாவுக்குள் வந்த பின் வதிவிடபாஸ் பெறுவதற்காக அல்லல்படுவோரின் அவல நிலை இதைவிட மோசமாக உள்ளது. சில வெளிநாடுகளில் விசா காலாவதியாகியதும் அயலில் உள்ள ஒரு நாட்டினுள் சென்று வந்து புதுப்பிக்கும் அதே தந்திர முறையை இங்கும் கையாளவேண்டிய கட்டாய நிலை பலருக்கு ஏற்பட்டுள்ளது.

கொழும்புக்குச் சென்று வந்து 7 நாட்களுக்குரிய வதிவிட பாஸ் பெற்று சீவியம் நடத்துபவர்கள் பலர். முன்பு வவுனியாவினுள் வரும் ஒருவருக்கு 7 நாள் பாஸ் தரப்பட்டது. குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அது 14 நாட்களாகவும் பின்னர் ஒரு மாதமாகவும் அதன் பின்னர் 3 மாதமாகவும் நீடிக்கப்பட்டது. இந்த நடைமுறை இப்போது பல கெடுபிடிகள் அலைக்கழிப்புக்கள் கொண்டதாகவே உள்ளது.

இந்த பாஸ் வழங்குவதற்கு வவுனியா செயலக வளவில் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு அலுவலகம் (Police Public Relationship Office) என்ற ஒன்று செயற்பட்டு வருகின்றது.

இது உண்மையிலேயே பொலிஸ் பொதுமக்கள் 'வல்லுறவு' அலுவலகமாகவே இயங்கி வருவதாகவே பலரும் கூறுகின்றார்கள். காலவரையறை நீடிக்கப்பட்டு புதிதாக பாஸ் பெறுவதற்கு இங்கு செல்பவர்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்கள் மன உளைச்சல்கள் சிரமங்கள் என்பவற்றை எழுத்தில் வடிப்பது இலகுவான காரியமல்ல.

எந்த ஒரு நடைமுறையும் ஓர் ஒழுங்கின்படி கடைப்பிடிக்கப்படுவதில்லை. கால நீடிப்புப் பெற வேண்டியவர்கள் (3 மாத காலத்திற்குரிய பாஸ்) பொலிஸ் அத்தியட்சகரிடமிருந்து சிபார்சு பெற்று வரவேண்டும். எல்லா ஆவணங்களும் சரியாக இருந்து அவர் ''சிபாரிசு செய்கிறேன்'' என எழுதி இருந்தால்கூட அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

''பாஸ் வழங்கலாம்'' என்ற உத்தரவை எழுதிப் பெற்றுவருமாறு இந்த பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு அலுவகத்தினர் திருப்பி அனுப்பி விடுவார்கள். மொத்தில் ஆடத்தெரியாதவனுக்கு மேடை கோணல் என்ற கதை தான். அடிக்கடி கொழும்பு செல்பவர்களுக்கு 3 மாத பாஸ் இருந்தால் ''பிரயாண பாஸ்'' வேறாகப்பெறத்தேவையில்லை. இதனைப் பெறுவதற்கு முயற்சிப்பவர்கள் படும்பாடு சொல்லி முடியாது. அவ்வாறு பெற்றுவிட்டாலும் அந்த பாஸின் மீது ''வவுனியா மட்டும்'' என்று பொறிக்கப்படுகின்ற வாசகத்தை நீக்குவதற்காக மீண்டும் அலையவேண்டும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக பொலிஸ் உயரதிகாரிகள் பொது மக்களிடமிருந்து விலகி தூரத்தில் இருக்கின்றார்கள். ஆனால் பல வேறு வகையான ''பாஸ்''களையும் வழங்குவதற்குரிய அனுமதி பெறுவதற்கு பொலிஸ் அத்தியட்சகரிடம் தான் போய் வரவேண்டும்.

வீபரிதமான இநத முரண்பட்ட நடைமுறைகளுக்குப் பின்னால் பொது மக்கள் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல.

பொலிஸ் அத்தியட்சகரது அலுவலகத்தின் முன் காலை முதல் மாலை வரை தினசரி நூற்றுக்கணக்கானவர்கள் காத்துக்கிடப்பது மிகவும் சாதாரண காட்சியாகியுள்ளது. அதுபிழை இது பிழை எனத் திருப்பி அனுப்பியவர்கள் மீண்டும் வந்து அலைந்து மனங்களைத்து திட்டித் தீர்ப்பதும் வழமையாகி விட்டது. மொத்தத்தில் வவுனியாவினுள் வருபவர்கள் நாய் அலைச்சல் பேய் அலைச்சல் அலைந்து கொண்டிருக்கின்றார்கள். அனைத்துமே பாதுகாப்பு என்ற போர்வையினுள்ளேயே நடைபெறுகின்றது.

-தம்புதிருநாவுக்கரசு

# வவுனியா: புலிகளின் எறிகணைகள்!

புலிகள் ஏவுகின்ற எறிகணைகள் வவுனியாவின் ஸ்திரமான சுமுக நிலைமைகளுக்குப் பெரும் அச்சுறுத்தல்களாகியுள்ளன. வவுனியா நகரில் உள்ள படைமுகாமை இலக்கு வைத்து அவை வந்த போதிலும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் பீதி ஒன்று எழுந்துள்ளது.

பொதுமக்கள் தமது பாதுகாப்பிற்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ததாகத் தெரியவில்லை. அத்துடன் இதற்குத் தேவையான வழிகாட்டல்கள் அல்லது அறிவுரைகள் எதுவும் எவராலும் வழங்கப்பட்டதாகவும் இல்லை.

இந்த நிலைமையில் பொலிசாரும் படையினரும் தமது பாதுகாப்புகளைப் பலவழிகளிலும் பலப்படுத்தி வருகின்றனர். இதற்காக வவுனியா - ஹொரவப்பொத்தான வீதியின் ஆறாம் கட்டைப் பகுதியில் உள்ள தேக்கங் காட்டிலிருந்து பாரியளவிலான மரங்கள் கடந்த இரண்டு வாரங்களாக வெட்டி வீழ்த்தப்படுகின்றன. அளவான துண்டுகளாக நறுக்கப்பட்டு இந்தமரங்கள் லொறிகளில் ஏற்றிச் செல்லப்படுவதைக் காண்கின்ற பொது மக்கள் மௌனமாகப் பெருமூச்சு விடுகின்றார்கள். பிரதேசப்பற்று மிக்கவர்களும் இயற்கை வளத்தின் அருமை தெரியாதவர்களும் என்ன சொல்வது யாரிடம் முறையிடுவது எனத் தெரியாமல் திகைப்படைந்துள்ளனர்.

தேக்குமரங்களைத் தறித்து வீழ்த்தும் பணி வவுனியா - மன்னார் வீதியிலுள்ள சாளம்பைக்குளம் பகுதியிலும் நடைபெற்று வருகின்றன.

இங்குள்ள தேக்கங் காட்டுப்பகுதியில் ஒருமுனையிலிருந்து சீரான முறையில் மரந்தறிப்பு வேலைகள் பொலிசாரினால் மேற்கொள்ளப் படுகின்றன. தமது துவக்குகளோடு வேலையில் ஈடுபட்டுள்ள இவர்களது கைங்கரியம் குறித்து வவுனியா பிராந்திய வனபரிபாலன அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்கள். இது ஒரு சட்ட விரோதமான காரியம் என அவர்கள் வலியுறுத்திச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஆயினும் இது குறித்து எவரும் அலட்டிக் கொண்டதாகவோ, கண்டு கொண்டதாகவோ இல்லை.

இந்த நிலையில் இவ்வாறான ஒதுக்கப்பட்ட அரச காணிகளின் தேக்குமரங்களுக்கு நேர்ந்துள்ள கதிபற்றி வனவள உயரதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த உயரதிகாரிகளில் ஒருவர் வவுனியாவுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்த்துச் சென்றார். ஆயினும் பலன்கள் எதுவும் ஏற்படவில்லை.

யுத்தநிலைமைகளைச் சாட்டி பாதுகாப்புக் காரணத்தை முன்வைத்து நாட்டின் பொதுச்சொத்தாகிய இத்தேக்குமரங்களை யாருடைய உத்தரவின் பேரில் தறிக்கிறார்கள் என்பது எவருக்குமே தெரியாது.

நம்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்